221140

Q23:38.2111
N58
221140

W

OF

# PARVATHI AND OTHE

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
8 - MAR 1927
MADRAS

BY

A. APPAN IYENGAR

With an introduction by

E. K. NATESA SARMA,
*Vidwan,*
*Senior Tamil Pandit, S.A.V. High School,*
*Tuticorin.*

S. R. SUBRAMANIA PILLAI,
Book-Seller & Publisher,
TINNEVELLY :: JUNCTION.

*All Rights Reserved*] 1927. [Price As. 6.

Donated by R. RAMA CHANDRAN
VILLIVAKKAM.
PH. 6262171
12.12.2k

உ

இறைவன் துணை

ஸ்ரீ சென்னை மல்லீச்சுரர்

ஸ்ரீ சென்னை கேசவப் பெருமாள்

# திருக்கோயில்களின் வரலாறு

A
572
2000

ஆசிரியர் :

குகஸ்ரீ ரஸபதி

சிறப்புரை :

சென்னை அறநிலயப் பாதுகாப்பு ஆணையாளர்

உயர்திரு. A. உத்தண்டராமன் பிள்ளை,

B.A., B.L., I.A.S., அவர்கள்.

மணலி. இராமகிருஷ்ண முதலியார், B.A.,

ஷை தேவஸ்தான பரம்பரைத் தருமகர்த்தர்.

வெளியீடு :

ஷை தேவஸ்தானம்

L. P. கந்தசாமிப் பிள்ளை,

ஷை தேவஸ்தான மானேஜர்.

1958

முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1958

Q23:38.2111
N58

221140

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14.

B

## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| சிறப்புரை ... | v |
| முன்னுரை ... | xi |
| வேண்டுகோள் ... | xiv |
| சென்னை ஸ்ரீ கேசவப்பெருமாள் திருக்கோயில் ... | 1 |
| சென்னை மல்லீசுரர் திருக்கோயில் ... | 42 |
| ஆதியில் இக்கோயில்கள் அமைந்த வரலாறு.. | 62 |
| ஆலயம் அமைத்த முத்துகிருஷ்ண முதலியார் வரலாறு ... | 74 |
| அடுத்து நிர்வகித்தோர் ... | 78 |
| தேவஸ்தான வருமானங்களின் விவரம் ... | 90 |
| தேவஸ்தானத்தில் உள்ள சொத்துக்களிலிருந்து கோயில் நிர்வாகிகள் நடத்திவரும் திருவிழாக்கள் ... | 92 |
| வேறு அறங்களிலிருந்து நடைபெறும் உற்சவாதிகள் ... | 94 |
| ஸ்ரீ சென்னை கேசவப்பெருமாள் ஸந்நிதியில் நடக்கும் வருட உற்சவங்களின் விவரம்... | 98 |
| ஸ்ரீ சென்னை மல்லீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் வருடாந்திர உற்சவ விசேஷங்கள் ... | 107 |

உ

திருவருள் துணை

# சிறப்புரை

'ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே' —திருமந்திரம்

மனிதன் மனிதனாக வாழ வழி வகுப்பது சமயம். சைவமும் வைணவமும், இந்து சமயமென வழங்கும் வைதிக சமயத்துக்கு இரு கண்கள் போன்றவை. இறை உயிர் தளை என்னும் முப் பொருள் உண்மையை அடிப்படையாகக் கொண்டு, 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும் நின் அருட்கருணை' வேண்டுமென்ற கொள்கையை யுடையவை. நாயன்மார்களும் ஆழ்வார்களும், வேற்றுமை போல் தோன்றும் இவ்விரு பிரிவு களிலுமுள்ள ஒற்றுமையை வற்புறுத்தி யுள்ளனர்.

இறைமைத் தத்துவம் அறிவு ஆற்றலாக, அன்பு அருளாக விளங்குவதை, அர்த்த நாரீஸ்வராக அம்மையப்ப ருருவிலும், திருவாழ் மார்பனாக மகாவிஷ்ணு உருவிலும் காண்கிறோம். அரியலால் தேவியில்லை என்பது அப்பர் திருவாக்கு. மாலிடங் கொண்டானென்பர் சிவபிரானை. 'பிறைதங்கு சடையானை வலம் வைத்தான்' என்கிறார் திருமங்கை யாழ்வார். சங்கரன் கோவிலில் சங்கர நாராயணர் திருவுருவம் அழகாக அமைந் திருக்கிறது; ஆடித் தபசு உற்சவத்தில் இறைவன் சங்கர நாராயணர் கோலத்தில் காட்சி யளிக்கிறார்.

உலகத்திலுள்ள சக்திகள் அனைத்தும் ஒரே மூல சக்தி யின் பல்வேறு தோற்றங்களே என்று விஞ்ஞானம் காண்கிற

உண்மை மெய்ஞ்ஞானிகளுக்கு முன்பே தெரியும். அசையும் சக்தி அசைவற்ற நிலை என்ற இரு தத்துவங்களையே ஆனந்தத் தாண்டவ மூர்த்தியும், ஆனந்த மயமாய் அறிதுயில் கொண்டுள்ள அரங்கநாத வடிவமும் காட்டுகின்றன.

தங்கள் தங்கள் அறிவுக்கேற்ப இறைவனின் உருவத்தைத் தம் விதி வழிப்படி ஏற்று வழிபட்டு, உயிருக்கு உறுதி தேடிக் கொள்வர் என்ற உண்மையை நம்மாழ்வார் அழகாகப் பாடுகிறார்.

'அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.'

சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியாரும்,

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர்'

என்றார். அப்பர் சுவாமிகளும்,

'ஆரொருவர் உள்குவா ருள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்'

என்றார்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'

என்பது திருமூலர் திருமந்திரம்.

'அறிந்தோ அறியாமலோ ஒருவன் செய்யும்
வழிபாடுகள் என்னையே சாரும்'

என்றார் கண்ணபிரான் கீதையில். விஷ்ணு சிவமூர்த்தியின் திருமேனியில் கலந்த திருவுரு கேசவார்த்தம் என்பர்.

திருக்கச்சி மேற்றளியில் 'மகாவிஷ்ணுவே சிவலிங்கமானார்' என்பர். திருக்குற்றாலத்தில் அகத்தியர் விஷ்ணு உரு



வத்தையே குறுகுறு குற்றாலம் என்று சொல்லிக் குற்றாலலிங்கமாக்கினார் என்பது தலபுராண வரலாறு.

கடவுள் என்ற சொல்லே எல்லா தத்துவங்களையும் கடந்த பரம்பொருளைக் குறிக்கும்; எல்லாவற்றையும் உள் நின்று கடவி இயக்குகின்ற சக்தியென்றும் பொருள்படும். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு நிறைந்து வியாபகமா யிருப்பதோடு, தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்ட கோடி யெல்லாம் தங்கும்படிக் கிச்சை வைத்து உயிர்க் குயிராய் நின்று ஆட்டிவைப்பதும் ஒரே பரம்பொருளே.

ஆதலா லன்றோ,

'தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி'

என்றார் மாணிக்க வாசகர்.

'அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்'

என்றார் ஔவைப் பிராட்டியும்.

தேவார திருவாசகங்களில் இறைவனைக் குறிக்கும் சொற்களெல்லாம் மூவர்க்கும் முதல்வனான பரம்பொருளையே குறிக்கும்.

'மூவராலும் அறிஒணா முதல்ஆய ஆனந்த மூர்த்தியான்'

'மூவா முதலாய் நின்ற முதல்வா'

'படைப்போற் படைக்கும் பழையோன் ; படைத்தவை
காப்போற் காக்கும் கடவுள் ;
காப்பவை காப்போன் ; கரப்பவை
கருதாக் கருத்துடைக் கடவுள்'

என்பது திருவாசகம்.

'தான்அயன் மாலாகி நின்றான் தனித்துலகில்
தான் அயன் மாலாய தன்மையான்'

என்பது சிவபெருமான் அந்தாதி.

அதே போன்று திவ்யப் பிரபந்தங்களிலும் மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட மூலப்பொருளையே மகாவிஷ்ணுவாகக் காண்கிறோம்.

'ஆன் அயனென உலகழித்து அமைத்துளனே' என்றும்,
'சிவனாய் அயனாய் பிரம பரம்பரன் சிவபிரான் அவனே'
'முக்கட் பிரான் பிரம பெருமானவன் நீ' என்றும்,
'பூத்தண் துழாய் முடியாய்
புனைகொன்றையஞ் செஞ்சடையாய்
வாய்த்த என் நான்முகனே' என்றும்,
'மாயோனை முக்கண் அம்மானை நான்முகனை அமர்த்தேனே'

என்றும்,

'என்மலைமகள் கூறன் றன்னை' என்றும்,
'கடிகமழ் கொன்றைச் சடையனே என்னும்' என்றும்,
'முனியே நான்முகனே முக்கண்ணப்பா'

என்றும் நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியில் பல இடங்களில் பார்க்கிறோம்.

நம் நாட்டில் பல இடங்களில் சிவவிஷ்ணு ஆலயங்களில் இரு உருவங்களும் அமைக்கப் பெற்றிருக்கக் காண்கிறோம். அவற்றுள் சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், விருத்தாசலம், சிக்கல், திருநெல்வேலி, திருச்செந்தூர், திருக்குற்றாலம், ஆத்தூர், திருக்குறுங்குடி, திருக்கோஷ்டியூர், திரு உத்தரகோசமங்கை, இராமேச்சுரம், உத்தமர் கோயில், கொடுமுடி, திருவித்துவக்கோடு, சுசிந்தரம், திருப்பரங் குன்றம், திருநாவலூர், திருவெண்காடு, திருச்செங்கோடு, திருநணா, திருவக்



கரை, அம்மைய நாயக்கனூர் முதலியன குறிப்பிடத் தக்கவை. சங்கரன் கோவிலில் சங்கர நாராயண உருவம் மூலவரும் உற்சவரும் அழகா யமைந்துள்ளன. திருவயிந்திரபுரத்தி லிருக்கும் தேவநாதப் பெருமான் முக்கண், ஜடாமுடி, சங்கு சக்கரம், பத்மத்துடன் மூவுருவும் ஓருருவாய்க் காட்சி யளிக்கிறார்.

எல்லாச் சிவாலயங்களிலும் மகாலக்ஷ்மிக்குத் தனியிடமுண்டு. இவ்வாறு சைவ வைணவ ஒற்றுமையைச் சென்னை மாநகரில் சென்னை மல்லேஸ்வர சென்னை கேசவப்பெருமாள் ஆலயத்தில் காண்கிறோம். திருவான்மியூர், திருமயிலை, திருவல்லிக்கேணி, திருவொற்றியூர் போன்று, இச்சென்னை மல்லீசுரர் சென்னை கேசவப்பெருமாள் ஆலயமும் கடற்கரையில் இப்போதுள்ள உயர் நீதிமன்றக் கட்டடங்களினருகே யிருந்ததாம். அதை வெள்ளையர் இடித்ததால் மக்கள் வெகுண்டனர். மணலி முத்துக்கிருஷ்ண முதலியார் என்ற பெரியார் அக்கற்களைக் கொண்டே இப்போதுள்ள இடத்தில் கோயில் கட்டி நித்ய நைமித்ய பூஜைக்கும் வகை செய்தார் என்பது சரித்திர வரலாறு. அவர் பரம்பரையில் வந்த நற்குண சீலரான மணலி இராமகிருஷ்ண முதலியார் தற்போதைய தர்மகர்த்தராக நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வருகிறார். இளவயதிலேயே அறிவும் அன்பும் மிக்கவராய், நீதியும் நேர்மையும் அடக்கமும் ஒழுக்கமும் உடையவராய், இறைபணியிலும் மக்கட்பணியிலும் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் ஈடுபட்டுவரும் இராமகிருஷ்ண முதலியார் ஆதரவில், புலவர் தகஸ்ரீ ரசபதி யவர்களால் இனிய எளிய தமிழில் வெளியிடப் பெற்றுள்ள இத்திருக்கோயில் வரலாறு, சைவ வைணவ சமய அபிமானிகள் ஒவ்வொருவரும் படித்து இன்புறும் வகையில் அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் சைவ வைணவ சாத்திர தோத்திர ஞானம் நிரம்பப் பெற்றவர். இந்நூலில் ஆலயத்திலுள்ள இரு பகுதிகளிலும் உள்ள மூர்த்திகளின் தத்துவங்களையும், வழிபாட்டுக்குரிய முறைகளையும்,

பாடல்களையும் நன்கு தொகுத்து அமைத்துள்ளார்கள். அன்னாருக்கும் தர்மகர்த்தருக்கும் சைவ வைணவ உலகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

'ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனெனு மிவரை
ஒன்றநும் மனத்து வைத்துள்ளி நும் இருபசை யறுத்து
நன்றென நலஞ் செய்வதவனிடை நம்முடை நாளே'

'மின்போலும் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலும் காண்பார்கட்கு என்றிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றும் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது'

**வாழ்க சீரடியா ரெல்லாம்! பரவுக இறையருள் உலகமெல்லாம்!!**

அ. உத்தண்டராமன் I. A. S.

# மூன்னுரை

அண்டம் பெருங்கோயில்; பிண்டம் இளங்கோயில். அக் கோயிலுள் எழுந்தருளிய ஓம் பொருளோனை, உலகம் என்றும் உணர்கிறது.

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயமாம்
வள்ளல் பிரானுற்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே "

என்று, ஓதற்கரிய பரம்பொருளை அவ்வுலகம் ஓதி உவகையடைகிறது. தாம் பெற்ற பேற்றைப் பிறரும் பெற ஆர்வம் காட்டும் அருளாளர்களை, உலகம் என்றே பெயரிட்டு,

" உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே "

என்று அப்பெயர்க்கும் பேருரை செய்தனர் போறிஞர். அந்த அருளாளர் பொன்னடி போற்றியே பலர் பொருளாளர் ஆயினர்.

அருளாளர் ஆணையை மேற்கொண்டு, பொருளாளர் எழுப்பிய திருக்கோயில்கள், எங்கும் தமிழ் நாட்டில் இருக்கக் காண்கிறோம்.

சிறந்த தமிழ் நாட்டின் தலைநகர் சென்னை. இதன் நடு இடத்தில், இருபெருங் கோயில்கள் இருக்கின்றன. ஒன்றில் ஸ்ரீ சென்னை கேசவர்; மற்றொன்றில் ஸ்ரீ சென்னை மல்லிகேச்சுரர்.

வள்ளல் மணலி திரு முத்துக்கிருஷ்ண முதலியார் அவர்கள் 'இந்த இரு திருக் கோயில்களையும் இருநூறு ஆண்டுகட்கு கள் 'இந்த

முன் எழுப்பினர். தூயவர்களான அவர்தம் குடும்பத்தினரே தொடர்ந்து கோயில்களில் தொண்டாற்றினர்.

இன்று இவைகளின் பரம்பரை தர்மகர்த்தராக இருப்பவர், உயர்திரு மணலி S. இராமகிருஷ்ண முதலியார், B.A., அவர்கள். கல்வியும் செல்வமும், முன்னோரைப் பின்பற்றும் முதன்மையும் உடைய இவர்கள் செய்துவரும் தருமங்கள், ஏறக்குறைய நாடு முழுதும் விரவி இருக்கின்றன. ஓதும் மாணவர்கட்கு உணவளித்து,

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்று போற்றி உலகம் அவர்களைப் புகழ்கிறது. மணலி குடும்பம் நிர்வகிக்கும் இந்த இரு கோயில்களின் மானேஜர் பொறுப் பேற்ற பின், வித்தக இத் தல வரலாற்றை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழும்பியது.

இடையறாது இறைவனை எண்ணியும் பேசியும் எழுதியும் பணி செய்யும் என் அருமை நண்பர் தூஸ்ரீ ரசபதி அவர்களிடம் இது குறித்துக் கூறினேன். அவர் உடனே பொறுப் பேற்றுக் கொண்டு, எவர்க்கும் புரியும் எளிய நடையில் இதனை எழுதி உதவினர்.

மணலி வள்ளல்கள் வரலாற்றைச் சேகரிக்க, அவர்கள் மூன்று மாதங்களாக எடுத்துக்கொண்ட பாடு எவ்வளவு என்று அறிவேன்; நல்ல அம்முயற்சி இன்னும் நடைபெறுகின்றது. அவர்கட்கு என் நன்றி உரியது.

வரலாறு குறித்த வேண்டுகோள் ஒன்று, இந்நூலின் முகப்பில் இருக்கிறது. அதை நோக்கும் அறிஞர்கள் உலகம், ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

இத்தகைய நூற்கள் வெளிவர ஆர்வ முகம் காட்டி ஊக்கும் எங்கள் தலைவர், அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர் உயர்திரு. A. உத்தண்டராம் பிள்ளை, B.A., B.L., I.A.S. அவர்களது சிறப்புரை, அருமையொடு இந்நூலை அணி செய்கின்றது. என் வணக்கம் அவர்கட்கு என்றும் உரியது.



நகரின் நடுவில் எழுந்தருளி யிருந்து கருணையுடன் எவரையும் காக்கும் திருவருள், அகில உலகிற்கும் அமைதி யளிப்பதாக!

வாழ்க வையகம்!

இங்ஙனம்:

T. H. விவேகாநந்தம் பிள்ளை
தேவஸ்தான மானேஜர்

H



# வேண்டுகோள்

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

என்ற சிந்தனையை எழுப்பிய நாடு இது. சிந்தனையைச் செயலாக்கிச் சிவமானோர் பல்லோர்.

'இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க்கு அருளும் வைத்தார்'

எனத் தமிழ் மறை, அதை அன்று முதல் இன்று வரை அறிவித்துக் கொண்டே இருக்கிறது.

ஆதியி லிருந்து, இதை எங்கள் முன்னோர் அறிந்திருந்தனர். அவர்கள் அன்று செய்து வைத்த பேரறங்களை, இன்று எண்ணி மகிழ்கிறது என் மனம்.

வாழ்ந்த அவர்களது அருமை வரலாறுகள், இலை மறை காய்போல் உலகில் இருக்கின்றன.

அவைகளைத் தொகுக்க, ரசபதி யவர்கள் ஆர்வம்கொண்டு முயன்றுளர். அம் முயற்சியின் ஒரு பகுதி, இந் நூலில் உள்ள வரலாறு.

நலமான அம் முயற்சி, மேலும் நடந்து கொண்டே இருக்கிறது. ஆதார பூர்வமான வரலாற்றுக் குறிப்பை அறிந்திருக்கும் அறிஞர்கள், உவகையுடன் அதை உதவி, அன்பர் ரசபதி அவர்களின் ஆர்வத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுகிறேன்.

சென்னை,
23-7-'58

இங்ஙனம்,
மணலி — இராமகிருஷ்ண முதலியார் B. A.



ஸ்ரீ சென்னகேசவப் பெருமாள்

ஸ்ரீ

ஸ்ரீ கண்ணன் கழலிணை துணை

# சென்னை ஸ்ரீ கேசவப்பெருமாள் திருக்கோயில்

அரன் நாரணன் நாமம்; ஆன்விடை புள்ளூர்தி;
உரைநூல் மறை; உறையும் கோயில்—வரைநீர்;
கருமம் அழிப்(பு) அளிப்பு; கையது வேல் நேமி;
உருவம் எரி, கார்மேனி ஒன்று.

## தலமும் இருப்பிடமும்

அமுதினும் இனிப்பது அருந்தமிழ் நாடு. சிறந்த அதன் தலைநகர் சென்னை. எந்நாட்டு மக்கட்கும் இடம் தரும் சென்னை நகர், ஏழைகளின் இருப்பிடம்; செல்வர்க்குச் சிறப்பிடம்.

நலம் சிறந்த மாகாண ஆட்சி, இங்கிருந்தே நடைபெறுகின்றது.

துறைமுகம், சர்வகலாசாலை, பயனுள்ள உயர்தரப் பள்ளிகள், மாபெரும் நீதி மன்றங்கள், நியதியான நூல் நிலையங்கள், வியக்கத் தக்க மருத்துவ விடுதிகள், சால்புடைய பொருள் காட்சிச் சாலைகள், பொழுது போக்கிற்குரிய புனித இடங்கள், வளமார்ந்த நந்தன வனங்கள், நீந்தி விளையாடும் நீர்நிலைகள், சால்புடையார்

தங்கும் தர்ம சத்திரங்கள், சதுரப்பாடான தொழில் சாலைகள், வகையான பலதிற வர்த்தகங்கள் முதலியன எங்கும் விரவி இருக்கின்றன.

இதனால் புகை வண்டிகளிலும், பஸ்களிலும், கப்பல்களிலும், விமானங்களிலும் அமர்ந்து, நாள்தோறும் நான்கு திசைகளிலும் இருந்து வருவார் போவார் தொகைக்கு வரையறையே இல்லை.

## கோட்டை

சென்னையில் உள்ள கடற்கரை, உலகில் எங்கும் காணமுடியாத உள்ளம் கவரும் அழகை உடையது. கடற்கரை அருகில், வானம் அளாவிய கொடிபறக்கும் நாட்டின் கோட்டை இருக்கிறது.

## கோயில்கள்

அளவே இல்லாத விநாயகர் ஆலயங்கள், சிறந்து உயர்ந்த சிவாலயங்கள், குதூகலம் தரும் தேவியின் தனிக் கோயில்கள், தனிப்பெரும் சுப்ரமண்யர் தளிகள், செம்மாந்து விளங்கும் திருமாலின் சினகரங்கள், அன்பர்கள் கூடிப்பாடும் பஜனைக் கூடங்கள், கேண்மை தழுவிய சைவக் கிளைமடங்கள், பிற சமயத்தவர்களது சிறந்த வழிபாட்டுச் சேதிமங்கள் முதலியன எங்கும் நிறைந்து இருத்தலால், சென்னைமா நகரம், ஒரு இன்ப ஆஸ்திகக் கோட்டை எனப்பெறும்.

தொழுவார்தம் வினைகளைத் தொலைக்கும் திரு அண்ணாமலை நினைவில், அருணாசலேசரது உயர்ந்த ஆலயங்கள் இங்கு உண்டு. கச்சிப் பதியைக் கருதிய கனிவால், ஏகாம்பர ஈசர் கோயிலும் இங்கு இருக்கின்றது. காசி நினைவில், விஸ்வநாதர் ஆலயம் ஒன்றும் இங்கு விளங்குகின்றது. இப்படியே ஏறக்குறைய,



வடநாட்டுத் தென்னாட்டுக் கோயில்களைத் தன் அகத்து வைத்து, சிறந்த இன்பம் காண்கிறது சென்னை நகர்.

## ஒளி வெள்ளம்

நகரின் நடுவில் உள்ள மாபெரும் மாளிகைகள், சால்புடைய வர்த்தகத் தலங்கள் இவை என்பதற்குச் சான்றாகின்றன. விளங்கும் ஒளி பரப்பும் மின்சார விளக்குகளால், இரவு என்பது சென்னையில் எந்நாளும் இல்லை. அறிவு வெள்ளத்தை நாள்தோறும் அறிஞர்கள் எங்கும் சிறக்கப் பரவச் செய்வதனால், சிரவணிப்பவர்தம் இதய இருளும் ஒழிவது இயற்கை.

கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், அன்பு, செல்வம் ஆதியவற்றில், தலைமையானது இத் தலைநகரம்.

## பட்டணம் கோயில்

நகரின் நடுவில், அதன் இரு கண்கள்போல் இரண்டு கோயில்கள் இருக்கின்றன. பட்டணம் கோயில், பூக்கடைக் கோயில் என்றதும், இந்த இரு ஆலயங்கள்தான், எவர் நினைவிலும் நிற்கின்றன.

## வட மாட வீதி

நலஞ் சிறந்த இத் திருக்கோயில்களின் வடபுற மாட வீதிக்கு, பழைய பெயர் சைனா பஜார். கால வேகமும் மனோவேகமும் கலந்துள இன்றைய உலகில், அது, சுபாஷ் சந்திரபோஸ் ரோட் என்று சொல்லப் பெறுகிறது.

விசாலமான இப்பெரிய வீதியில் வைரம், பொன், வெள்ளி, அவைகளால் ஆன அணிகலன்களின் விற்பனை, காண்பார் மனத்தில் களிப்பூட்டும்.

இவ்வீதியில் உள்ள (குமர கோட்டம் என வழங்கும்) ஸ்ரீ வாணிய சிவசுப்ரமண்ய ஸ்வாமி திருக் கோயில், பேறு தருவது ; மிகப் பிரசித்தமானது.

## கிழக்கு மாட வீதி

இது, தேவராஜமுதலி வீதி எனப் பெறும். இத் தெருவில் மஞ்சள், குங்குமம், கண்ணாடி, ஜவுளி முதலிய வர்த்தகம், பொங்கும் மங்கலம் பொலிய நடைபெறும்.

## மேல் மாட வீதி

இது, நயினியப்ப நாயகர் வீதி எனப் பிரசித்த மான பெயர் பெறும். இதனில் நூல்கள், நூல்ஆடை கள், சிறந்த பட்டுச் சேலைகள், பித்தளைச் சாமான்கள் முதலியவற்றின் விற்பனை நிலையங்கள், எங்கும் விளங்க இருக்கின்றன.

கச்சியில் இருக்கும் ஸ்ரீ ஏகாம்பரேச்சுரர், இவ் வீதியில் உள்ள பெரிய திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கிறார்.

## தென் மாட வீதி

இது, இராசப்பச் செட்டித் தெரு எனப் பெறும். வர்ணம், பூட்டு, தாழ்ப்பாள், இன்னும் பலவகை இரும்பு சாமான்களின் விற்பனை, நாள்தோறும் இவ் வீதியில் நடைபெறுகின்றன.

திருப்போரூர் முருகன், இவ்வீதியில் உள்ள உலகம் மதிக்கும் ஒரு திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கிறார். இது, கந்தகோட்ட ஸ்ரீ கந்தசாமிகோயில் எனப் பெறும்.



நலம் சிறந்த இந்த நான்கு மாடவீதிகட்கு நடுவில், ஸ்ரீ சென்னை கேசவர், ஸ்ரீ சென்னை மல்லீச்சுரர் எழில் நிறைந்த திருக்கோயில்கள் இருக்கின்றன. வளர்ந்து உயர்ந்த இந்த இரு கோயில்களின் வாயில்கள், வருக ! வருக ! என்று, தூய அன்பர்களை வரவேற்பனபோல் தோன்றுகின்றன.

தேவராஜ முதலி வீதியில் இருந்து நோக்கினால், சென்னை கேசவர் இடப்புறம் ; சென்னை மல்லீச்சுரர் வலப்புறம் ; இந்த அமைப்பு, சைவ வைணவ ஆகம சம்மதம்.

## சென்னை கேசவர் கோயில் அமைப்பு

முதலில் ஸ்ரீ கேசவர் கோயிலுக்குள் நுழை கிறோம். வீதியில் இருந்து நுழை வாயில்வரை, குளு மாபெரும் அழகான மண்டபம் ஒன்று உளது. குளு குளு என்று அது, குளுமை தருகிறது. வைகுந்த வாயிலில் வந்தவர்கள், பேறான அமைதியைப் பெறுவர். புனிதமான வைகானச ஆகமம், இச் செய்தியைப் புகல்கிறது. நிமிர்ந்து உயர்ந்த இம் மண்டபம், அதை நமக்கு நினைவூட்டுகின்றது.

மண்டபத்தின் இருபுறமும், நயமான பல வர்த்த கங்கள் நடைபெறுகின்றன.

## பொய்கை

அண்டத்தையும், மூலப் பிரகிருதியையும் தாண்டினால், தில்லை மரமும், விரஜா நதியும் இருக்கும். முதன்மை அந் நதியில் மூழ்கி, அருமை மர நிழலில் அனுட்டித்து, பின், வாழ்வு தரும் வைகுந்த வாயிலுள் நுழைவர் என்று, சுருதி நுட்பமாகச் சொல்கிறது.

புனிதமான ஒரு பொய்கை, மண்டப வலப்புறத்தில் இருந்து, நேர்மைச் சுருதிசொல் செய்தியை நினைவூட்டு கின்றது.

மண்டபத்தின் இடப்புறத்தில், வாகனங்களை வைக்கும் இரு கிடங்குகள் இருக்கின்றன.

## அணிசெய் நிலயம்

அதற்கு அடுத்து இருக்கிறது, அலங்கார மண்டபம். திருவிழாக் காலத்தில், எம்பெருமான் அம் மண்டபத்தில் எழுந்தருள்வன். ஆடை அணிகளால், பெருமாளைக் கோலம் செய்து பக்தர்கள் கும்பிடுவர்.

## எம்பார்

வடக்கு நோக்கிய அம் மண்டபத்தில், எம்பார் எனும் ஆசார்யர் எழுந்தருளி இருக்கிறார்.

இவர், பெரிய திருமலை நம்பிகளின் பிள்ளை. கோவிந்த ராஜப் பெருமாள் என்ற திருநாமம் கொண்டவர். தந்தையால் உடையவர்க்குத் தானமாகத் தரப் பெற்றவர். எம்பார் எனும் திருப்பெயரை, உடையவரால் எய்தியவர். திரிதண்ட சந்யாசி. வாழ உலகிற்கு வழிகாட்டிய ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணி.

எம்பாரைச் சேவிக்கிற போதே, சிந்தனைக்குரிய இச் செய்திகள், சித்தத்தில் தோன்றிச் சிலிர்க்கின்றன. வாழிய பெரும என்று, அவரை வணங்குகிறோம். அவர்மூலம், புனித சமய நுட்பங்கள் பல புலனாகின்றன.

அதன் பின், ஆலய வாயிலுள் நுழைகிறோம். நுழைந்ததும், அருமையான இத் திருக்கோயில், ஒரே பிராகாரம் உடையது என்று அறிந்து கொள்கிறோம்.

## சக்கரத்தாழ்வார்

முதலில், கம்பீரமான கிழக்குப் பிராகாரத்தைக்
காண்கிறோம். தெற்கு நோக்கித் திரும்புகிறோம்.
தெற்குப் பிராகார ஆரம்பத்தில், வடக்கு நோக்கி
யிருக்கிறது, சக்கரத்தாழ்வார் சந்நிதி.
காணும் இரண்டாயிரம் திருக் கண்களையும்,
ஆயிரம் திருவடிகளையும் உடையவர், திருச் சக்கரத்து
ஆழ்வார். ஆதி மாதவர் திருவுளத்தை அறிந்து, இவர்
கஜேந்திரனை அன்று காத்தவர். பாரதப் போரில்
பரிதியை மறைத்து, பார்த்தனைக் காத்த பக்த சிகாமணி.
இப்படிச் சிறந்த பல பணி செய்து, எம்பெருமான்
திருக்கரத்தில் என்றும் இருப்பவர். இந்த நினைவுகள்,
இவர் முன் நமக்கு எழுகின்றன அல்லவா !

“ வடிவார் சோதி வலத்துறையும்
சுடர் ஆழியும் பல்லாண்டு ”

எனும் பாசுரத்தை, பக்தியுடன் நம் வாய் இங்குப்
பாடுகிறது.
அப்படியே வாழ்விக்கும் அவரை வலம் வரு
கிறோம்.
மேற்கு நோக்கிய எடுப்பான மடைப்பள்ளி,
முதலில் இருக்கிறது.
சக்கரத்தாழ்வார்க்குப் பின்புறத்தில், தெற்கு
நோக்கிய அழகிய சிங்கர், தகதக என்று அற்புத
தரிசனம் தருகிறார்.

## ஸ்ரீ சஞ்ஜீவி ராயர்

தெற்குப் பிராகாரத்தில், மேற்கு நோக்கி மேலும்
போகிறோம்.

ஆரம்பத்தில், மேற்கு நோக்கிய ஸ்ரீ ஆஞ்சநேயர் சந்நிதி இருக்கிறது. தகுதிபெற அவரைத் தரிசிக்கிறோம்.

கிட்கிந்தா காண்டத்தி லிருந்து, நலம் சிறந்த இராமாயணத்தை நடத்தி வைத்தவர் அல்லவா! இராமாயணச் சொற்பொழிவு நிகழும் இடந்தோறும், சிறக்க வந்து இன்றும் சிரவணிப்பவர் அல்லவா இவர் என்ற நினைவு இங்கு எழுகிறது.

ஆஞ்சநேயா! சஞ்ஜீவி ராயா! பிரபோ என்று, அவரை வாழ்த்தி நம் தலை வணங்குகிறது. ஐம்பூதங்களோடு தொடர்புகொண்ட அவரை,

"[1]அஞ்சிலே ஒன்று பெற்றான்; [2]அஞ்சிலே
ஒன்றைத் தாவி;
[3]அஞ்சிலே ஒன்று ஆறாக [4]ஆரியற்
காக ஏகி;
[5]அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்
கண்டு; அயலார் ஊரில்
[6]அஞ்சிலே ஒன்று வைத்தான்; அவன்
நம்மை அளித்துக் காப்பான்"

என்று, அவரை உணர்ந்த நம் உள்ளம் உருகுகிறது.

---

[1. அஞ்சிலே ஒன்று - வாயு. 2. அஞ்சிலே ஒன்று - கடல். 3. அஞ்சிலே ஒன்று ஆறு ஆக - ஆகாயமே வழியாக. 4. ஆரியற்காக - இராமனுக்காக. 5. அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கை - பூமி பெற்ற புதல்வியான சீதையை. 6. அஞ்சிலே ஒன்று - நெருப்பு.]



சிறிய திருவடி எனும் அவரைச் சேவித்து,

"நங்கை சனகி கைப்பிடித்த
நாத னடித்தா மரைபிடித்து
நகர்க்கு நடக்கும் வழிபிடித்து
நலமே வியபுட் பகத்தேறி
மங்கை மகிழ்கிட் கிந்தைமலை
மடவா ரினம்சே ரப்பிடித்து
வரையும் கரையும் கடந்தவன
வாசன் பரத்து வாசனிடம்
செங்கண் நெடுமால் அமுதுசெயும்
திறத்திற் பரதன் உயிர்நிறுத்தத்
தேர்க்கு முனநம் ஊர்க்கணுகித்
திரும்ப வேண்டும் எனப்பெருமான்
அங்கை மணிமோ திரம்வாங்கும்
அரசே சிற்றில் சிதையேலே!
அநகா! திரிநேத் திரவீர!
அநுமா சிற்றில் சிதையேலே!"

என்று வழுத்துகிறது நம் வாய். அதன்பின், இன்னும் சிறிது மேல் நோக்கிச் செல்கிறோம்.

## முதலாழ்வார் மூவர்

திருவார்ந்த ஐப்பசித் திருவோண நாளில், திருக்கச்சியில் உள்ள தெய்வப் பொய்கையில், அரிய பாஞ்சசன்ய அம்சமாய் அவதரித்தவர் எனும் புனிதரான பொய்கை யாழ்வாரைச் சேவித்துப் புளகாங்கிதம் கொள்கிறோம்.

சிவன் பெரியன்; திருமாலே உயர்ந்தோன் என்று பெரும் பேதம் பேசாத காலத்தில், பொய்கை யாழ்வார் இருந்தவர்.

" வண்ணம் வே(று) உடம்பொன்றாய் வானவில் அனையரே "

என்ற கொள்கையில் கைகோர்த்த காலம் அது. நிற வித்தியாசம் ஒன்றையே அன்றைய மக்கள் நினைத்த னர். சிவனார் நிறம் சிவப்பு; பரந்தாமன் திருமேனி பச்சை நிறம். பரவிய வான வில்லில், இந்த இரு நிறங் களையும் பார்க்கிறோம் அல்லவா!

" பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன்
ஒருவன் அங்கத்(து) என்றும் உளன் "

எனும் பொய்கையார் பாசுரத்தை, நாம் எண்ணாத நாள் இல்லை யல்லவா!

அவர் அவதரித்த அடுத்த தினத்தில், அமலனது தண்டாயுத அம்சமாய், தென்கடன் மல்லை எனும் மாபலி புரத்தில், அருமை யான குருக்கத்தி மலர்கள் மேல் அவதரித்த பூதத்தாழ்வார் திருவுருவைக் கண்டு பூரிக்கிறோம்.

அதற்கு அடுத்த நாளன்று, திருமயிலை கேசவப் பெருமாள் திருக்கோயிலைச் சேர்ந்த கிணற்றில், சிறந்த செவ்வல்லி மலர்மேல் திருவவதரித்த வாள்படை அம்சமான கருணையுடைய பேயாழ்வாரைக் கண்டதும், கைகுவித்து வணங்குகிறோம். இம் மூவரும், மூலவரும் உற்சவருமாக சிறக்கச் சேவை தருகின்றனர்.

" ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதயம்இவை
ஒப்பிலவாம் நாள்கள் உலகத்தீர்—எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்
தேசுடனே தோன்று சிறப்பால் "



" மற்றுள்ள ஆழ்வார் களுக்குமுன்னே வந்துதித்து
நற்றமிழால் நூல்செய்து நாட்டைஉய்த்த-பெற்றிமையோர்
என்றுமுதல் ஆழ்வார்கள் என்னும் பெயரிவர்க்கு
நின்ற(து) உலகத்தே நிகழ்ந்து "

எனும் இப் பாசுரங்கள், இம் மூவரும் முதலாழ் வார்கள் என்பதும், அவர்களது மேதகு பேரொளி மேனிகளும், நாடு வாழ அவதரித்த நலம் சிறந்த நாள் களும் இன்ன இன்ன என்று, அருமையாக நமக்கு அறிவிக்கின்றன.

மூலவரும் உற்சவருமான இம் மூவரையும், சிறக்கச் சேவை செய்கிறோம்.

பக்திப் பெருமக்களான பாகவதர்களையும், எழில் மிகுந்த அர்ச்சை அவதாரமான எம்பெருமானையும், தம் புனிதத் தலங்களிலிருந்து சேவிக்கப் புறப்பட்ட இம் மூவரும், திருக்கோவலூர்ப் பெருமானைத் தரிசித்தனர். திருமந்திரத்தை மங்களா சாசனம் செய்தனர். உருவேற்றி, இன்பங்கொண்டு வேறு வேறு இடங் களில் இருந்தனர்.

பரிதி மறைந்தது. அடர்ந்த இருள் பரவ ஆரம் பித்தது. வானம் பளீர் பளீர் என்று மின்னுகிறது. மழை பெய்யும்போல் தோன்றுகிறது. பொய்கை யாழ்வார் விரைந்தார். ஒரு பாகவதர் திருமாளிகையை அடைந்தார்.

ஐயா! இரவில் படுக்க இடம் கிடைக்குமா என்றார். வீட்டுக்கு உரியவர், இதில் ஒருவர் படுக் கலாம் என்று சொல்லி, வீட்டின் ஒடுக்கமான ரேழியை ஒழித்துக் கொடுத்தார்.

பக்த சிகாமணியான ஆழ்வார், அங்குச் சென்று படுத்தார்.

சிலீர் சிலீர் என்று, விறு விறுத்துக் காற்று வீசுகிறது. பெருமழை சிலு சிலு என்று பெய்ய ஆரம்பித்தது.

அதே சமயம் பூதத்தாழ்வார், அங்கு வந்தார்.

ஐயா! இங்குப் படுக்க இடம் கிடைக்குமா என்றார். ஒருவர் படுக்கும் இடத்தில், இருவர் இருக்க இடம் உண்டு; வாரும் என்று பொய்கையார் அவரை வரவேற்றார்.

இருவரும் சேர்ந்து இருந்தபோது, காற்றும் மழையும் வெளியே கலந்து அடிக்கின்றது. அச்சமயம் பேயாழ்வார், விரைந்து அங்கு வந்தார்.

ஐயன்மீர்! எனக்கும் சிறிது இடம் கிடைக்குமா என்றார்.

ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம். உள் எழுந்தருளும் என்று, தெருக்கதவைப் பொய்கையார் திறந்தார். இருவரும், வந்தவர்க்கு இடம் தந்தனர். இதுதான் வாழ்வாங்கு வாழும் வழி.

மழை சோ, சோ! என்று பெய்கிறது. இடையிடை, சடசட என்று மோதி இடி முழங்குகிறது. ரேழியில் நிற்கும் மூவரும், ஒருவரை ஒருவர், நீர் யார்? நீர் யார் என்று வினவி மகிழ்ந்தனர்.

வர வர, நிற்கவும் கூடாத நெருக்கம் பிறந்தது. காரணம் என்ன? தெரியவில்லையே! என்ன அதிசயம்? ஊன்றி உணர்ந்தபோது, ஸ்ரீ நீலமேக சியாமளர் தம்முள் ஒருவராக நிற்பதை அறிந்தார் பொய்கையார்.

“ வையம் தகளியா, வார்கடலே நெய்யாக,
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினன் சொல்மாலை,
இடராழி நீங்குகவே என்று ”



அகன்ற நிலப் பரப்பே அகல். கடலே நெய்.
விரிகடலில் எழும் சூரியனே விளக்கு. உதய பரிதி,
நீலமேகர் திரு ஆழியையும் நினைவுறுத்தும். பல
காலம் இப்படிப் பார்த்துப் பழகிய ஆழ்வார்,
வாயாரப் பாட்டொன்றால் இப்படி வாழ்த்தினார்.
பயனை இப் பாசுரத்தைப் பாடியதும், இருட்
டறையில் ஒளி எழுந்ததுபோல இருந்தது.
புனிதரான பூதத்தாழ்வார், அன்பை அகல்
ஆக்கினார். நெடிது உளத்தில் பொங்கும் ஆசையை
நெய்யாக்கினார். படபடக்கும் சிந்தையைத் திரியாகப்
பாவித்தார். தெளிந்த ஞானத்தைத் தீபமாக்கினார்.
பயனை இப் பாவனையில்,

“ அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா,—நன்புருகி
ஞானச் சுடர்விளக்(கு) ஏற்றினேன் நாரணற்கு,
ஞானத் தமிழ்புரிந்த நான் ”

என்று பாடினார். இருவரும் ஏற்றிய ஞான விளக்கில், கோடி கோடியாகத் தீ கொழுந்து விட்டு எழுகிறது. கால எல்லைகளைக் கடந்து படரும் அத் தெய்வ ஒளி நடுவில், ஒரு திருமேனி. இள நகை அரும்பும் திருமுகத்தில், அருமையாகப் பொங்குகிறது அழகு வெள்ளம். திருமுடியும் சங்கு சக்கரங்களும், மன்னர் மன்னன்! ஆதி மாதவன்! தேவ தேவ தேவாதி தேவன் இவன் என்பதை, அருளொடு பரிந்து அறிவிக்கின்றன. நாலாவது ஆளாக நம்மிடை நின்றவன் நாராயணன் என்பதை, பரம காருணிகரான பேயாழ்வார், அகக்கண்ணால் மகிழ்ந்து அறிகிறார்.

“ திருக்கண்டேன்! பொன்மேனி கண்டேன்! திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்!—செருக்கிளரும்

பொன் ஆழிகண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன் !
என் ஆழி வண்ணன்பால் இன்று ”

என்று அந்த அநுபவத்தை, பெருகிய அன்பொடு பாடுகிறார் பேயாழ்வார். தன் வசம் கெட்டு, பரவசப் பட்டு, ஆநந்தக் கண்ணீர் அருவியெனப் பெருக, இரவெலாம் மூவரும் இப்படிப் பாடியபடியே இருந்தனர். திவ்யப் பிரபந்தத்தில் இயற்பா எனப்பெறும் மூவரது அந்தாதிகள் மூன்றையும், இரவெலாம் கேட்டு மகிழ்ந்தான் எம்பெருமான்.

“ பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுத நன்னாடு ”

என்று இவ் வரலாற்றை, வாயாரப் பாடுகிறார் வரந்தருவார் ; இவர் வில்லிபுத்தூரார் பிள்ளை.

ஆஹா ! முதலாழ்வார்கள் மூவரையும் சென்னைக் கேசவர் கோயிலில் சேவிக்கும் போது, விறுவிறு என்று இவ் வரலாறுகள் நினைவில் எழுந்து, விம்மிதத்தைப் பெரிதும் விளைவிக்கின்றன.

செய்யதுலா ஓணத்தில் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்தோன் வாழியே
வையம் தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே
வனசமலர்க் கருவதனில் வளர்ந்த மைந்தன் வாழியே
வெய்யகதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன்முடியும் திருமுகமும் இப் பூதலத்தில் வாழியே”

என்று பொய்கை யாழ்வாரைப் போற்றுவோம்.



“ அன்பே தகளி நூறும் அருளினான் வாழியே
ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே
நன்புகழ்சேர் குருக்கத்தி நாண்மலரோன் வாழியே
நல்லதிருக் கடல்மல்லை நாதனார் வாழியே
இன்புருகு சிந்தைதிரி யிட்டபிரான் வாழியே
எழில்ஞானச் சுடர்விளக்கை யேற்றினான் வாழியே
பொன்புரையும் திருவரங்கர் புகழுரைத்தான் வாழியே
பூதத்தார் தாளிணைகள்இப் பூதலத்தில் வாழியே ”

என்று பூதத்தாழ்வாரைப் புகழ்ந்து துதிப்போம்.

“ திருக்கண்டேன் எனும் நூறும் செப்பினான் வாழியே
சிறந்த ஐப்பசியில் சதயம் சனித்த வள்ளல் வாழியே
மருக்கமழும் மயிலைநகர் வாழவந்தோன் வாழியே
மலர்க்கரிய நெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே
நெருக்கிடவே இடைகழியில் நின்றசெல்வன் வாழியே
நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே
பெருக்கமுடன் திருமழிசைப் பிரான்தொழுவோன் வாழியே
பேயாழ்வார் தாளிணைஇப் பெருநிலத்தில் வாழியே ”

எனும் வாழிப் பாசுரத்தால் பேயாழ்வாரை வாழ்த்துவோம்.

## திருமழிசையார்

இவர்களை யடுத்து, தைம் மகத்தன்று திருவாழி ஆழ்வான் அமிசமாகத் திருவவதரித்த திருமழிசை ஆழ்வாரைத் தரிசிக்கிறோம். அவ்வமயம்,

“ நடந்தகால்கள் நொந்தவோ ? நடுங்கஞாலம் ஏனமாய்
இடந்தமெய் குலுங்கவோ ? இலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்தகா விரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே !”

என்று அவர் கேசவனைப் பாடிய சந்தவிருத்தப்பாக்கள்,

வேகமொடு நமது மனத்தில் குதித்து விளையாடுகின்றன.

“அன்புடன் அந்தாதி தொண்ணூற்(று)ஆறுரைத்தான் வாழியே
அழகாரும் திருமழிசை யமர்ந்தபிரான் வாழியே
இன்பமிகு தையில்மகத்(து) இங்குதித்தான் வாழியே
எழில்சந்த விருத்தம்நூற் றிருப(து) ஈந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவர்கோன் வாழியே
முழுப்பொன்னிப் பெருக்கெதிர்செய் முதிர்கவியோன் வாழி
நன்புவி நாலாயிரத்(து) எழு நூறிருந்தான் வாழியே [யே
நங்கள் பக்தி சாரன்இரு நற்பதங்கள் வாழியே ”

என்று அவரை வழுத்துகிறது நம் வாய்.

## குலசேகரர்

அதன் பின், ஸ்ரீ குலசேகர ஆழ்வார், இதோ நானும் இருக்கிறேன் என்கிறார். இவர், மாசிப் புனர்பூசத்தன்று, கௌஸ்துப அம்சமாய்ப் பேறான அரச குலத்திற் பிறந்தார். வாழ்விக்கும் அடியார் குலத்தராய் வளர்ந்தார். சேர நாட்டு அரசராகிச் சிறந்தார். தொண்டர் குலத்திற்குத் தொண்டு செய்தார். இறுதி வரை இராமாயணத்தைச் சிரவணித்தார். கண்ணனையும் இராமனையும் கனிந்து பாடினார். பாகவதர்கள் தவறு செய்யமாட்டார்கள் ; நான் சொல்வது மெய் ; பொய்யானால், என்னைக் கடிக்கட்டும் என்று, பாம்பிருந்த குடத்துள் கை நுழைத்த பக்த சிகாமணி.

“மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்இவ்
வையந் தன்னொடும் கூடுவ(து) இல்லைநான் ;
ஐயனே அரங்கா என்(று) அழைக்கின்றேன்
மையல் கொண்(டு) ஒழிந்தேன் எம்பிரானுக்கே ”

திருவேங்கட மலைமேல் மாமாய், ஆறாய், பொய்கையில்



ஒரு மீனாய், இப்படி எப்பிறப்பு வாய்த்தாலும், ஆஹா! எவ்வளவு இன்பமாக இருக்கும் !

“செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே !
நெடியானே ! வேங்கடவா ! நின்கோயிலின் வாயில்,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்(து,) உன் பவளவாய் காண்பேனே !”

என்றுபாடி, எம்பெருமான் எழுந்தருளிய எந்தச் சந்நிதியிலும் இருக்கும் முதல்படி, குலசேகரப்படி என்று பேச இருக்கும் பெருந்தகை அல்லவா என்ற நினைவில், ஸ்ரீ குலசேகர ஆழ்வார் திருவுருவைக் கும்பிடுகிறோம்.

“அஞ்சனமா மலைப்பிறவி ஆதரித்தோன் வாழியே
அணியரங்கர் மனத்தூணை யடைந்துய்ந்தோன் வாழியே
வஞ்சி நகரந் தன்னில் வாழ வந்தோன் வாழியே
மாசிதனில் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
அஞ்சலெனக் குடப்பாம்பில் அங்கையிட்டான் வாழியே
அநவரதம் இராமகதை அருளுமவன் வாழியே
செஞ்சொல் மொழி நூறஞ்சும் செப்பினான் வாழியே
சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே ”

என்ற பாசுரங்கொண்டு அவரைப் பாடுகிறோம்.

## தொண்டரடிப்பொடி

அவர்க்கு அண்மையில், தொண்டரப்பொடி ஆழ்வார் தகவார்ந்த திருவுருவைத் தரிசிக்கிறோம்.

திருமண்டங்குடி எனும் திருப்பதியில், மார்கழி கேட்டை நாளன்று, அருமைபெற இவ்வுலகில் அவதரித்தவர். இவர் திருவாய் மலர்ந்தருளிய திருமாலையை, அறியாதார் அறியாதாரே என்று பாகவதர்

கள் என்றோ சொன்ன பழமொழி, இன்றும் நம் நினைவிற்கு வருகிறது.

“ காவலிற் புலனை வைத்துக், கலிதனைக் கடக்கப் பாய்ந்து,
காவலிட்டு உழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே ;
மூவுலகுண்(டு) உமிழ்ந்த முதல்வ ! நின்நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டாய், அரங்கமா நகருளானே !”

என வரும் அவர் பாசுரங்கள் ஒவ்வொன்றும், அது உண்மையே உண்மை யென்பதை நமக்கு உணர்த்து கின்றன அல்லவா !

“ மண்டங் குடியதனில் வாழவந்தோன் வாழியே
மார்கழியிற் கேட்டைநாள் வந்துதித்தான் வாழியே
தெண்திரைசூழ் அரங்கரையே தெய்வமென்றான் வாழியே
திருமாலை ஒன்பதஞ்சும் செப்பினான் வாழியே
பண்டு திருப்பள்ளி எழுச்சி பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவி தன்னைப் பழித்த செல்வன் வாழியே
தொண்டு செய்து துளபத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப் பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே”

என்று அவரை வாழ்த்தி, அதற்கு மேலும் செல்கிறோம்.

## திருப்பாணர்

அவரை யடுத்து, திருவத்ஸ அமிசரான திருப் பாணாழ்வாரைத் தரிசிக்கிறோம்.

உள் மனத்தால், திருவரங்கரை இடையறாது இவர் உணர்ந்தவர். நீலவானும் கடலும், எம்பெருமான் நீல மேனியை அவர்க்கு நினைவூட்டின. அந்திவானம், பீதாம் பரம்போல இருக்கிறது. மேகங்கள், அவனது இன்பக் கருணையை சிந்திக்கச் செய்தன. கமல மலர்கள், பகவானுடைய கண்களையும் திருவடிகளையும் காட்டும்



இன்ப அறிகுறிகளாக இருந்தன. எம்பெருமான் உந்திக் கமலத்தி லிருந்தே உலகம் உதித்தது என்று இனிது உணர்பவர் இவர்.

“ நீள்மதில் அரங்கத்(து) அம்மான்
கமல பாதம் வந்து என் கண்ணில் உள்ளன ஒக்கின்றதே ”

“ அரைச்—சிவந்த ஆடையின் மேல்,
சென்றதாம் என் சிந்தனையே ”

“ அயனைப் படைத்ததோர் எழில்
உந்திமேல(து) அன்றோ, அடியேன் உள்ளத்(து) இன்னுயிரே”

“ திருவயிற்று
உதர பந்தம், என் உள்ளத்துள் நின்று உலவுகின்றதே ”

“ திரு ஆரமார்பது அன்றோ, அடியேனை ஆட்கொண்டதே ”

“ முற்றும்—உண்டகண்டம் கண்டீர் !
அடியேனை உய்யக் கொண்டதே ”

“ மாயனார்
செய்யவாய் ஐயோ ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே ”

“ பெரியவாய கண்கள், என்னைப் பேதைமை செய்தனவே ”

“ கோலமாம் மணி ஆரமும்,
முத்துத்தாமமும், முடிவில்லதோர் எழில்
நீலமேனி ஐயோ ! நிறை
கொண்டது என் நெஞ்சினையே ”

“ என் அமுதினைக்
கண்ட கண்கள், மற்றொன்றினைக் காணாவே ”

என்று பாடிப் பயனடைந்த அவர் பாசுரங்கள்,
உயர்வு தர நம் உள்ளத்தில் உருளுகின்றன.
பாணர் குலத்தில் வந்த அடியேன், திருவரங்
கத்தை மிதியேன் என்ற ஆழ்வாரை, வைதிகரான

லோக சாரங்கர், வீழ்ந்து வணங்கினர். தூயரான பாணரை எடுத்தார். தோள்மேல் தாங்கினர். அறிதுயில்கொள் அம்மான் திருமுன் விடுத்தார் என்று, இவர் வரலாற்றைக் குதூகலத்தொடு கூறுகிறது குருபரம்பரை.

“ உம்பர்தொழு மெய்ஞ்ஞானத்(து) உறையூரான் வாழியே
உரோகிணி நாள் கார்த்திகையில் உதித்த வள்ளல்
வம்பவிழ்தார் முனிதோளில் வந்தபிரான் வாழியே[வாழியே
மலர்க்கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே
அம்புவியில் மதிளரங்கர் அகம் புகுந்தான் வாழியே
அமலனாதி பிரான் பத்தும் அருளினன் வாழியே
செம்பொனடி முடிபத்தும் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே ”

என்று, பாடி அவரை நம் வாய்ப் பழிச்சுகின்றது.

## திருமங்கை மன்னர்

அதை யடுத்து, அவர் பக்கத்தில், கார்த்திகைக் கிருத்திகையில் ஸ்ரீ சார்ங்க அம்ஸமாகி அவதரித்த திருமங்கை மன்னரைத் தரிசிக்கிறோம். நாலாயிரத்தில் இவர் பாசுரம் ஓராயிரம். இவர் செல்லாத பதியில்லை; பாடாத தலமில்லை; இவர் பாக்களை யுணர்ந்த எம்பார்,

“ எங்கள் கதியே! இராமானுஜ முனியே
சங்கை கெடுத்தாண்ட தவராசா!—பொங்குபுகழ்
மங்கையர்கோன் ஈந்த மறையாயிரம் அனைத்தும்
தங்குமனம் நீயெனக்குத் தா ”

என்று வித்தக உடையவரிடம் வேண்டினரெனில், திருமங்கை யாழ்வார் பிரபாவம் அதனிலிருந்து தெரிகிறது அல்லவா!



“ நெஞ்சுக்(கு) இருள்கடி தீபம்; அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்(கு) நல்ல அமுதம்; தமிழ்நன் னூல்துறைகள்
அஞ்சுக்(கு) இலக்கியம்; ஆரண சாரம்; பரசமயப்
பஞ்சுக்(கு) அனலின் பொறி, பரகாலன் பனுவல்களே ”

என்று பாகவதோத்தமர்கள், திருமங்கை மன்னர் விஷயத்தில் நெஞ்சுருகி நிற்பதெல்லாம் நம் நினைவிற்கு வருகின்றன.

“கலந்த திருக்கார்த்திகையில், கார்த்திகைவந்தோன் வாழியே
காசினியில் குறையலூர்க் காவலோன் வாழியே
நலந்திகழா யிரத்தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்தும் ஆறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழுகூற் றிருக்கையிரு மடலீந்தான் வாழியே
இம்மூன்றில் இருநூற்(று)இருபத்தேழ் ஈந்தான் வாழியே
வலந்திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாள்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே ”

என்று அவரை வாழ்த்துவம்.

முதலாழ்வார் மூவரும், திருமழிசை, குலசேகரர், தொண்டரடிப்பொடி, திருப்பாணர், திருமங்கை மன்னர் ஆகிய ஆழ்வார்கள் ஐவரும், இப்படி ஒருசேர இருப்பது கண்டு உள்ளம் நமக்கு உருகுகிறது. புனித காவிரியின் புது வெள்ளம்போல் புறப்பட்ட இவர்களுடைய பாசுரங்கள், பல தலைமுறைகளாக, ஆத்ம தாபத்தையும் தாகத்தையும் அகற்றி வருவதை அறியாதார் இல்லை.

## திருக்கச்சி நம்பிகள்

அதை யடுத்து, பூவிருந்தவல்லியில், மாசி மிருகசீரிடத்தன்று திருவவதரித்து, பேராளன் அருட்கு ஆளான திருக்கச்சி நம்பிகளைத் தரிசிக்கிறோம். இவர்,

வீரராகவ செட்டியார், கமலை எனும் தம்பதிகளின்
மைந்தராக வந்தவர். தமது செல்வத்தைப் பெரு
மாட்கே செலவிட்டவர். கச்சியில் சென்று எம்பெரு
மாற்கு ஆலவட்டக் கைங்கர்யம் செய்தவர். அத்திருப்
பணி செய்யும்போது, அம்மான் அவரிடம் அன்பு
மொழி பல அருள்வன். ஒருநாள் இரவு, சந்நிதியி
லிருந்து தம் திருமாளிகைக்குத் திரும்பும்போது, பெரு
மாள் திவட்டி பிடித்து வீடுவரை கொணர்ந்து விட்
டார் எனும் வரலாறுகள், நயம் தோன்ற மனத்தி
லெழுந்து நடமிடுகின்றன அல்லவா !

## ஸ்ரீ பட்டர்

அவரை யடுத்து ஸ்ரீ பட்டர் எழுந்தருளி யிருக்
கிறார். திருக்காஞ்சியை அடுத்த கூரம் எனும் பதியில்
உதித்த கூரத்தாழ்வார் குமாரர் இவர். வைகாசி அனு
டத்தில் வந்தவர். பராசர பட்டர் என்பது, இவர்க்கு
உடையவர் இட்ட திருநாமம். அகங்கரித்த அறிவாளி
கள் செருக்கை அடக்கியவர். ஏழாவது வயதிலேயே
வேத அத்யயனத்தில் தேறித் தெளிந்தவர். குடத்துள்
பாம்பை அடைத்து, இதனுள் இருப்பது யாது என்
ருர்க்கு, இதனுள் எம்பெருமான் வெண்கொற்றக்
குடையுளது என்றவர். உணவில் வேப்பெண்ணெயை
நெய் என்றுவிட, அதையும் களிப்புடன் உண்டு, புலன்
வென்ற தம் தன்மை அறிய நின்றவர்.

## தேசிகர்

அவரை அண்மி, புரட்டாசித் திருவோணத்தில்,
காஞ்சியில் திருவவதரித்த ஸ்ரீ வேதாந்த தேசிகர் இருக்
கிறார். இவர், அநந்த சூரிக்கும் தோதார் அம்மனுக்கும்
புதல்வராகத் தோன்றியவர். அப்புள்ளாரிடம் பல கலை
களையும் ஆய்ந்தவர். கருட மந்திரத்தைத் தியானித்துப்



பெரிய திருவடிகளைத் தரிசித்து, அவரால் அயக்ரீவ
மந்திரம் அருளப் பெற்றவர். அயக்ரீவ ஸ்தோத்திரம்,
கருட பஞ்சகம் முதலிய நூல்களைக் கண்டவர். பெருங்
கவி, தார்க்கிகச் சிங்கம் எனும் பட்டம் பெற்றவர்.
ஸ்ரீ வைஷ்ணவப் பிரபலத்திற்குக் காரணருள் ஒருவர்.
வித்யாரண்யர் வேண்ட, அரச கன்னிகையைப்
பற்றிய பொல்லாத பேயைப் போக்கியவர். பாதுகா
சஹஸ்ரம் பாடியவர். திருச்சித்ர கூடத்தில், கோபால
ராயனுல் பெருமாளைப் பிரதிட்டை செய்தவர். மணம்
செய்ய விரும்பிய ஒரு பிரமசாரியைத் திருமகள்
சந்நிதியில் நிறுத்தி, புனித அத்தேவி மூலம் பொருளை
உதவியவர். நயினர் ஆசாரியர் மடியில் திருமுடியும்,
பிரமதந்திர சுதந்தர ஜீயர் மடியில் திருவடியும் வைத்
துத் திருநாட்டிற்கு எழுந்தருளிய இவரை, வாழ்த்தி
நம் தலை வணங்குகிறது. இவருடன் தெற்குப் பிராகாரம்
நிறைவுபெறுகிறது.

## ஸ்ரீ இராமபிரான்

அருமையான மேற்குப் பிராகார ஆரம்பத்தில்,
கிழக்கு நோக்கிய சக்ரவர்த்தித் திருமகன் சந்நிதி
யிருக்கிறது. இங்கு எம்பெருமானைச் சேவிக்கும்
எவர்க்கும், இராமாயண வரலாறுகள் நினைவில்
குதித்து நிருத்தம் புரிவது இயற்கை.
ஸ்ரீ இராமபிரான், சீதா லட்சுமண பரத சத்ருக்
நர் சமேதராய், இங்கு மூலவராக எழுந்தருளியுளர்.
மூலவர்கள் திருமுன், ஸ்ரீ ராம சீதா லட்சுமண ஆஞ்ச
நேயாது உற்சவமூர்த்திகள், அருமையான சேவையை
யளிக்கின்றனர். அவர்களை ஊன்றி நோக்கி,

“ஊனில் மேய ஆவிநீ! உறக்கமோ(டு) உணர்ச்சிநீ!
ஆனில் மேய ஐந்தும்நீ! அவற்றுள் நின்ற தூய்மைநீ!

வானிேளுடு மண்ணும்நீ! வளம் கடல் பயனும்நீ!
யானும்நீ! அதன்றிஎம்பி ரானும்நீ இராமனே!"

என்று உணர்ந்து பாடி உருகுகிறது நம் உள்ளம்.

## தாயார் சந்நிதி

அவர்கட்கு அண்மையில், ஸ்ரீ செங்கமல வல்லித் தாயார் திருச்சந்நிதி இருக்கிறது. செல்வப் பெருக்கம் சிறக்கத் தருவாள்; வா! வா என்று நம்மை அருளொடு அழைப்பதுபோல இருக்கிறது, அந்த எம்பிராட்டியார் திருமுகம்.

தாயைத் தரிசிக்கும் சேயாகி, தழுதழுக்கிறது நம் உள்ளம். இவ்வமயம்,

" திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவா(று) என்கொல்?—திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநா கணைக்கிடந்த
மாலோத வண்ணர் மனம்"

எனும் பொய்கை யாழ்வார் பாசுரத்தில், நம் புத்தி போகிறது. தேவீ! ஸ்ரீ மகாலட்சுமீ! என்று வீரிட்டு உள்ளம் தாயை விளிக்கின்றது. குவிந்து கைகள் கும்பிடுகின்றன.

"எனக்குன் கடைக்கண் அருள்வாரி
யின்துளி இன்றருளில்,
உனக்கும் புகழுண்(டு;) உலகிற்கும்
நன்மையுண்(டு;) உன்கணவன்
தனக்கும் களிப்புண்டு; சத்தியமே!
என்சொல் தள்ளிவிடேல்!
கனக்கும் துணைமுலை ஓதிமம்போலும்
கமல மின்னே!"

என்று உணர்ந்து நெகிழ்ந்து உள்ளம் ஓதுகின்றது.



## வைகுந்த வாசல்

அங்கிருந்து மேலும் செல்கிறோம். இது என்ன? ஓஹோ! தெற்கு நோக்கிய வைகுந்த வாசல்; ஆம். அது அற்புதமாக அமைந்திருக்கிறது.

தகுதி யற்ற செயல் செய்தால், நியதி யற்ற நினைவு கொண்டால், வாய்மைக்கு மாறானவற்றை வாயால் வழங்கினால், எழுத்தாணியால் சித்திர குத்தர்கள் ஒன்று விடாமல் எழுதுவர். அதன்மூலம், தருமன் தரும் தண்டம் தாங்க முடியாதது. அது வேண்டா.

இங்கே வா! இப்படியே வா! ஆறிரண்டு நாமம் அணிந்து, பன்னிரு நாமங்களைப் பகர்ந்தார்க்கு, அந்த மிலா இந்த இடம் சொந்தம் என்னும் ஒரு தோற்றம், அங்கு உண்டாகின்றது.

" பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்" இது என்று

தொழுவோம்; துதிப்போம். நியதியான அதனுடன், மேற்குப் பிராகாரம் நிறைவு பெறுகிறது.

## வடக்குப் பிராகாரம்

இங்கு, கிழக்கு நோக்கிய முதன்மை சந்நிதிகள் மூன்று. முதலில்,

## வேணுகோபாலன்

" எண்ணருளி, ஏழைமை துடைத்து, எழுமெய்ஞ்ஞானக்
கண்ணருள் செய் கண்ணன்"

எனும் ஜகன்மோகன வேணுகோபாலன், ஸ்ரீ ருக்கு மணி சத்யபாமையுடன், மூலவரும் உற்சவருமாக எழுந்தருளிய சந்நிதி யிருக்கிறது. நவநீதன் எனும்

இளங்கோல வெண்ணெயுண்ட கண்ணனையும், தகுதி பெற இங்குத் தரிசிக்கிறோம்.

### ஆண்டாள்

இரண்டாவதாக, சூடிக் கொடுத்த சுடர்க்கொடி; திருப்பாவைப் பாசுரங்களைப் பாடிக் கொடுத்த பாவையான திருமிகு ஆண்டாள் எழுந்தருளிய சந்நிதி இருக்கிறது. இங்கு எவ்வளவு நேரம் நின்று சேவித்தாலும், மனம் சலிப்பதில்லை.

" திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயர்அரங்கற் கேகண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே "

என்று பரம பக்தியுடன் நம் வாய் பாடுகின்றது.

### பிள்ளை லோகாசார்யர்

மூன்றாவது சந்நிதியில் ரகஸ்யத்ரயம், தத்வத்ரயம், சார சங்கிரகம், ஸ்ரீ வசனபூஷணம் எனும் அரிய நூல்களை அருளிய பிள்ளை லோகாசார்யர் எழுந்தருளி யிருக்கிறார்.

இவர், ஐப்பசித் திருவோணத்தில் அவதரித்தவர். வடக்குத் திருவீதிப் பிள்ளை செய்த பெருந் தவத்தால் பிள்ளையானவர். அழகிய மணவாள நாயனாருடைய தமையனார். திருவனந்தபுரத்தில் திருமாலை வழிபட, இனியரான விளாஞ்சோலைப் பிள்ளையை ஏவி, அதன் பின் திருநாட்டிற்கு எழுந்தருளியவர்.



### ஸ்ரீ மணவாள மாமுனிகள்

இதே சந்நிதியில், ஐப்பசி மூல நாளில் உதித்த ஸ்ரீ மணவாள மாமுனிகளும் எழுந்தருளி யுளர். பாண்டி நாட்டில் சிக்கில் கிடாரம் என்று ஒரு கிராமம். அங்கிருந்த திருமால் மனத்த அண்ணர் என்பவருடைய பிள்ளையாய்ப் பிறந்து, அழகிய மணவாளர் எனும் பிள்ளைத் திருநாமம் பெற்றார். அரச செல்வத்தை அறவழியில் செலவிட்டார். கனந் தங்கிய மடங்கள் பல கட்டினார். முப்பத்தாறாயிரப் படி செய்தார்.

உடையவர் இடத்தில் அளவிறந்த அன்புடையார். அது காரணமாக யதிராஜ விம்சதி என்று ஒரு நூல் செய்தார். இதனால், யதீந்திரப் பிரணவர் என்ற பெயரும் பெற்றார். இவர்க்குத் திருமாலை தந்த முப்பத்தாறாயிரப் பெருக்கு, மணவாள ஜீயர், சடகோப ஜீயர், வரவரமுனி முதலிய திருநாமங்களும் உண்டு. கந்தாடை என்ற கோத்திர வகையை ஏற்படுத்திக் குதூகலித்தவர் இவர்.

" ஸ்ரீசைலேச தயாபாத்ரம்; தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரணவம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம் ||

என்று உலகப் பிரசித்தி பெற்று எவராலும் அநுஸந்திக்கப் பெறும் தனியன், ஸ்ரீ மணவாள முனிகள் அருளியது. புளியமரத்திற்கு முத்தி யளித்த புனிதர். ஆர்த்திப் பிரபந்தம் அருளியவர் என்ற செய்திகள் பல, இவரைச் சேவிக்கிற போதே பெருகி நம் சிந்தையிற் பிறக்கின்றன அல்லவா !

### நம்மாழ்வார்

வடக்குப் பிராகாரக் கீழ்க் கோடியில், எடுப்பான ஒரு கல்யாண மண்டபம் இருக்கிறது. அதனில் மேற்கு நோக்கி நம்மாழ்வார் எழுந்தருளி யிருக்கிறார்.

புனிதரான அநந்தாழ்வார், திருக்குருகூரில், ஆனி மூல நாளன்று புளியமரம் ஆயினர்.

சேனை அதிபர், வைகாசி விசாகத்தன்று, உலகை வாழ்விக்கும் நம்மாழ்வாராக வந்தார். நாலாயிரத்தில் ஓராயிரம் நம்மாழ்வார் பாசுரம்; அது திருவாய்மொழி எனப்பெறும்.

" ஆன திரு விருத்தம்நூறும் அருளினன் வாழியே
ஆசிரியம் ஏழுபாட்டும் அளித்தபிரான் வாழியே
ஈனமறஅந்தாதி எண்பத்தேழ் ஈந்தான் வாழியே
இலகுதிருவாய்மொழி ஆயிரத்தொருநூற் றிரண்டுரைத்
வானணியும் மாமாடக் குருகைமன்னன் வாழியே[தான்வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
சேனையர்கோன் அவதாரம் செய்தவள்ளல் வாழியே
திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே "

" மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே
ஆதிகுருவாய் அம்புவியில் அவதரித்தான் வாழியே
அநவரதம் சேனையர்கோன் அடிதொழுவோன் வாழியே
நாதனுக்கு நாலா யிரமுரைத்தான் வாழியே
நன்மதுர கவிவணங்கும் நாவீறன் வாழியே
மாதவன்பொன் பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே "

எனும் வாழிப் பாசுரத்தால் அவரை வாழ்த்துகிறோம்;

## மதுரகவி யாழ்வார்

அதே நேரத்தில், அவரை அடுத்து, மதுரகவி எழுந்தருளி யிருப்பதையும் அறிகிறோம்.

இவர் சித்திரைத் திங்கள் சித்திரை நாளில் உதித்தவர். வடமொழி தமிழ்மொழியில் வல்லவர். அறிவினால்



அமைதி அமையவில்லை. உள்ளத்தில் ஒளி பிறக்க இது தான் வழி என்று, சிறக்கத் தல யாத்திரை செய்தார். வடநாடெல்லாம் சென்றார். எங்கும் அமைதி எய்த வில்லை.

ஒருநாள், தென் திசையில் ஒரு ஒளி எழுவதை உணர்ந்தார். புனிதரான மதுரகவி, ஒளியை நோக்கிப் புறப்பட்டார். காடு கடந்தார், மலை பல கடந்தார்; எத்தனையோ கான் யாறுகள் கடந்தார்.

பகலில் உறங்கினர். இரவில் அவ்வொளியே வழி காட்ட விரைந்தார். திருவரங்கத்திற்கு வந்தார். ரங்க ராஜரின் மகிமையோ இது என்று எண்ணினர். பேரொளியோ, காவிரிக்கும் தெற்கே பளபள என்று தெரிகிறது.

தாமிரபரணிக்கு வந்தார். தம் ஊர்க்கு அருகில் உள்ள குருகூரைக் கடந்தார். மாட மாளிகைகளைத் தாண்டினர். ஆலயத்தை அணுகினர்.

அங்கிருந்தார் கண்ணும் மனமும், ஒரு புளிய மரத்தை நோக்குவதைக் கண்டார்.

ஆம். அதன் அடியில் ஒரு இளைஞர். கண்களை மூடியபடி இருக்கிறார். ஒளிமயமானது திருமேனி. பதினாறு கலைகளை யுடைய முழுமதிபோல், பளபளத் தது திருமுகம். அந்த ஞான ஒளி, பெருகிப் பெருகி, எத்திசையிலும் வீசி, எல்லையற்ற விண்ணில் இணைவது போல இருக்கிறது.

இயற்கைக்கு மேற்பட்ட இவ்வொளி, நீண்டு நீண்டு வடகோடி வரை தெரிந்ததை நினைந்தார். வியந்தார்.

ஒரு சிறிதும் அசையா இது, மனித உருவந்தானா? உணர்வும் கண்ணும் வாயும் உளதா? என்ற ஐயம் எழுந்தது. சோதிக்க நினைத்தார். ஒரு கல்லை எடுத்தார்.

இளைஞர் எதிரில் இட்டார். கல் ஓசை கேட்டதும், கண் திறந்தார் இளைஞர்.

கண்ணின் அருள்ஒளி, மதுரகவியை வசீகரித்தது. வார்த்தை உரைப்பாரா? அதையும் ஆய்வோமே என்ற நினைவு எழுந்தது.

"செத்ததின் வயிற்றிற் சிறியது பிறந்தால்
எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?"

என்று இளைஞரை நோக்கி வினவினார்.

"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்"

என்று பளிச்சென்று பிறந்தது பதில்.

செத்தது என்பது, ஜடப்பொருளான உடல். சிறியது என்பது ஆத்மா.

உடலில் ஆன்மா உடன்பட்டிருக்கும் பொழுது, எதை அனுபவித்து அது எங்கே இருக்கிறது என்பது வினவானால், உடம்பைச் சார்ந்த இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டு, அவ்வுடலில் ஒன்றியிருக்கிறது என்பது விடையாயிற்று. இந்த விடை, எவ்வளவோ ஐயங்களை அகற்றியது. வயது முதிர்ந்த மதுரகவி, இளைஞரான அந்த யோகியை வணங்கி, அவரையேதன் அருள் குருவாக் கொண்டார். யார் இந்த இளைஞர்?

காரியார் தந்தை; உடைய நங்கை தாய். இருவரது பேருன தவத்தால் பிறந்தார். பிறந்தது முதல் அழவில்லை பிள்ளை. கைகால் அசைக்கவில்லை. பால் உண்ணவில்லை; எனினும், உடல் இளைக்கவில்லை. பெற்றோர் வியந்தனர். பிறந்த பன்னிரண்டாம் நாளில், குழந்தையைக் கொண்டு சென்றனர். பெருமாள் திருமுன் இட்டனர்.

என்ன அதிசயம்! குழந்தை தவழ்ந்தது. அண்மையில் ஒரு புளிய மரம். அதனடியில் யோகாசனம் இட்டு



அமர்ந்தது. கண்ட தாய் தந்தையர் மனம் களித்தது. இது எம்பெருமான் அருள் என்று உணர்ந்தனர்.

தாய் சேயை எடுக்கத் தாவினள். என்ன வியப்பு! தூக்க முடியவில்லையே! தந்தையும் முயன்றார். மலை யசைந்தாலும், மைந்தர் அசையார் என்று அறிந் தார். அங்கு இருந்தவர், இடையில் வந்தவர் எவராலும் சேயை எடுக்கவே முடியவில்லை.

மந்திரவாதிகளும் மயங்கினர். மருத்துவரும் சலித் தனர். எவர்க்கும், ஒன்றுமே தோன்றவில்லை. குழந்தை யின் வளர்ச்சியில் மட்டும் குறைவில்லை.

பாலர்க்கு வயது இன்று பதினாறு. கண் திறக்க வில்லை. வாயும் திறந்திலர். ஒரே மௌனநிலை. பெற்ற வர்கள் வயிறு பற்றி எரிந்தது. என்ன அபசாரம் செய்தோமே என்று ஏங்கி யிருந்தனர்.

இந் நிலையில், மதுர கவிகள் வந்தார். கல் எறியும் செயலால் கண் திறந்தது பிள்ளை. அதன்பின் அவர் எழுப்பிய கேள்விக்கு, விடையளிக்க வாய் திறந்த மைந்தரை யறிந்தனர். அவர்கள் வயிறு குளிர்ந்தது.

மதுர கவிகளை வணங்கினர். தபோதனரே! இப் பிள்ளை எங்களொடு வரும்படி, வழி செய்யவேணும் என்று பிரார்த்தித்தனர்.

வையகத்திற்கே வாழ்வளிக்க வந்தவர் இவர். இவர் சாமானியர் என்று எண்ணுதீர்! வம்பும் தும்பு மான வாழ்க்கைக்கு அருகர் அல்லர் என்றார் மதுர கவிகள்.

இனி என்ன செய்வது? ஆறி மனம் தேறினர்.

சுவாமி! பதினாறு ஆண்டுகளாக, பாலரைப் பிரிந் திலம்; எம் கண்மணியைக் காத்தோம். இனி உமக்கே அடைக்கலம் என்று உரைத்தனர். அங்கிருந்து

அகன்றனர். கலகல நகை செய்த மதுரகவிகள், அடியேன் உமது அடைக்கலம் என்று, அந்த இளைஞரைச் சரணாகி யடைந்தார்.

திருமறையின் நுட்பங்களை, நான்கு பிரபந்தங்களாக்கி, மதுரகவிக்கு உபதேசித்தார் இளைய யோகியார். அவைகளைத் தாளத்தோடும் இசையோடும் பாடிப் பாராயணம் செய்தார் மதுரகவி.

உலக நடைக்கு மாறான இந்த இளைஞரை, மாறன் என்று உலகம் மதித்தது. நம் ஆழ்வான் என்று நம் பெருமான் அருளினன். அதனால் அவர் நம்மாழ்வார் எனப் பெற்றார்.

ஸ்ரீ வைஷ்ணவ பரமாசாரியர் இவர் என்று உணர்த்தி, உலகை உய்வித்த மதுர கவியாழ்வார், நம்மாழ்வார்க்கு அண்மையில் இருப்பதை அறிகிறோம். குதித்த உள்ளம் குதூகலிக்கிறது. நம்மாழ்வாரை வழிபட்டு, அவர் பிரபந்தங்களை உலகறியப் பரப்பிய அவர் கருணையை நினைந்து கைகுவிப்போம். கண்ணிநுண் சிறுத்தாம்பு எனும் பதிகத்தால், அநேக தர்மங்களை நினைவூட்டிய அவரை,

சித்திரையிற் சித்திரைநாள் செழிக்க வந்தோன் வாழியே
திருக்கோளூர் அவதரித்த செல்வனார் வாழியே
உத்தரகங் காதீரத்(து) உயர்தவத்தோன் வாழியே
ஒளிகதிரோன் தெற்குதிக்க உகந்து வந்தோன் வாழியே
பத்தியுடன் பதினொன்றும் பாடினான் வாழியே
பராங்குசமே பரமென்று பற்றினான் வாழியே
மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே

என்று வாழ்த்துவோம்.



## ஸ்ரீ நாதமுனிகள்

மதுர கவிகளை யடுத்து, இனியராக நாதமுனிகள் எழுந்தருளி யிருக்கிறார். இவர் ஆனி மாதத்தில் அவதரித்தவர். புனிதயோகி யென்று, எவராலும் போற்றப் பெற்றவர்.

"பாகவத தர்மத்தைப் பரப்பு! வாழ அறியாத மக்கட்கு வழிகாட்டு! கைங்கர்யமே கடமை என்று, உள்ளுணர்வு அவர்க்கு உறுத்தி உரைத்தது.

யோக ரகஸ்யங்களை உணர்ந்த இவர், இசை நுட்பமும் தெரிந்தவர். கண்ணிநுண் சிறுத்தாம்பை, ஆயிரத்து இருநூறுதரம் ஓதினவர். அதன் பயனாக, திருவாய்மொழி நுட்பம் தெளிந்தவர். பல இடங்களில் அரும்பாடுபட்டுத் தேடி, ஆழ்வார் பாடல்களை யெல்லாம் தொகுத்து, நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்ற பெயர் வைத்தவர். அவைகட்கு இராக தாளங்களை அமைத்தவர். ஒரு தேவதாசி மூலம், அவைகளைப் பாடவைத்து உலகம் பயனடையச் செய்தவர். வீர நாராயண புரத்தில் உதித்து, திருக்குருகைக் காவல் அப்பன் சந்நிதியில் திரு நாட்டிற்கு எழுந்தருளியவர். நியாயதத்வம்; யோக ரகஸ்யம் இவர் அருளிய நூற்கள். இச் செய்திகள் எல்லாம், இவர் திருமுன் நம் நினைவில் எழுந்து நிழலிடுகின்றன அல்லவா! வளம் தந்த அவரை வணங்கி வாழ்த்துவோம்.

இப்படி நான்கு பிராகாரங்களையும் வலம் வந்து வணங்கியதும், சென்னை கேசவரைச் சேவிக்க வருகிறோம்.

ஆரம்பத்தில் தங்கமுலாம் இட்ட பலிபீடம், துவஜ ஸ்தம்பம் இரண்டையும் தரிசிக்கிறோம். அதன் மேல், எடுப்பான ஒரு மண்டபம் இருக்கிறது.

## கருடாழ்வார்

மகா மண்டபத்தின் கீழ்ப்புறத்தில், பெரிய திருவடி யெனும் கருடாழ்வார் சந்நிதி, மேற்குப் பார்த்த முகமாக இருக்கிறது.

“ ஆசறு பெரும்புகழ் அரங்கன் தன்னை, என்
மாசறக் கொண்டு வந்து என்று காட்டுவாய் ?
காசறு செந்தகைக் கனல்வெற் பாம்பென ;
மாசறப் பொலிதரு வயின தேயனே !”

என்று அவரை வாழ்த்தி வணங்குவோம்.

## சேனை முதலியார்

அதன் தென்புறச் சந்நிதியில், சேனைமுதலியார் இருக்கிறார். இவர் திருமாலின் அவதார விசேடம். ஐப்பசி பூராடத்தில் அவனியில் உதித்தவர். காசிபரிடம் கற்றவர். உத்தம நெறியால் உயர்ந்தவர். ஸ்ரீவைஷ்ணவ பக்த சிகாமணி.

## பெரியாழ்வார்

சேனை முதலியாரை அடுத்து, இன்பப் பெரியாழ்வார் எழுந்தருளி யிருக்கிறார் ; இவர் ஸ்ரீ வில்லி புத்தூரில், பெரிய திருவடி அமிசமாக, ஆனி சுவாதியில் அவதரித்தவர். ஸ்ரீ கிருஷ்ணானுபவத்தில் அதிகம் ஈடு பட்டவர். நந்தவன கைங்கர்ய காலத்தில், நிலமகள் அம்சமான ஆண்டாளைக் கண்டெடுத்து வளர்த்து, அவளை அரங்கர்க்கே ஆளாக்கியவர். மதுரையில் பாண்டியர் கொண்டாடப் பரத்வ நிர்ணயம் காட்டி, பொன் முடிப்பைக் கொண்ட புனிதர். அவர் அருளிய திருப் பல்லாண்டுதான், இன்று உலகெலாம் அநுஸந்திக்கப் படுகிறது.



“ நாடும் நகரும் நன்கறிய, நமோ நாராயணாய என்று
பாடும் மனமுடைப் பத்தருள்ளீர் ! வந்து பல்லாண்டு கூறுமினே”

என்று இவர், பாகவதர்களை யெல்லாம் ஆர்வமொடு அணைக்கும் அருமையே அருமை !

தன்னை யசோதையாக எண்ணி, குழந்தை கண்ணனுக்கு நீராட்டி, பூச்சூட்டி, தாலாட்டி அனுபவிப்பது ஒரு நிலை. கோபிகையாகத் தன்னைக் கண்டு, கோபாலனைக் காமுற்றுப் பாடுவது ஒரு நிலை. இப்படிப் பல்வேறு நிலையில் பகவானை அனுபவிப்பதில் அவர்க்கு அவரே நிகர்.

இவைகளை எண்ணும் போதே நம் இதயம் நெகிழ்கிறதே !

“ நல்லதிருப் பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே
நானூற் றறுபத்தொன் றும் நமக்குரைத்தான் வாழியே
சொல்லரிய ஆனிதனில் சோதிவந்தான் வாழியே
தொடை சூடிக் கொடுத்தாளைத் தொழும் அன்பன் வாழியே
செல்வநம்பி தனைப்போலச் சிறப்புற்றான் வாழியே
சென்றுகிழி யறுத்து,மால் தெய்வம் என்றான் வாழியே
வில்லிபுத்தூர் நகரத்தை விளங்க வைத்தான் வாழியே
வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே ”

என்று வாழ்த்தி, அவரைக் கைகுவித்து வணங்குகிறோம்.

## ஆளவந்தார்

அவரை அடுத்து, ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியரான ஆளவந்தார் எழுந்தருளி யிருக்கிறார். இவர் ஆடி உத்தராடத்தன்று, வீர நாராயண புரத்தில் அவதரித்தவர். ஸ்ரீ நாதமுனிகளின் பௌத்திரர். ஈஸ்வர முனிகளின் புதல்வர். மகா பாஷ்யரிடம் சாஸ்திரம் பயின்றவர்.

அருமைக் குருவை அறிவு பலத்தால் எதிர்த்த ஆக்கி யாழ்வானை, அரசரளித்த பல்லக்கில் சென்று வென்றவர். எம்மை ஆள வந்தார் என்று அரசி யளித்த பட்டமும், அரசரளித்த பாதி நாட்டையும் ஏற்றவர். தூதுளைக் கீரையை நாடோறும் தந்து, இவரிடம் நட்படைந்த மணக்கால் நம்பிகள், பல ரகஸ்யங்களை உபதேசித்து, திருவரங்கம் கொண்டு சென்று, இதோ உமது முன்னோரது மாநிதி என்று திருவரங்கரைக் காட்டக் களித்தவர்.

அதன் பின் துரிய ஆஸ்ரமத்தைக் கைக்கொண்டு, சதுஸ்லோகி எனும் நூலை அருளியவர். பலரைத் திருமால் பக்தராக்கினவர். யமுனைத் துறைவர், யமுனாசார்யர் என்னும் பெயர் எய்தியவர். ஆகமப் பிராமாண்யம், புருஷ நிர்ணயம், ஆத்மசித்தி, ஈஸ்வர சித்தி, கீதார்த்த சங்கிரகம், ஸ்ரீ தோத்திரம் முதலிய அரிய நூல்களை அருளியவர்.

ஆஹா! இவருமா இங்கு எழுந்தருளி யிருக்கிறார் என்று, இறும்பூது எய்துகிறது இதயம். வாழ்த்தி அவரை வணங்குகிறோம்.

மண்டபத்தின் தென்புறத்தில் உள்ள கிழக்கு நோக்கிய சேனை முதலியார், பெரியாழ்வார், ஆளவந்தாரது முதன்மைச் சந்நிதிகள் மூன்றையும் தரிசித்ததும், வடபுறத்தில் கூரத்தாழ்வார், இராமாநுஜர், முதலியாண்டான் எனும் மூவர் சந்நிதிகளும் இருத்தலை யறிகிறோம்.

## (1) கூரத்தாழ்வார்

இவர் கூரம் எனும் பதியில், தைம்மாத அத்த நாளில் உதித்தவர். உடையவர் திருவடியை ஆசிரயித்தவர். ஒருநாள் இவர் பட்டினி யிருக்க, பிராட்டி



அந்நிலையைப் பெருமாளுக்கு அறிவிக்க, ஓடி வந்து கோபாலன் உணவளிக்கப் பெற்றவர்.

சோழ மன்னரால் கண்ணிழந்து, திருவரங்கத்தில் இருந்து, பெருமாளைத் துதித்து, உடையவர் ஸ்ரீ பாததீர்த்தம் பெற்றுத் திரு நாட்டிற்கு எழுந்தருளியவர்.

ஸ்ரீ வச்ச சின்ன மிஸ்ரர், நடையாடு பதஞ்சலி, யதீந்திர சரணர் என்றும் இவர்க்குப் பெயருண்டு.

## (2) இராமாநுஜர்

இவர் ஆதிசேஷ அம்சர். சித்திரைத் திருவாதிரையில் உதித்தவர். பெரிய திருமலை நம்பியால், இராமாநுஜர் என்று பெயரிடப் பெற்றவர். யாதவப் பிரகாசரிடம் கற்றவர். காஞ்சி நகர் மன்னன் மகளைப் பற்றிய பிரம ரட்சசை விரட்டியவர்.

மதுராந்தகத்தில் ஏரிகாத்த பெருமாள் சந்நிதியில், பெரிய நம்பிகளிடம் பஞ்ச சம்ஸ்காரங்களைப் பெற்றவர். இல்லம் துறந்து, துரிய ஆஸ்ரமம் தாங்கி, எதிராஜர் ஆனவர். தம் முதல் குருவான யாதவப் பிரகாசர்க்குத் திரிதண்ட காஷாயம் தந்து, கோவிந்த ஜீயர் எனப் பெயரிட்டவர்.

திருவரங்கரால், நம் உடையவர் என்று அழைக்கப் பெற்றவர். பெரிய திருமலை நம்பியிடம் திருவாய்மொழி ஓதினவர். திருமந்திரப் பொருளையும், சரம சுலோகத்தையும் உலகறிய உரைத்தவர். திருக்கோட்டியூர் நம்பியால், எம்பெருமானார் திருநாமம் எய்தியவர். வடநாட்டுத் தலம் பல வணங்கினவர். கூரத்தாழ்வார்க்குத் திரிதண்ட காஷாயம் தந்தவர். ஸ்ரீ வைணவ சமய விருத்தி செய்தவர்.

ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதார்த்த சங்கிரகம், கீதா பாஷ்யம் முதலிய

உயரிய நூல்களை உதவி, அரிய திருநாட்டை அலங்கரித் தவர்.

இராமாநுஜரைத் தரிசிக்கிறபோது, இத்தகைய பல செய்திகள் எண்ணப் பெறுகின்றன.

## (3) முதலியாண்டான்

இவர், கச்சியில், சித்திரை புனர்வசுவில் புருஷ மங்கலத்தில் பிறந்தவர். உடையவருடைய சகோதரி புதல்வர். அவர் திருவடிகளை ஆசிரயித்தவர். எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர். தாசரதி, வாதூல தேசிகன், ஸ்ரீ வைஷ்ணவ தாஸன், இராமாநுஜ பாதுகை என்ற பல பெயர்களை யுடைய இவரை, இங்குச் சேவிக்கிறோம்.

இவர்கள் ஒவ்வொருவரும், பின்னே மூலவர், முன்னே உற்சவர்களுமாக எழுந்தருளியுள்ளர்.

## சென்னைக் கேசவர்

ஆழ்வார் ஆசாரியர்களை யெல்லாம் வலம் வந்து வணங்கிய பின், கருவறையில் எழுந்தளிய மூலவரைத் தரிசிக்க முந்துகிறோம்.

மூலத்தானத்தில், சென்னை கேசவர், ஸ்ரீ தேவி பூதேவி சமேதராக, ஆதார பீடத்தின் மேல், இனிய கோலங் கொண்டு எழுந்தருளி யிருக்கிறார்.

அவர் திருமுன், உற்சவர்கள், தங்க பூபால ராயன் எனும் பீடத்தின் மேல் தங்கி இருக்கின்றனர்.

சென்னை கேசவர், ஸ்ரீ தேவி பூதேவியுடன், கௌதுகர், பலிபேரர், சயனபேரர் ஆக எழுந்தருளியுள்ளர்.

(1) மூலவர்—திரவபேரம்; இவர் அசையாப் பொருள்.
(2) கௌதுகர்—இவர் மூலவர்க்கு அடுத்தவர்; (இவரும் அசையார்; எனினும், மூலவர் சிலா ரூபம்; கௌதுகர் உற்சவ மூர்த்தி.)



(3) உற்சவ பேரர்—இவர் வீதி வலம் வருபவர்.
(4) சயனபேரர்–இவர் பள்ளியறைக்குச் செல்பவர்.
(5) பலிபேரர்—உற்சவம் இல்லாத நாள்களில் பிராகாரத்தை வலம் வந்து, துஷ்ட தேவதைகள் அணுகாதபடி ரட்சை செய்பவர்.
(6) சக்கரத்தாழ்வார்—உற்சவத்தில் முன் செல்பவர்.

மூலஸ்தானத்தில் உள்ள இவர்களை, ஏககாலத்தில் தரிசிக்கிறோம். உள்ளம் பாகாய் உருகுகிறது. இன்பக் கண்மழை சிந்துகிறது.

"ஆசைவாய்ச் சென்ற சிந்தைய ராகி
அன்னை அத்தனென் புத்திரர் பூமி
வாசவார் குழலாள் என்று மயங்கி,
மாளும் எல்லைக்கண் வாய்திற வாதே,
கேசவா! புருடோத்தமா! என்றும்,
கேழல் ஆகிய கேடிலீ! என்றும்,
பேசுவார் அவர் எய்தும் பெருமை,
பேசுவான் புகில் நம்பரம் அன்றே!"

என்று, பக்த ரட்சகரான கேசவரைப் பாடுவோம்; பாடி மகிழ்ந்து ஆடுவோம். இதனால், ஒன்றானும் குறை வுடையம் அல்லோம்.

வலம் வந்து வணங்கினரை, எற்கும் இந்த எம்பெருமான் என்று நம்புகின்றது நம் மனம்!

வாழ்க சென்னை கேசவர்!
வளர்க தாயார் பேரருள்!!
வாழ்க இந்த வையகம்!!!

## கேசவர் கோயில் வாகனங்கள்

1. கருட வாகனம்
2. குதிரை வாகனம்

(1, 2) இரண்டும் தங்கமுலாம் பூசியவை.

3. அன்ன வாகனம்
4. புன்னை வாகனம்
5. சிங்க வாகனம்
6. யாளி வாகனம்

(3–6) இவை நான்கும் மரத்தால் ஆனவை.

7. சேஷ வாகனம்—வெள்ளி முலாம் பூசியது.
8. பெரிய யானை வாகனம்—ஜெர்மன் சில்வர்.
9. தாயார்க்குச் சிறிய யானை வாகனம்—வெள்ளியால் ஆனது.
10. அன்ன வாகனம்—கண்ணாடியால் ஆனது.
11. சந்திரப் பிரபை—வர்ணம் பூசியது.

## பிரமோற்சவம்

ஆண்டுதோறும், சித்திரைத் திருவோணத்திற்கு ஒன்பது நாட்கு முன் இங்குக் கொடி ஏறும். திருவோணத்தில் தீர்த்தவாரி நடைபெறும். பத்து நாள் விழா மிக விமரிசையாக நடைபெறும்.

ஐந்து பருவத் திருவிழாக்களும், ஆழ்வார் ஆசாரியர் திருநட்சத்திரங்களும் இக்கோயிலில் நடைபெறுகின்றன.

பெரியாழ்வார் உற்சவம், இங்குப் பிராபல்யம்.

மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோஅரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.



பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே.

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நால்திசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே.

திருமாலைப் போற்றி வாழ்.

42-H

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சென்னை மல்லீசுரர் திருக்கோயில்

பூமாது தனைப்புணர்ந்த புயல்வண்ணப்
　　பெருமானும், புலவர் போற்றும்
நாமாது தனைமணந்த நான்முகனும்,
　　போர்மாது நயக்கும் எண்தோள்
கோமானும் தானேயென்(று) உணர்ந்துதற்(கு)ஓர்
　　பிரணவ குஞ்சரமாத் தோன்றி,
மாமாவின் முகத்தானை உயிர்த்தானை
　　நினைந்திறைஞ்சி வழுத்து வோமே.

— விநாயக புராணம்

## மண்டபம்

சென்னை மல்லீச்சுரர் ஆலய முகப்பில், அழகான ஒரு மண்டபம் அமைந்திருக்கின்றது. இதனில் மணம் கமழும் பலவகை மலர்களும், மலர் மாலைகளுமாக, நலம் சிறந்த வாணிபம் நடைபெறுகின்றது.

மல்லீசர் எனும் தனிப்பெரும் பெயர்க்குத் தக்க படி, மனம் கவரும் மணம் இங்கு எப்போதும் உண்டு. இது கண்ணும் மனமும் களிக்கும் இடம்.

இக்கோயில் இரண்டு பிராகாரங்களை யுடையது. பயன்தரும் வாயிலுள் நுழைந்ததும், ஆரம்பப் பிரா காரத்தை அறிகிறோம். நியதியாக வலம்வர நினைக் கிறோம்.



ஸ்ரீ பிரமராம்பாள் சமேத ஸ்ரீ சென்னமல்லீசுவரர்

## பிரசந்ந விநாயகர்

முதலில் மேற்கு நோக்கிய யாகசாலை; அதை அடுத்து சூரிய மூர்த்தி. வடக்கு நோக்கிய வரத கணபதி. ஆரம்பமே கம்பீரமான அற்புதம்.

கனிந்த அருள் பாலிக்கும் கணபதி, பிரசந்ந விநாயகர் எனும் தகவார்ந்த நாமம் தாங்கியுள்ளார். மூலாதார அம் முதல்வரைக் கண்டதும், நம் வாய் மூல மந்திரத்தை உச்சரிக்கின்றது. பாசம் ஐந்தும் பறந்தோட, குவித்த இரு கரங்கொண்டு, கன்னத்தில் ஐந்து தரம் குட்டுவோம். மும்மலமும் பின் வாங்க, மூன்று தரம் குட்டுவதும் ஒருவகை.

குட்டும்போது, பேரான அமுதம் உச்சியி லிருந்து பெருகும். ஆதார மூலரான ஆனைமுகப் பெருமாற்கு, அது அபிடேகம் ஆகும்.

அதன் பின், ஆண்டாற்கு அடிமை நாம் என் பதற்கு அறிகுறியாக, புனிதத் தோப்புக் கரணம் போடுவோம்.

“ முருகோடு மதுப்பிலிற்று நறுங்கடுக்கை
    முடிக்கணிந்த முதல்வற்(கு) ஆமைக்
கருகோடு பறித்தணிந்த கணபதியை;
    ஒருகோடு காத்தில் வாங்கி,
ஒருகோடு முகத்தணிந்த பிரசந்ந
    விநாயகனை; ஊற்றும் தானம்
அருகோடு மணிமார்பத்(து) அராஅணிந்த
    நிராமயனை, அகத்துள் வைப்பாம் ”

என்று பாடுவோம்.

பூத கணம், தேவ கணம், மனித கணம், விலங்கு கணம், ஆன்ம கணம், மந்திர கணம் முதலிய எவை கட்கும் அதிபரான இவரை, கணபதி என்று ஆகமம் கருதுகிறது.

பிரத்யட்ச முகத்தர் ஆதலின், பிரசன்னர் எனப் பெறுவர்; மற்று, பிரஸந்ந வதனம் என்பதற்கு யானை முகம் என்றும் பொருள் உண்டு. "ப்ரஸந்நோ மத்த வாரண:" என்பது நிகண்டு. இயற்கையான யானைகட்கு, முகத்தில் இரண்டு கொம்புகள் உள்ளன. இந்த யானை முகற்கு ஒரு கொம்பு. இந்த யானை முகம், ஓங்காரம் எனும் பிரணவ உருவம். ஓங்காரத்தில், அகர உகர மகரங்கள் அடங்கி யிருக்கின்றன. இம்மூன்றுமே முத்தொழில் புரியும் மூவரது வடிவம். அகர உகர மகாரம் மூன்றும், ஓங்காரத்தின் உறுப்புகள்; அது போல், அவைகளை யுறைவிடமாக் கொண்ட மூவரும், கணபதியின் அங்கங்கள்.

பிரணவம் விநாயகர் உருவம்; சால்பான இதற்கு பிள்ளையார் உருவமே சான்று. எழுத ஆரம்பிக்கும் எவரும், (உ) இப்படித் தலைப்பிட்டு எழுதுவர். இதனை, "ப்ரதமம் பிந்துஸம் யுக்தம்—த்விதீயம் தண்ட முச்யதே" என்று அறுதி யிடுகின்றார் அறிஞர்.

பிந்து என்னும் (○) இது, வட்ட வடிவம். அடுத்துத் தண்டம் என்பது, (—) இக்கோட்டின் உருவம். வட்டம்-பிந்து; கோடு-நாதம்; சிறந்த இவ்விரண்டும் சேர்ந்ததே பிள்ளையார் சுழி. அகர உகர மகர பிந்து நாதம் என்னும் பேறான ஐந்தும் கொண்டதே மந்திர ராஜமான பிரணவம்.

வீட்டு யானையான கணபதி, தும்பிக்கையைச் சிறிது மடக்கி விளையாடினால், அதனிடத்தில் (ஓ)ம் எனும் விமல மகாரமும் வெளிப்படும்.

இப்படி யெல்லாம் தமக்கு மேலொரு தலைவர் இலாதவ ராதலின், இவர் விநாயகர் எனப் பெறுகின்றார். விசேட நாயகர் எனவும் ஒருவகை. நலம் விளைய, ஆன்மாக்களை நடத்துபவர் என்றும் இச் சொற்குப் பொருளுண்டு.



ஆமயம் - நோய்; நிர்ஆமயன் - பிறவி நோயிலாத பெருமான்; கணபதி, விநாயகன், நிராமயன் எனும் முப்பேரும் பெற்று ஒளிரும் முதல்வனை, அகத்தில் வைத்தால் ஆகாமியம் இல்லை என்பது, விநாயக புராணம் கூறும் புனித இத்துதியின் பொருள்.

## அபிஷேகக் கிணறு

பிரஸந்ந விநாயகர்க்குப் பின்புறத்தில், அற்புதமான ஒரு கிணறு இருக்கிறது; தெளிவு நிறைந்த இதுவேதான் அபிஷேக தீர்த்தம். அதன் பக்கத்திலேயே இருக்கிறது, மேற்கு நோக்கிய யாகசாலை. கண் களிக்க, அதையும் காண்கிறோம். வாத கணேசரை வலம் வருகிறோம்; வணங்குகிறோம்.

## தெற்குப் பிராகாரம்

கணபதிக்கு அண்மையில், மாபெரும் கொடியேற்று மண்டபம் உளது. பிராகார ஆரம்பத்தில், எடுப்பான வாகன கிடங்கு இருக்கிறது. இப் பிராகார இடையில், கேசவர் கோயிலுள் புக ஒரு வாயிலும், கோடி மாடிமேல், ஆலய அலுவலகமும் இருக்கக் காண்கிறோம்.

## மேற்குப் பிராகாரம்

இப்பிராகார முதலில் பசு மடமும், விமலன் அர்ச்சனைக்குப் பயன்படும் வில்வமரம் ஒன்றும் இருப்பதை யறிகிறோம்.

## குமரவேள்

அவைகளை யடுத்து, வான் மகளும் மான் மகளும் இருபுறமும் மகிழ, குதூகலத்தொடு மயிலேறி, வேலேந்தும் குமரன் கோயில் கொண்டுளன்.

செவ்வேள் இறைவனை, முறையே சேவிப்போம்.

அலைகடலை உள்ளங்கையில் அகத்தியர் அடக்கினார்; அது ஒரு காலம். வானில் உயர்ந்து வளர்ந்தது விந்தமலை. உள்ளங் கையை அதன் உச்சியில் ஊன்றி, அம்மலையைப் பாதலத்து அழுத்தினார். இது ஒரு கால வரலாறு.

ஒரு கணையை, மராமரம் ஏழில் ஊடுருவ விட்ட இராமனது முதலான திருமாலும், சோ எனும் பொன் வெள்ளி இரும்பு மதில்களால் ஆன முப்புரம் எரித்த முதல்வரும், அகத்தியர் செய்த இச் செயலைச் சிந்திக்குந்தோறும் சிரம் அசைப்பர்.

இங்ஙனம் சிவனாரும் திருமாலும் சிரம் துளக்கக் கரந்துளக்கிய அகத்தியர், சிறிய உருவினர் ஆதலின், குறுமுனிவர் எனப்பெறுவர். கரம் துளக்கல் - மேல் நோக்கிய உள்ளங்கை, கீழாகக் கவிழ்த்தல். அத்தகைய வாழும் தவத்து அகத்தியரையும், வஞ்சித்தது கிரவுஞ்சம். மாயாவியான அம்மலையின் உரத்தை ஊடுருவிப் பிளந்த ஞான வேலை, வலம் பெற உயர்த்திய இளம் பிரான் அல்லவா இப்பரமன்! இந்த நினைவு இங்கு எழுகிறது.

" மரம் துளைத்த கணையானும், சோஎறிந்த
திறலானும் மதிக்குந் தோறும்
சிரம் துளக்க; அலைகடலும் சேணிகந்த
பெருவரையும் திறத்திற் குன்ற;
கரம் துளக்கும் குறுமுனிக்கும், கருத்தின்மயல்
பூட்டியகை தவஞ்சால் வெற்பின்
உரம் துளைத்த சேயிலைவேல் வலனுயர்த்த
இளையவனை உளத்துள் வைப்பாம் "

என்று பாடுவோம்; கவிராட்சசர் கச்சியப்ப முனிவர் இங்கு வந்து பாடிய கவி இது; விநாயக புராணத்தில்



உள்ள இப் பாசுரம், மிக அருமையா யிருக்கிறது அல்லவா!

மூத்த பிள்ளையாரைத் தரிசித்ததும், இளைய பிள்ளையாரைச் சேவிக்கும் அமைப்பில், இரு சந்நிதிகளும் இப்படி இருக்கின்றன.

## பிரமராம்பிகை

மேற்குப் பிராகாரக் கோடியில், கோமளையான பிரமராம்பிகை கிழக்கு நோக்கிக் கோயில் கொண்டு இருக்கிறார். கருதத் தக்க அரிய திருவுருவம். எத்தனை தரம் சேவித்தாலும் சலிப்பதில்லை மனம். மல்லிகேசரிடம், உயர்ந்த அருள் மணம் உளது. அதை முகர்ந்து அனுபவிக்கும் வண்டு இந்தத் தேவி. இதை எண்ணும் போதே இதயம் நெகிழ்கிறதே!

" ஆரணனும் ஆரணனும் ஆரணத்துக்(கு)
எட்டாத அரனும் என்னும்
காரணர்கள் மூவரையும் தரித்துயிர்த்த
அடையாளம் காட்டு மாபோல்;
சீரணவும் திருவயிற்றின் மூவரை வார்ந்(து)
அழகெறிக்கும் செல்வத் தாயை,
பேரணவும் சென்னைநகர்ப் பிரமராம்
பிகைமயிலைப் பேசி வாழ்வாம் "

—விநாயக புராணம்

பயனுணர்ந்து, அத் தேவியை யிப்படிப் பாடி மகிழ்பவர்களே பாக்கியசாலிகள்.

## வடக்குப் பிராகாரம்

காண்பார் மனத்தை வசீகரிக்கும் கம்பீர மானது இப் பிராகாரம். அமைதியைக் கருதுவார்க்கு,

சென்னையில் இந்த இடம் மிக அருமை யாக அமைந்துளது.

இப் பிராகாரத்தை, அநுபூதி மண்டபம் என்று அறிஞர்கள் அறிவித்துளர்.

## அருணகிரிநாதர்

சென்னையில் உள்ள சிவனடியார் அனைவரும் ஒன்று கூடினர். திருவண்ணாமலையில் திருவவதரித்து, பரம குமரன் திருவருட்குப் பாத்திரராகி, சந்தமணம் கமழும் செந்தமிழால் கந்தனை வந்தித்த கருணை முனிவர் திரு அருணகிரி நாதர்க்கு, அருமையான ஒரு சந்நிதியை இம்மண்டபத்தில் அமைத்தனர். கல்லான மனமும் இத் திருவுருவைக் கண்டால் கனிவு பெறும். குமரனையும் தேவியையும் வடக்கு நோக்கிக் கும்பிடும் கோலத்தில் எழுந்தருளிய ஸ்ரீ அருணகிரியார் திருவுருவை, காம கோடி பீடம், ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள் ஆக்க சங்கற்பம் செய்து அளித்திருக்கிறார்.

" அருவம் ஒரு நான்காகி, உருவம் ஒரு
நான்காகி, அறை யிரண்டும்
மருவியுள உருஅருவம் ஒன்றாகி,
முத்திறமும் வழுத்த ஒண்ணாப்
பெருவெளிக்கும் அப்பாலாய், உள்ளபொருள்
ஈதெனவே பெரிதும் சேயோன்
ஒருவனையே புகழ்ந்த அருள் அருணகிரி
சேவடிப்போ(து) அகத்துள் வைப்பாம் "

என்று, அவரை வாழ்த்தி மகிழ்ந்து வழிபடுவோம்.

## அருள் நூற்களின் ஆய்வு

இம் மண்டபத்தில், பல பக்தர்கள் ஒவ்வொரு நாளும் கூடுகின்றனர். தக்க பேரறிஞர்கள், ஆஸ்திக



சம்பந்தமான விரிவுரை யாற்றுகின்றனர். இந்த அமைதி, எந்தக் கோயிலிலும் எதிர்காலத்தில் நேரலாம் என்று உணர்கிறது நம் உள்ளம்.

## ஆறுமுகப் பெருமான்

இப் பிராகாரத்தின் கீழ்க்கோடியில், பேறு தரும் ஆறுமுகப் பெருமான், உற்சவ மூர்த்தியாய், இனிது தெற்கு நோக்கி எழுந்தருளி யிருக்கிறார். அருமையான மூர்த்தம். தயா மூர்த்தமான இவரைத் தரிசித்ததும்,

" ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று பூதி "

என்ற திருப்புகழ், நானும் வந்தேன் என்று நம் வாயில் வரும். வரத சண்முகத்தை வணங்கி எழுவோம்.

## பயிரவர்

அவர்க்கு அண்மையில், அகங்கார கண்டனம் செய்யும் பரம பக்தரான பயிரவர் எழுந்தருளி யிருக்கிறார். இவரே சிவாலய காவலர். காக்க பிரபோ! என்று அவர் முன் கை குவிப்போம்.

## ஆதிசங்கரர்

அவரை அடுத்த சந்நிதியில், ஆதி சங்கரர் அமைதி யான திருமுகங் காட்டி, இனிய உற்சவ மூர்த்தியாக எழுந்தருளி யிருக்கிறார். சிறந்த அவரைக் கண்டதும், இதயம் சிலிர்க்கிறது. வாழ்த்துகிறது வாய்; வணங்குகிறது நம் சிரம்.

## கல்யாண மண்டபம்

அவர்க்குப் பக்கத்தில், எடுப்பான மேடைமேல் கல்யாண மண்டபம் இருக்கிறது. இதனில் ஒன்பது

Q23:28.2111 N58



தூண்கள் உள்ளன. அவை ஒன்றொன்றும், திருத்த கணபதி, தட்சிணாமூர்த்தி, மாணிக்க வாசகர், சந்திர சேகரர் முதலிய அற்புத சிற்பங்கள் அமைந்தவை.

இம்மண்டபத்தில் பெரிய அறைகள் இருக்கின்றன. வாகான வெள்ளி வாகனங்கள், நகைகளைக் கொண்ட இரும்புப் பெட்டிகள், இந்த அறைகளில் இருக்கின்றன.

## கிழக்குப் பிராகாரம்

இந்தப் பிராகாரத்தின் முகப்பில், எடுப்பான துவஜ ஸ்தம்பம் இருக்கிறது. குறிப்பான பல தத்துவங்களைக் கொண்ட கொடிமரமும், குதூகலத்தை யளிக்கிறது.

அடுத்தது பலி பீடம். தூபி—பருமை யிலிங்கம்; பலிபீடம்—பத்திர லிங்கம்; சிவலிங்கம்—நுட்ப இலிங்கம் என்று, எவ்வளவோ அநுபவங்களை எண்ணும் இடங்கள் இவை. ஆகமங்கள், அருமையாக இவைகளை அறிவிக்கின்றன.

லிங்—லயம்; கம்—தோற்றம்; எனவே, எல்லாம் ஒடுங்கி உதிக்கும் இடம் என்னும் ஒரு பொருள் இங்குச் சொல்லிக் கொள்வது போதும்.

அடுத்தது ரிஷப தேவர் சேவை. சிவலிங்கம்—பதி; நந்தி—பசு; பலி பீடம்—பாசம்; எனவே, வேத ஆகமங்களில் சொல்லப்பெறும் பதி பசு பாசங்களை, விளங்க விளக்கும் இடங்கள் இவை.

## உள் பிராகாரம்

உள் நுழைகிறோம். உருகுகிறது உள்ளம். எப்புறமும் சிவானுபவம். எப்பக்கமும் சிவ அம்சங்கள். ஆஹா! எவ்வளவு அருமையான இடத்திற்கு வந்திருக்கிறோம் என்ற எண்ணம் இங்கு எழுகிறது.



## ஒன்பது கோள்கள்

அந்தப் பிராகாரத் தென் கிழக்கு மூலையில், சிறந்த நவக்கிரகங்களைச் சேவிக்கிறோம்.

" வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல; அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே "

என்று, அங்குப் பாடிப் பரவுகிறார்கள் பக்தர்கள்.

## உற்சவ விக்ரகங்கள்

கோள்களின் எதிரில் சோமாஸ்கந்தர், கணபதி, இரு திருக்கரப் பிரமராம்பிகை, சண்டிகேஸ்வரர் முதலியோர் உற்சவ மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கின்றனர். சிறந்த இம் மூர்த்திகளைச் சேவிக்கிறோம்; இப்படிச் சேவிக்க நேர்ந்த இன்றைய நாள், நம் வாழ்நாளில் பொன்னான நாள்; புனிதமான தினம் என்று புளகிக்கிறது மனம்.

## தெற்குப் பிராகாரம்

வலம் வருகிறோம். முதலில், வா! வா என்று வரவேற்கிறார் மகா கணபதி. வடக்கு நோக்கிய அப் பிரபுவின் திருமுன்,

" கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனும் கைதொழும்
கணபதி யென்றிடக் கருமம்; ஆதலால்
கணபதி யென்றிடக் கருமம் இல்லையே "

என்று பக்திப் பெருங் காதலொடு பாடுவம். குட்டும் தோப்புக் கரணமும் போடுவம். அங்கிருந்து இரண் டொரு அடி கடந்ததும், ஆநந்தமான காட்சி தருகிறார் சூக்ம லிங்கேசர்.

" தேரேறி வரும் பரிதி மண்டிலத்தும்
செழுமதி மண்டிலத்தும், சீர்கொண்(டு)
ஏரேறி வரும் கனல் மண்டிலம், சத்தி
மண்டிலத்தும், எண்கண் ணனும்,
நீரேறி வருமரியும், உருத்திரனும்,
மகேச்சரனும் நிலவச் செய்து ;
காரேறி வருமவர்தம் உளத்தமர் எண்
குணத்தானை நயந்து வாழ்வாம்"

—விநாயக புராணம்

என்று, வாழ்த்தி அவரை வணங்குவம்.

அவரை யடுத்து திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் சமய குரவர்கள் நால்வரும், சரியை முதலிய வழி நான்கும் காட்டி வாழ்விக்க இனிது எழுந்தருளி யிருக்கின்றனர்.

" பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி "

என்று, அவர்களைப் போற்றி மகிழ்ந்து புளகிப்போம்.

அவர்களுக்கு அண்மையில், நம்பி யாண்டார் நம்பிகளை யாண்ட பொல்லாப் பிள்ளையார், கருணை மிகுந்த தம் சொருபத்தைக் காட்டுகிறார்.

" கல்லால் நிழல் மலை வில்லார் அருளிய
பொல்லார் இணையடி நல்லார் புனைவரே "



எனும் சிவஞான போதத் துதிப்பாவின் சிறந்த பொருள்கள், இவ்வமயம் உவந்து எழுந்து நம் உளத்தில் உருளுகின்றன. போற்றுகிறோம் அவரை. புளகிக்கிறது மனம்.

இவரை அடுத்து, திருத்தொண்டத் தொகையில் உள்ளபடி, நாயன்மாருடைய மூலவராம் திருவுருவங்களில் சிறப்புலிநாயனார்வரை, இப் பிராகாரத்தில் எழுந்தருளி யிருக்கின்றனர். இவர்கள் அனைவரும், வடக்கு நோக்கி வாழ்விக்கும் மூர்த்தங்களாயுளர்.

நலம் சிறந்த இப் பிராகார நடுவில், மூல இலிங்க பஞ்சகோஷ்ட பிராகாரத்திற்கு உரிய தட்சிணத் துவார கணபதி, தெற்கு நோக்கி யிருப்பதை அறிகிறோம். குறை தவிர்க்கும் அப் பெருமானைக் குட்டிக் கொண்டு கும்பிடுவோம்.

அவரை யடுத்து, அநுக்ரக தட்சிணாமூர்த்தி எழுந்தருளி யிருக்கிறார். தெற்கு நோக்கும் கணபதி, விக்கினம் கெடுக்கும் வித்தகர். தென்திசை பார்த்து மௌன ஆட்சி நடத்தும் இம் முதல்வரோ, சாரமான அநுபூதி சாரச் செய்பவர்.

" கல்லாலின் புடையமர்ந்து, நான்மறை
ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும், வாக்கிறந்த
பூரணமாய், மறைக்(கு) அப்பாலாய்,
எல்லாமாய், அல்லவுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி,
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம் "

என்று பாடி அவரைப் பரவுவோம். புனித அநுபவப் புதையல், இப்பாடலில் உள்ள பொருள். ஊன்றி உணர்கிறோம். உள்ளம் உருகுகிறது.

## மேற்குப் பிராகாரம்

இந்தப் பிராகார ஆரம்பத்தில், கிழக்கு நோக்கிய இன்புதரும் சித்தி கணபதி எழுந்தருளி யிருக்கிறார். கண்டதும் கைகுவிக்கிறோம்.

" உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்
தறிநிறுவி, உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர் பூட்டி,
இடைப்படுத்தித், தறுகண் பாசக்
கள்ளவினை பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு, கருணை என்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம் "

என்று துதிக்கிறோம். அவரை யடுத்து, மண், நீர், தீ, காற்றுகளில் ஆட்சி நடத்தும் ஈசானம், தற்புருடம், வாமதேவம், அகோரம் எனும் கிழக்கு நோக்கிய நான்கு இலிங்க மூர்த்திகளைக் கண்டு கைகுவிக்கிறோம். சத்யோஜாத ஆகாச லிங்கம் மூலஸ்தான முதல்வர் என்பதை, இங்கு எண்ணிக் கொள்வது நலம்.

கர்ப்பக்கிருகப் பின்புறத்தில், உலக ரட்சக நாரணர் மேற்கு நோக்கி யிருப்பதை அறிகிறோம். இனிது மகிழ்ந்து, இவர்களை யெல்லாம் அங்கங்கே இறைஞ்சுகிறோம்.

## வடக்குப் பிராகாரம்

இப் பிராகாரத்தில், தெற்குப் பிராகாரத்தில் கண்ட நாயன்மார்கள் நீங்கலாக, சிறுத் தொண்டர் முதல் மற்றுமுள்ள அடியவர்கள் யாவரும் தெற்கு நோக்கி எழுந்தருளி யிருப்பதை யறிகிறோம். இறுதியில் சேக்கிழார் பெருமானும் இருக்கிறார்.



" தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி"

என்று புனித அம் மூர்த்திகள் முன் தலை வணங்கிப் புகழ்வோம்.

கோமுகத் துவாரத்திற்கு நேராக, படைக்கும் தொழிலினர் எனும் வாணி மணாளரான பிரம தேவர் வடக்கு நோக்குகிறார்.

அவரை யடுத்து, இன்ப யோக சண்டேஸ்வரர் இருக்கிறார். கண்ணெதிரில் இருந்த இம்மைத் தந்தையைக் கைவிட்டார்; எங்குமான பரம்பொருளே எம் தந்தை என்றார். அவர் பொருளைத் தம்மது ஆக்கினார். ஆம். அருமையான ஐயர் இவர் என்று அறிகிறோம். அவர் தியான நோக்கிற் குறுக்கிடல் ஆகாது என்று அறிவோம். சிறந்த அப்ரதட்சிணமாக வந்து அவரைச் சேவிப்போம்.

" மறைநெறியிற் பிறழாத வேதியர்ஆன்
பால்கறந்து வவ்வும் தீங்கு
முறைபுரியத் தக்கதென, அடுத்தடித்துப்
பால்கலத்தை முனிந்த தாதை
பொறையுடன் மண்ணிடைப் புரள,
இருதாளும் அறஎறிந்த பொல்லாத்தீங்கு
இறையவன் மெய்ப்பணியாக, இரும்பதத்தை
அடைந்தவரை இறைஞ்சி வாழ்வாம் "
(விநாயக புராணம்)

என்று புளகித்துப் போற்றுவம்.

துக்கம் தவிர்க்கும் துர்க்கா தேவி, அடுத்து இருப்பதை அறிகிறோம்.

சமய குரவர்கள் நால்வரும், எடுப்பான இடத்தில், உற்சவ மூர்த்திகளாகத் தென்திசை நோக்கி யிருக்கின்றனர்.

## பிட்சாடனர்

எவ்வுலகையும் ஆக்கி யளிக்கும் எம்மான், உயிர்ப் போதத்தைத் தா! தா என்று ஏற்கும் கோலம் கொண்டுளன்; அடியவர்கள், மூச்சு விடுந்தோறும், முதல்வவோ என்று கூவி முறையிட்டு, வாழ்வதற்குக் காட்டிய வழி இது.

“பார்த்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பர்கள்; எற்றுக்(கு) இரக்கும்?
நிரந்தர மாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச் செய்தானே”

என்று, அவரது மூல தத்துவத்தை நினைவூட்டுகிறார் திருமூலநாயனார்.

இந்த அநுபவம் செய்யும் பிட்சாடனர், இதே பிராகாரத்தில் இருக்கிறார்; இது, அருமையான திருவுருவம்.

## சிதம்பரேசர்

மகாமண்டபம் ஒன்று, அடுத்துக் காட்சி ஆகிறது. நலம் தரும் தாண்டவம், அம் மண்டபத்தில்தான் நடைபெறும். ஸ்ரீ நடராஜப் பெருமான், ஸ்ரீ சிவகாம சுந்தரியார், ஸ்ரீ மாணிக்க வாசகருடன், இம் மண்டபத்தில் உற்சவ கோலத்தில் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். அந்த மூர்த்தங்களை, சேவிக்கிற போதே நம் மெய் சிலிர்க்கிறது.

உலகங்கள் உதிக்கின்றன; காப்பாகின்றன; ஒடுங்குகின்றன; மயங்குகின்றன; அரிய அருளை



யடைகின்றன. விறுவிறு என்று இவைகள் விளைய, ஐம்பெரும் தாண்டவம் என்றும் செய்யும் அரசர் அல்லவா இவர் என்று உணர்கிறது நம் உள்ளம்.

“பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம் ஈன்றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூல் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை”

எங்கள் அன்னை சிவகாமியார், இதோ இருக்கிறார் என்று இன்ப லாகிரி கொள்கிறது இதயம்.

“மூத்த மகனிடத்(து) ஆர்வம் ஈன்றெடுத்த
பிதாமகற்கு முதிரும் ஆற்றால்,
பூத்தபொழில் சென்னைநகர்ப் புதந்து,
பிரசன்னமுகப் புத்தேள் அன்பர்
எத்தெடுப்ப, பிரசன்ன மாயிருக்கும்
ஆலயத்துள் எய்தி, மன்றுள்
கூத்தியற்றும் இளைப்பாறும் சிதம்பரே
சுரர்மலர்த்தாள் குறித்து வாழ்வாம்”

—விநாயக புராணம்

இங்ஙனம் பரம சிதம்பர மன்னரைப் பாடுவம்.

“சீதளசந் திரகலையும், தினகான்வெம்
மையும், கனலிற் செறிந்த தேசும்,
போதளவு நறுமணமும் போல் இறைவன்
குணமான புனிதை; வேறாய்க்
கோதளவும் உயிர், சிவத்தைக் காமுறவே
சிவகாமம் கொண்டு நின்ற
காதலவும் கருந்தடங்கண் சிவகாம
சுந்தரியைக் கருத்துள் வைப்பாம்”

என்று புனித அத்தேவியைப் போற்றுவோம்.

அவர்களை யடுத்து, திருப்பள்ளி யறை தெற்கு நோக்கி யிருக்கிறது.

அதை யடுத்த சந்நிதியில், ஸ்ரீ பால சுப்ரமண்யர், இனிய கோலத்தில் தென் திசை நோக்கி யிருக்கிறார்.

பயன் தரும் இந்த ஆலய அமைப்பை, முதலில் இருந்து ஊன்றிப் பாருங்கள். அப்போதுதான் தெரியும் இந்த அமைப்பின் அருமை !

## கருவறை

கருப்பக் கிருகத்துள் நுழைய முயல்கிறோம். வாயிலின் தென்புறத்தில், கிழக்குநோக்கி ஸ்ரீ சோமாஸ்கந்த உற்சவ மூர்த்தியும், வடபுறத்தில் ஸ்ரீ சந்திரசேகர உற்சவரும் எழுந்தருளி யிருப்பதை யறிந்து இறைஞ்சுகிறோம்.

கருவறைக் சென்று நுழைந்ததும், ஆரம்பத்தில் இருக்கிறது ஆராதனை மண்டபம்.

அம் மண்டபத்திலும் பலிதேவர், ரிஷபதேவர் இருக்கிறார்கள்.

சிவ வேள்வியை நாள்தோறும் செய்ய, தபன வேதிகை மேடையும், ஓம குண்டமும், மண்டப வலப் புறத்தில் இருக்கின்றன.

கருவறையில் நுழைய, இடையில் ஒரு வாயில் இருக்கிறது. அந்த வாயிலின் இரு புறத்தும், இரு துவார பாலகர்கள் இருக்கிறார்கள்.

கலகல ஒலி யெழுப்பும் மணிக் கதவு காட்சியாகிறது. அதைக் கடந்ததும் அர்த்த மண்டபம்.

இங்குத் தீபாராதனை முதலிய கைங்கர்யங்கள் நடைபெறுகின்றன.



## மல்லீசர்

கருப்பக் கிருகத்துள், ஜோதிர் லிங்கம், சத்யோ ஜாத ஆகாய லிங்கம், சதாசிவம் என்றெல்லாம் ஆகமங் களால் அறிவிக்கப்பெறும் ஸ்ரீ மல்லீச்சுரர், பிராகாரங் களைச் சுற்றி யிருக்கும் எவர்க்கும் தலைவராக இருக் கிறார்.

போக லய அங்கங்களை யுடைய புனித பூரணி, மூலத்தானத்தில், ஸ்ரீ மல்லீச்சுரர்மேல் வைத்தகண் வாங்காமல் இருந்து அருந்தவம் செய்கிறார். இது சால் புடைய உயிர்கட்கு ஒரு சமிக்ஞை.

தனித்த இடத்தில், ஆரவாரம் இல்லை யல்லவா ? அங்கேதான் அமைதி விளையும். ஒருமை மனம் கொண்டு, அங்கு ஓம் பொருளோனை உணர்வார்க்கு, சிறக்க விளையும் சிவானந்தம்.

வீதியில் விற்பனையாகும் மல்லிகை, மனோரம்ய மான மணம் கமழும். அது புறநிலை. அக நிலையில் மல்லீச்சுரர், அருள் மணம் பரப்புகின்ற அமலர். புதுமையான இந்தப் பொருத்தத்தை, உணரும் போதே உள்ளம் உருகுகிறதே ! இந்த உலக உறவு வேண்டா ! வேண்டவே வேண்டா!! ஸ்ரீ மல்லீச்சுரர் அருள் இருந் தால் போதும் ! போதும் என்ற உணர்வு பொங்கு கிறதே !

இன்பக் கண்ணீரை, அவர்க்கு அன்புக் காணிக்கை யாக்குவோம்.

" ஒன்றாகிப் பலவாகி உருவாகி
அருவாகி உபயமாகி
நன்றாகித் தீதாகி நான்மறைக்கும்
எட்டாத நலத்ததாகித்

தோன்றாகிப் புதிதாகிச் சுடராகி
இருளாகித் துகள்தீர் தன்பர்
சென்றாடும் சுவைக்கடலாம் சென்னைமல்
சுரர்மலர்த்தாள் சேர்ந்து வாழ்வாம் ”

—விநாயக புராணம்

தூய மனம் கொண்டு, இப்படி ஸ்ரீ மல்லீச்சுரரைத் துதிப்போம்.

அதன் பின் விநயம் காட்டி வெளிப்பட்டு, பிரா காரத்தை வலம் வருவோம்.

பிரசன்ன விநாயகர், ஸ்ரீ மல்லீச்சுரர்க்கு நேராக, அருள் வெற்றிக்கு உரிய அறிகுறியான கொடிக் கம்பத்தின் அருகில், வகுத்த முறைப்படி வணங்கி எழுவம்.

“ பூமாது தனைமணந்த புயல்வண்ணப்
பெருமானும், புலவர் போற்றும்
நாமாது தனைமணந்த நான்முகனும்,
போர்மாது நயக்கும் எண்தோள்
கோமானும் தானேஎன்(று) உணர்த்துதற்கே
பிரணவ குஞ்சரமாய்த் தோன்றி,
மாமாவின் முகத்தானை உயிர்த்தானை
நினைத் திறைஞ்சி வழுத்துவாமே ”

“ சத்தியாய் விந்துவாய் மனோன்மணியாய்
தயங்கிய மகேசையாய் உமையாய்
நித்தில வடம்தாழ் முகிழ்முலைத் திருவாய்
நெடும்புகழ் வாணியாய் வேறாய்
எத்திறம் இறைவன் நின்றனன், அவனுக்கு
இயைதர அத்திறம் நின்று
மெத்திய உயிரின் மலஇருள் கெடுத்து
விளங்கு பூரணியை ஏத்தெடுப்பாம் ”



என மூலத்தான முதல்வரையும், மல்லிகையும் மணமும் என அவருடன் இணைந்து இருக்கும் பூரணியாரையும் போற்றுவோம். இதன் பயனாக, இம்மை மறுமை வீடு மூன்றும் நாம் எய்துவது திண்ணம்.

## ஸ்ரீ மல்லீசர் கோயிலிலுள்ள வாகனங்கள்

(1) வெள்ளி ரிஷப வாகனம் ஒன்று.

(2) பிரதோஷ நாயகர் புறப்பாட்டிற்கு சிறிய வெள்ளி வாகனம் ஒன்று.

(3) பூதவாகனம், இராவணேச வாகனம், சூரிய ப்ரபை, மயில் முதலிய வர்ணம் பூசிய வாகனங்கள் நான்கு.

(4) யானை வாகனம் ஒன்று ; குதிரை வாகனம் ஒன்று ; சொக்கநாதர்க்குச் சிறிய குதிரை வாகனம் ஒன்று ; இம்மூன்றும், தங்கப் பால் பூசியவை.

## திருவிழாக்கள்

இந்தச் சந்நிதியில், பங்குனிப் பௌர்ணமியில் பிரமோற்சவம் நடைபெறும்.

மாதந்தோறும் வரும் ஒவ்வொரு பௌர்ணமியிலும் உற்சவம் உண்டு.

பஞ்ச பருவங்களும் நடைபெறுகின்றன.

இந்த இரு ஆலயங்களும் இங்கு எழுந்த வரலாற்றை, இனிச் சிறிது எண்ணுவம்.

சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு

தெய்வமே துணை.

உ

# ஆதியில் இக்கோயில்கள்
# அமைந்த வரலாறு

“தொண்டை மண்டலப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னைப் பட்டினம்” என்று, பழங் காலப் பத்திரங்களில் குறிப்பிட் டிருப்பதை ஆராய்ச்சி யாளர்கள் அறிவிக்கின்றனர். கடற்கரையைச் சார்ந்த இந் நகரில், அரிய நால் நிலப் பொருள்கள் என்றும் எங்கும் அகப்படும்.

## சென்னை கடற்கரைக் கோயில்கள்

### (1) திருவான்மியூர்

இது, சோழர் காலக் கோயில். இன்றும் அதை அறிவிக்கும் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. வால்மீகர் இனிது வழிபட்ட இடம். தியாகர் திருநடம் மிக அற்புதம். சுவாமி, பால் நிறமான சுயம்பு மூர்த்தி.

“ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னும் கழலடி
காட்டி நான்மலர் தூவி வலம் செய்மின்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூ ரீசனே”

எனும் திருநாவுக்கரசர் திருப்பதிகமும், திருஞான சம்பந்தர் பதிகமும் பெற்றது இத்திருப்பதி.



### (2) திருமயிலை

கிறிஸ்து பிறந்த முதலாம் நூற்றாண்டி லிருந்தே, வெளி நாட்டிற்குத் தெரிந்த ஊராக இருந்தது திரு மயிலை. இவ்வூர்க் கடற் கரையில், துறைமுகம் அன்று இருந்தது.

ஏசு நாதரின் சீடரான செயின்ட் தாமஸ், இந்த இடத்தி லிருந்துதான் தம் சமயக் கொள்கையைப் பரப்பினர்.

சமண்சமய தீர்த்தங்கரர், நேமிநாதர் கோயில் களும் இங்கு முன்பு இருந்தன. தொண்டை நாட்டு 24 கோட்டங்களுள், இது புலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்தது.

சென்னைக்கு வந்த ஐரோப்பியரில், போர்த்து கீசியரே முதலில் இங்குச் சாந்தோம் இருக்கும் இடத்தில் குடியேறினர்.

இன்று இங்கு இருக்கும் கபாலீசர் கோயில், கடலுக் கருகில் அன்று கட்டப்பட் டிருந்தது. வரவர, கடல்நீர் உட்புக நேர்ந்தது ; அது கருதி அதைப் பெயர்த்து, இன்று இருக்கும் இடத்தில் கோயிலை எழுப்பினர்.

கற்பகவல்லியார், மயிலாகி இறைவனை வழிபட்ட இடம் இது. பேருன திருவள்ளுவர் இத்தலத்தில் பிறந்தார். வாசுகியொடு வாழ்ந்தார். எம் மொழி யினரும் எச்சமயத்தரும் போற்றும் சிறந்த திருக்குறள் நூலைச் செய்தார்.

வாயிலார், சிவநேசர், ஏலேல சிங்கர் முதலினோர் வாழ்ந்து பணி செய்த வளமான பதியிது. திருஞான சம்பந்தர் பதிகம் பாடி, அங்கம் பூம்பாவையை எழுப்பிய அருமையான இடம். ஏழுகிணறு, ஏழு குட்டை, ஏழு குளம், ஏழு கணபதி கோயில், ஏழு

முருகன் ஆலயம், ஏழு தேவி சினகரம், ஏழு சிவாலயங்களை உடையது மயிலை. இப்படி யெல்லாம் அளவிறந்த அருமை யுடையது அத்தலம்.

## (3) திருவல்லிக்கேணி

இது, சிறந்த வைணவத் திருப்பதி. ஆழ்வாருடைய மங்களா சாஸனம் அமைந்தது.

கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே இத்தலம் சிறப்பெய்தி யிருந்ததென்பதை, நந்திவர்ம பல்லவர் காலக் கல்வெட்டால் அறிகிறோம்.

அந்நாளில் இங்கு ஒரு அல்லிகுளம் இருந்தது. அது இருந்த இடம், இன்று ஏராளமான மாளிகைகளாகி யிருக்கின்றன.

கேணியைக் கிணறு என்பது, தமிழ்நாட்டு மரபு. அருவா நாட்டார், குளத்தைக் கேணி என்பர். பெரிய அல்லிக்கேணி இருந்த இப்பதி, ஆழ்வாரது மங்களா சாஸனம் பெற்றபின், திருவல்லிக்கேணி என்று அழைக்கப் பெற்றது.

## (4) திருவொற்றியூர்

கி. பி. ஏழாம் நூற்றாண்டினரான திருஞான சம்பந்தரும் அப்பரும், ஒன்பதாம் நூற்றாண்டினரான சுந்தரரும் பதிகங்கள் பாடிய பதி இது.

இங்கு எழுத்தறியும் மண்டபம் ஒன்று இருந்தது.

சதுரானன பண்டிதர் தலைமையில், சிறந்த மடம் ஒன்று இங்கு சமயத் தொண்டு செய்துகொண்டிருந்தது.

பத்தாம் நூற்றாண்டினரான பட்டினத்தார், இவ்வூரில் அடைக்கலம் ஆயினர்.

திருவிளக்குத் திருப்பணி செய்த கலியநாயனார் இருந்த பதி; மதிமிகு சுந்தரர் சங்கிலியாரை மணந்த தலம்; அவரை மணந்த மகிழடித் திருவிழா, நலஞ்



சிறக்க இன்றும் இங்கு நடைபெறுகின்றது. விமல தியாகர் சந்நிதியும், ஸ்ரீ வடிவாம்பிகை சந்நிதியும்,இங்கு அதிக விசேடமாக எண்ணப் பெறும். பெரிய இத் திருக்கோயிலுள், அநேக இலிங்கங்கள் இருக்கின்றன.

புற்றிடங் கொண்ட சந்நிதிக்கு வடபுறத்தில், மிகப் பளபளப்பான ஆதி யிலிங்கம் ஒன்றும் இருக்கின்றது.

## (5) சென்னை கேசவபுரம்

இன்று ஹைகோர்ட் இருக்கும் இடந்தான், ஆதியில் சென்னை நகரின் ஆரம்பம். அன்று சோலைகள் அடர்ந்த அழகான அந்த இடம், சென்னி கேசவபுரம் எனப் பெற்றது.

ஹைகோர்ட்டின் தென்புறத்தில், இன்று ரிசர்வ் பாங்கிக்காக இடம் ஒதுக்கி யிருக்கின்றனர் அல்லவா. அந்த இடத்தில்தான்,

**சென்னை கேசவப் பெருமாள், சென்னை மல்லீச்சுரர்**

எனும் இரு கோயில்கள், ஒன்றை ஒன்று அணைந்தன போல அன்று இருந்தன. திருவான்மியூர், திருமயிலை, திருவல்லிக்கேணி, திருஒற்றியூர்போல, சமயகுரவர்கள் ஆழ்வார்கள் காலத் தலமல்ல எனினும், கடற்கரைக் கோயில்களான இவ்விரண்டும், மிகப் பழைய அபிமானத் தலங்களைச் சேர்ந்தவை; ஒப்பற்றவை என்பது மட்டும் உண்மை.

திருவான்மியூரை வணங்கிய திருநாவுக்கரசர்,

“ வரைவளர்மா மயிலென்ன மாடமிசை மஞ்சாடும்
தரைவளர்சீர்த் திருமயிலைச் சங்கரனார் தாள்வணங்கி
உரைவளர்மா லைகளணிவித் துழவாரப் படையாளி
திரைவளர்வே லைக்கரைபோய்த் திருவொற்றி யூர்சேர்ந்தார்”

எனும் பெரியபுராணம், அழகான கடல்கரைக் கோயில்களைக் குறிப்பாக நமக்கு அறிவிக்கின்றன.

நகரின் சென்னிபோல் இருந்த கேசவர் கோயில் தான், இப்பதிக்குச் சென்னி நகர் எனும் பெயரை யளித்தது. அது வரவர சென்னை நகர் என்று அழைக்கப் பெற்றது. இவைகள், ஊன்றி ஆய்வார்தம் உரைகள்.

ஆயிரத்து அறுநூற்று நாற்பத்தாறில் நாகபட்டரும், அதற்கு இரண்டு ஆண்டிற்குப்பின் திம்மப்பர் என்பவரும், இக் கோயில்கட்கு மான்யம் வழங்கியுளர்.

அன்று அக்கோயில்களின் தர்மகர்த்தர் பேர் திம்மப்பர்.

## கம்பெனி ஆட்சி

இருநூறு ஆண்டுகட்கு முன் கடல், சென்னை பாரீஸ் கார்னரை யடுத்த அங்கப்ப நாயகர் வீதிவரை வந்திருந்தது.

திருவான்மி யூரிலிருந்து திருவொற்றி யூர்வரை, கடற்கரை ஓரமாக, பரதவர்கட்கு உரிய சிறு சிறு குப்பங்களே அன்று இருந்தன.

இன்று கோட்டை யிருக்கும் இடம், அன்று பரதவர் தலைவனான மதுரேசனுடைய வாழைத் தோட்டமாக இருந்தது.

பிறகு, பிற இனத்தவர்கள், கூட்டம் கூட்டமாக வந்து சென்னையில் குடியேறினர்.

அந்நாளில், ஈஸ்ட் இந்தியா கம்பெனியார், இங்குத் தங்கித் தம் வர்த்தகத்தை வளர்க்க நினைத்தனர். வாய்ப்பான இடமென்று எண்ணி, மதுரேசனுடைய வாழைத் தோட்டத்தை விலைகொடுத்து வாங்கினர். அதில், கம்பீரமான ஒரு பண்டகசாலையைக் கட்டினர்.

அவர்களுடைய வர்த்தகம், வரவரப் பெருகி வளர்ந்தது. அது காரணமாக, மேலும் மேலும் பிற



நாட்டார், சென்னையில் குடியேறிச் சிறப்பெய்தினர். செல்வம் கொழிக்கிறது சென்னையில் என்ற செய்தி, எங்கும் பரவி எழுந்தது.

## அலங்கோலம்

கத்தோலிக்கப் பிரிவினரான போர்ச்சுகீசியர் ஒருபுறம்; புரொடெஸ்டாண்ட் பிரிவினரான டச்சுக்காரர் ஒருபுறம் ஆக, வாணிபத்தில் போட்டியை வளர்த்தனர். இதனால், இடையிடையே ஒருவர்க்கு ஒருவர் நெருங்கிப் போரிட நேர்ந்தது.

இச்சமயம் பார்த்து, திருமயிலையில் இருந்த சாந்தோமை, பிரஞ்சுக்காரர்கள் கடிது வந்து கைப்பற்றினர்.

சில திங்களுள், மைசூரில் இருந்த ஐதர்அலி, சிறந்த பெரும் படைகளுடன் சென்னைக்கு வந்தார்.

திடீரென்று மோதி, பிரஞ்சுக்காரரைத் திணற அடித்தார். களி மிகுத்து சாந்தோமைக் கைப்பற்றினர். அதன் அண்மைப் பகுதிகளை, எரித்து அழியும்படித் தீக்கு இரை யாக்கினர்.

அந்நாளில், ஆங்கிலேயரிடம் பலம் மிக்க குதிரைப் படை யில்லை. அதனால் விளைந்த அவதி பல.

மேலும், சென்னையில் நிலையாகப் பல காலம் இருந்தவர்க்கும், இடை வந்து குடியேறியவர்கட்கும் ஏற்பட்ட உரிமைப் போர், வலங்கை இடங்கைச் சண்டையாக வலுத்தது.

இதன் இடையில், ஐதர் அலி கோயில் விக்ரகங்களைக் கொள்ளை யடிக்கிறார் என்ற செய்தி, காட்டுத் தீப்போல் பெருகி எவர்க்கும் கலக்கம் அளித்தது.

வைதிகர் பலர், தாம் தாம் இருந்து பணி செய்த கோயில்களில் இருந்த உற்சவ மூர்த்திகளை, எடுத்துக்

கொண்டு ஓடினர்; காப்பான நிலமென்று அவர்கள் கருதிய இடங்களில், அம் மூர்த்திகளை வைத்துக் காத்தனர்.

தேச சரித்திரம், இப்பழைய செய்திகளை இன்றும் எவர்க்கும் நினைவூட்டி, வேதனையை மனத்திற்கு விளை விக்கிறது அல்லவா!

## எச்சரிக்கை

கம்பெனியார், சுய நல அடிப்படையில் படைப் பலத்தைப் பெருக்கினர்.

ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்து எட்டாம் ஆண்டில், கோட்டை அரணை, இன்றுள்ள நிலையில் காப்பின் வலி தோன்றக் கட்டினர். வாய்ப்பாக இராணுவத்தை வளர்க்க, விரிவான நிலம் அதற்கு வேண்டி யிருந்தது.

அது கருதி, சென்னை கேசவப் பெருமாள், சென்னை மல்லீச்சுரர்ப் பெயரால் இருந்த இரண்டு கோயில்களையும் இடித்தனர்.

அதனால், சென்னை வாசிகள் எங்கும் கம்பெனி யாரை எதிர்த்தனர். விறு விறுத்து எவ்விடத்தும் கலகம் விருத்தியாயிற்று.

அந்நாளில், செல்வர்கள் சிலர் சென்னையில் இருந் தனர். அவர்கள், மணலி முத்துகிருஷ்ண முதலியார், ஐயாப் பிள்ளை, ரங்கப் பிள்ளை, கோல்லா கன்னையச் செட்டியார், வாசுதேவ நாயுடு, டேர் திம்மப்ப நாயுடு முதலினோர்.

இவர்களுள் பலர், கோட்டையில் சிறக்க உத்தி யோகம் செய்தவர்கள்.

## மணலி முத்துகிருஷ்ணர்

இவர்களுள் சிறந்த செல்வமும், அனுபவ அறிவும் பெருகியவர் மணலி முத்துகிருஷ்ண முதலியார். இவர்,



ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனியில் இருந்த பிக்கோட் கோமகனிடம் மொழித் தரகராக இருந்தவர்.

பிக்கோட் எனும் அந்த வெள்ளையர், தம்மிடம் நெருங்கிப் பழகும் மணலி முத்துகிருஷ்ண முதலியார் அவர்களுடன், ஆலயம் காரணமாக எழுந்த கலகம் அடங்க, அதற்கு ஆன வழிவகைகளைக் குறித்து ஆலோசனை நடத்தினர்.

'அன்பு மிக்க முதலியார்! படை பலம் இல்லாத நாடு, எடுப்பார் கைப்பிள்ளையாகி இடரடையும். படைகள் தங்க இடம் தேவை. அதை ஆலோசித்தே இருந்த கோயில்களை இடித்தோம். ஊன்றி இதை உண ராமல், உள் நாட்டில் குழப்பம் உண்டாகி யிருக்கிறது. எழுந்த கலகத்தை அடக்க என்ன செய்யலாம்?' என்று, விநயமாக பிக்கோட் துரை வினவினர்.

'ஐயா! சேனைகள் தங்க, அண்மையில் வேறு இடம் தேடி யிருக்கலாம். அது செய்யாமல், அவசரப் பட்டு, எங்கள் பரம வைதிகக் கோயில்களை இடித்தது பாதகம். இனி அதையே எண்ணி வருந்தி ஆவது என்? இடித்த கோயில் கற்களைக் கொண்டே, நான் வேறு இடத்தில் அவைகளைக் கட்டி விடுகிறேன். அது தான் இனி செய்யத் தக்கது' என்றார் முதலியார்.

அதைக் கேட்ட பிக்கோட் துரை, அளவிலாத மகிழ்ச்சி யடைந்தார். ஆலயத்தை அமைக்க இடம் அளித்தார். கோயில் நிர்வாகத்திற் கென்று, தம் ஆட்சி யில் வைத்திருந்த சாணிகுளம், பெருமாள் கோயில் தோட்டம், செக்குமேடு, தண்டையார்ப்பேட்டைத் தோட்டங்களைத் தாராள மனதொடு தந்தார்.

புதிதாக ஆலயத்தை அமைக்கும் செலவிற்கென்று 3500 பூவராகன் தருவதாகவும் தெரிவித்தார்.

பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த மணலி யார், மற்றவற்றை ஏற்று, 3500 பூவராகனை மறுத்தார்.

## எழுந்தது கோயில்

தலை சிறந்த ஆஸ்திகரான மணலி முத்துக்கிருஷ்ண முதலியார், கம்பெனியார் தந்த இடத்தில், இன்று இருக்கும் அற்புதமான ஆலயங்கள் இரண்டையும் தன் சொந்தச் செலவில் முன் வந்து கட்டி முடித்தார். இரண்டு மூலஸ்தானங்களிலும், பழைய மூலவர்களையே எழுந்தருளச் செய்வித்தார்.

கண்ட பக்தர்கள் மனம் களித்தது. கோயில் காரணமாக இருந்த கொந்தளிப்பும் அடங்கியது. இது நிகழ்ந்தது 1700-ஆம் ஆண்டு. அப்போது கவர்னராக இருந்தவர் தாமஸ் மன்றோ என்பர்.

அன்று முதல் இந்த ஆலயங்கள் இரண்டின் நிர்வாகமும், அவர் உறவினர் மேற் பார்வையிலேயே வளர்ந்து நடந்து வருகிறது.

வளர்ந்த கம்பெனி ஆட்சியும் வலுத்தது. பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஐதர் அலி முதலியோர் தொல்லைகளும் அடங்கின.

## உற்சவ கேசவர்

ஆலயத்தை அமைத்த போது, சென்னை கேசவர் உற்சவ விக்ரகம் அகப்படவில்லை. மணலி வள்ளல் முதலியார், அது குறித்து விரிவாகப் பல நாளாக விசாரிக்கலாயினர்.

ஐதர் அலியின் கொள்ளைக்கு அஞ்சி, அன்று பணியாற்றியிருந்த பட்டாசாரியார் ஒருவர், ஸ்ரீ கேசவர் விக்ரகத்தைத் திருநீர்மலைக்குக் கொண்டு சென்றதாகச் செய்தி செவியில் விழுந்தது.

உடனே திருநீர் மலைக்குச் சென்றார். அங்கு இது குறித்து வினவலாயினர். சென்னைக் கேசவரை வழிபட்ட பட்டாசாரியார், பரமபதம் எய்திப் பல மாதங்கள் ஆயின என்று அறிந்தார்; வருந்தியது மனம்.



விக்ரகம், திருநீர்மலைக் கோயிலுள் சேர்ந்துவிட்டது என்றும் அறிந்தார்.

## நான்கு பெருமாள்கள்

“அன்னைய குலக்கொடி” என்பது திருமங்கையாழ்வார் திருப்பதிகம். அதனில்,

“நின்றான் இருந்தான் கிடந்தான்
நடந்தாற்(கு) இடமாம் மலையாவது
நீர்மலையே”

என்ற பாசுரத்தில் உள்ள நான்கு பெருமாள்களும், திருநீர் மலையில் இருந்தனர். அவர்களுள் ஒருவர் நரசிம்மர்.

“தாங்காததோர் ஆளரியாய் அவுணன் தன்னை
வீட முனிந்து, அவனால் அமரும்
பூங்கோதையர் பொங்கெரி மூழ்க விளைத்து,
அது அன்றியும், வென்றிகொள் வாள்அமரில்
பாங்காக முன் ஐவரொடு அன்பளவிப்
பதிற்றைந் திரட்டிப் படைவேந்தர் பட,
நீங்காச் செருவில் நிறைகாத் தவனுக்கு
இடமாம் மலையாவது நீர்மலையே”

எனும் பாசுரப்படி, அவர் சிறக்க மங்களா சாஸனம் செய்யப் பெற்றவர்.

அங்கிருந்த நான்கு பெருமாள்களுடன், சென்னை கேசவரும் சேர்ந்திருந்தார். அதை மணலி வள்ளல் முதலியார் அறிந்தார். அன்றிருந்த அத்தல நிர்வாகிகளுடன் இது குறித்து ஆலோசித்தார். ஐவருள் சென்னை கேசவர் யார் என்று அறிய இயலவில்லை. நரசிம்மர், சென்னை கேசவராயிருக்கலாம் என்று நம்பினர். எடுத்து வந்தனர். அவரே உற்சவ

ராக இக்கோயிலில் அமர்ந்தனர். ஆதலின், இங்கு பெருமானை, திவ்ய தேசத்து எம்பெருமான் என்று ஏற்றங் கூறுவோர் இன்றும் உளர்.

பழைய கேசவர், திருநீர் மலையிலேயே தங்கியிருக்கிறார் என்ற செய்தி பிறகே அறிந்தனர். இதுதான் திருவருட் சம்மதமோ என்னவோ என்று, மாபெரும் அமைதியை யடைந்தது மணலியார் மனம்.

இவ்வகையில், இங்கே மூலவர் கேசவர்; உற்சவர் நரசிம்மர். கால மாறுதலையும், கடவுள் திருவுளத்தையும் குறித்து, எவ்வளவோ கருத இடந்தருகிறது இவ்வரலாறு.

மூலவரான கேசவர் திருநட்சத்திரம் - திருவோணம். உற்சவர் நரசிம்மர் திருநட்சத்திரம் சுவாதி.

திருமங்கை மன்னர் அருளிய பெரிய திருமொழி இரண்டாம்பத்து நான்காம் பதிகப் பத்துப் பாசுரங்களும், நித்யானு சந்தானத்தில் இன்றும் இங்கு அனுசரிக்கப் பெறுகிறது. அதிலும் நான்காம் பாசுரமான "தாங்காததோர் ஆளரியாய்" எனும் பாசுரம், அழகிய சிங்கரைப் பற்றியதாகலின், அப்பாசுரம் மட்டும் இரண்டுதரம் சேவிக்கப் பெறுகிறது.

மேலும் திருவாராதனைக் காலத்தில், மந்திர புஷ்பத்தில், பூதத்தாழ்வார் இரண்டாவது திருவந்தாதியில் உள்ள

"பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள்—பயின்றது
அணிதிகழும் சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்"

எனும் பாசுரம், பெருமாளிடத்தில் இருவேளைகளிலும் அநுசந்திக்கப் பெறுகிறது.



## மற்றொரு பக்தர்

ரொட்டல அப்பாயி செட்டியார் என்ற பெய ருடைய ஒரு பிரபு, சென்னையில் இருந்தார். அவர் சென்னை கேசவர் ஆலய அமைப்பையும், விளக்கமான மூர்த்தியின் விசேடத்தையும் ஊன்றிப் பல நாள் உணர்ந்தார். மகிழ்ந்தது அவர் மனம்.

இக்கோயிலில், நியதியாகத் திருவிழா நிகழவேண் டும் என்று நினைத்தார்.

அதற்கு மூலதனமாக, பதினாறாயிரம் வெண்பொற் காசுகளும், திருவிழாவில் நாதஸ்வரக் கச்சேரிக்கு மூலதனமாக பத்தாயிரம் வெண்பொன் காசுகளுமாக, நீதி மன்றத்தின் தீர்ப்பின்படி தேவஸ்தானத்தாரிடம் மனம் உவந்து கொடுத்தார்.

அந்த உத்தரவுப்படி, ஒவ்வொரு ஆண்டிலும் பதி னாயிரத்திற்கு வட்டி ஆயிரத்து இருநூறும், பத்தாயி ரத்திற்கு வட்டி ஆறு நூறும் ஆக, ஆலயக் காப்பாளர் அளிக்கின்றனர்.

அத்தொகையைக் கொண்டு, திங்கள் திரு நட்சத் திரங்களும், ஆனியில் நடைபெறும் பத்துநாள் திரு விழாக்களும் அற்புதமாக நடைபெறுகின்றன.

இப்படிப் பெருங்கொடை செய்த பெரியார், வகையாகப் பலரிடத்தில் வசூலித்த பொருள்கொண்டு, கோயில் மண்டபத்தையும் கட்டினார். சென்னை கேச வர் ஆலயத்தில் இருக்கும் தூண்களுள் ஒன்றில், அந்த அன்பர் ரொட்டல அப்பாயி செட்டியார் திருவுரு, காண் பார் மனம் களிக்கக் கம்பீரமாக இருக்கிறது.

74-17

## ஆலயம் அமைத்த வள்ளல்

# மணலி - முத்துகிருஷ்ண முதலியார் வரலாறு

ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனியில் மூன்று ஆண்டுகட்கு ஒரு கவர்னர். அவர்களுள் ஒருவர் (Lord Pigott) லார்ட் பிக்கோட் என்பவர். அவருடைய துபாஷாக இருந்தவர், நம் மணலி முத்துகிருஷ்ண முதலியார் அவர்கள்.

கோட்டையில் உத்யோகம் என்பது காரணமாக, அவர்க்குக் கோட்டை ஐயா என்ற பெயரும் உண்டு.

அவர் அர்நாளில், கோவிந்தப்ப நாயகர் வீதியில் உள்ள 63-ஆம் எண் திருமாளிகையில் குடியிருந்தார்.

### வருவாய் வந்த வகை

சீமையிலிருந்து வரும் கப்பல் சரக்கு சென்னைக்குப் பத்திரமாக வந்து சேர்ந்தால், கம்பெனியார் ரூபாய்க்குக் காலணு துபாஷுக்குத் தருவர். இடையில் அபாயம் வந்தால், கப்பல் சரக்கு மதிப்புப் பணத்தைத் துபாஷே கட்டவேண்டும். அதுதான் ஒப்பந்த நிலை.

மணலி முதலியார், பரம சிவ பக்தர். அன்று கடற்கரையில் இருந்த இறைவனை, மல்லீசா! கேசவா! எம்பெருமானே ! திருவருள் பாலிக்க என்று பிரார்த்தித்தபடி, வலம் வருவார். எண்ணி இதயத்தால் ஏத்துவார்! அவருடைய ஆழ்ந்த அன்பிற்கு உரியபடி, எம்பெருமான் திருவருள், என்றும் அவர்பக்கல் இருந்தது.



உயர்திரு. மணலி. முத்துகிருஷ்ண முதலியார் அவர்கள்

உத்யோக காலத்தில், அவர் ஒருநாளும் நஷ்டம் அடைந்தது இல்லை. அளவிலாத இலாபமே அடைந்தார்.

## புலமை ஆதரிப்பு

அமுதினும் இனிக்கும் அருந்தமிழின் சுவையை அறிந்தார். முதிர்ந்த இசைக்கடலில் மூழ்கினர். நாடக நயத்தின் நலமுணர்ந்தார். இங்ஙனம் முத்தமிழ் நலம் உணர்ந்த முதலியார், கடையெழு வள்ளல்கட்குப் பின், கனிந்து உயர்ந்த பெருங்கொடையாளர். இப்படிப் பேரும் புகழும் பெற்றூர். அன்றிருந்த புலவர் பெருமக்கள், இவர் மூலம் பெற்ற ஆதரவுகட்கு அளவில்லை.

## இராம நாடகம்

இவர் காலத்தில் இருந்தவர், சீகாழி அருணசலக் கவிராயர். கம்பரைத் தழுவி, இவர் பயன் தரும் இராம நாடகக் கீர்த்தனையைப் பாடினர். அது கவி நலம் சிறந்த ஒரு காப்பியம். அதை மணலி முத்து கிருஷ்ண முதலியார் திருமுன் அரங்கேற்ற வேண்டு என்று கவிராயர் எ.ண்ணினர். வளஞ் சிறந் சென்னைக்கு வந்தார்.

சித்திதரு திறவல்லி புத்திதரு திறவல்லி
தேவர்கள் வணங்கு வல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணை யாலே
சத்யவா சகனென்று பூமண்ட லாதிபர்கள்
தாமெங் கணும்து திக்கும்
சகலபா ஷாங்புண மணலிமுத் துக்ருஷ்ண
சதுரநீ வாழி கண்டாய் !
த்துமலர்க் குவளைநான், மதியம்நீ ; செஞ்சாலி
நான்,கருவி மழைமே கம்நீ ;

களிணம்கான், பரிநீ ; பிள்ளைநான், அன்னைநீ ;
நான்கவிஞன், வழுதி நீகாண் ;
சுத்தமுள ராமா யணத்தைக் கொண்டுனது
சமுகமது பெற வருகிறேன்
சொற்பொருள திக்தளவு சொல்லுவேன் ; கேட்கவே
துணையாக வேணும் நீயே !"

என்று, ஒரு சீட்டுக் கவி பாடினுர். அருமைப் பக்த சிகாமணியான முதலியாரிடம் அதை அனுப்பினுர்.

### கனகாபிஷேகம்

அதைக் கண்ட முதலியார் களிப்பெய்தினுர் ; பல பிரபுக்களையும் புலவர்களையும் ஒன்று கூட்டினுர். அருமையான இராமாயணம் அரங்கேறச் செய்தார். கவிராயர்க்கு வாரிப் பொருளை வழங்கினுர். மகிழ்ந்தது கவிராயர் மனம்.

"கனம்தந்தான் கனகாபி டேகம் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத் தந்தான்
மனம்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனம்தந்தான் இராமகதை எவர்க்கும் தந்தான்
எனைஇராமா யணக்கவிஞன் எனப்பேர் தந்தான்
அனம்தந்தான் மணலிமுத்துக் கிருஷ்ண பூபன்
அகம்தந்தான் இருமையிலும் சுகந்தந்தானே !"

எனும் கவி, மகிழ்ச்சி மழையாகப் பொங்கி வழிந்தது. தந்தான் தந்தான் என்று தந்தனம் பாடியது சிந்தை.

### விநாயக புராணம்

மணலி முத்துக்கிருஷ்ண முதலியார் காலத்தில், கவிராட்சசர் எனப்பெறும் கச்சியப்ப முனிவர் பாடிய அருமை விநாயக புராணம் அரங்கேறியது.



விநாயக புராணத் துதிகள் ஒவ்வொன்றும், சென்னை மல்லீச்சுரர் கோயில் துதிகளே. அப்பாடல் களை, சிறந்த அந்த மூர்த்திகளைக் குறித்த இடங்களில் சேர்த்திருக்கிறோம். அக் கவிகள் ஒவ்வொன்றும், உள்ளம் அள்ளும் தகுதியன.

துபாஷ் பெரிய முத்துக்கிருஷ்ண முதலியார் காலம் வரை, இருகோயில்களின் நிர்வாகங்கள் நலமாக இனிது நடந்தன.

### மக்கள் பேறு

அவர்க்கு, பேறுன மக்கள் நால்வர் பிறந்தனர். அவர்கள் சின்னையா, பொன்னையா, தம்பியப்பா, சோலையப்பா எனப் பெறுவர்.

உயர்திரு முத்துக்கிருஷ்ண முதலியார்க்குப் பிறகு, ஆலய நிர்வாகம், அவரது முதற் புதல்வராக எண்ணப் பெற்ற மணலி சின்னையா முதலியார் கைக்கு மாறியது.

### சின்னையா

இவர் சிறந்த குதிரை வீரர். காலை ஆறு மணி முதல், பகல் பன்னிரண்டுவரை சிவபூஜா துரந்தரர். சிதம்பரத்தும், ஸ்ரீரங்கத்திலும் இவர்க்கு அதிக அன்பு உண்டு. இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந் தவர். இயல் இசைப் புலவர்கள் பலரை இனிது ஆதரித்தவர். முத்துஸ்வாமி தீட்சிதரின் தந்தையான இராமசாமி தீட்சிதர், சின்னையா முதலியாரிடம் வித்வானுக ஏறக்குறைய இருபது ஆண்டுகள் இருந்தார். நூற்றெட்டு இராக தாள மாலிகை எனும் சிறந்த உருப்படியை அவர் பூர்த்தி செய்த காலத்தில், முதலியார் அவர்க்குக் கனகாபிஷேகம் செய்து கவுரவித்தார்.

கருநாட இசை யிலக்கியத்தில் இதுவே மிக நீண்ட உருப்படி யாகும். பயன் தரும் இதை ஒரு முறை

பாடுவதற்கு, இரண்டு மணி நேரம் பிடிக்கும். முதலியாரின் முயற்சியால்தான், இராமசாமி தீட்சிதரின் கடைசிப் புத்திரரான பாலசுவாமி தீட்சிதர், சென்னை கோட்டையில் ஓர் ஐரோப்பிய சங்கீத வித்வானிடம் பிடில் வாத்யம் பயின்றார். பிறகு அவர், கருநாடக இசைக்கு ஏற்றபடி பிடிலைச் சுருதி செய்து வாசிக்கத் தொடங்கினார்.

எட்டையபுரத்தில் பாலசுவாமி தீட்சிதர், 1825ஆம் ஆண்டு சமஸ்தான வித்வானாக அமர்வதற்கு அவருடைய பிடில் வாத்யத் தேர்ச்சியே காரணமாக இருந்தது. கருநாடக இசை வரலாற்றில், முதன் முதலில் பிடிலைச் சாதகம் செய்து வாசித்தவர் ஸ்ரீ பாலசுவாமி தீட்சிதரே ஆவர்.

திருவாரூர் முத்துஸ்வாமி தீட்சிதரும், இராமசாமி தீட்சிதரின் புதல்வரே. அவர் ஹம்ஸத்வனி என்ற இராகத்தைக் கற்பனை செய்தவர். அருணாசலக் கவிராயர்க்கு உதவிய தம் அருமைத் தந்தையைப் போலவே சின்னையா முதலியாரும், முத்துஸ்வாமி தீட்சிதர்க்குக் கனகாபிடேகம் நடத்தி அவரைக் களிக்கச் செய்தார்.

திருவாரூரில் பிறந்து, தஞ்சாவூரில் கல்வியும் இசையும் கற்று வளர்ந்த முத்துஸ்வாமி தீட்சிதர், மணலி குடும்பத்தின் ஆதரவில் காசிக்குச் சென்றார். அங்கே ஐந்து ஆண்டுகள் இருந்தார். அவ்விடத்தில் வேதம் முதலிய வடமொழி நூற்களில் அருமையான தேர்ச்சியடைந்தார். அங்கிருந்து மீண்டபின், மணலியில் வந்து தங்கிப் பலகாலம் வாழ்ந்தார்.

### சிவஞான சுவாமிகள்

பதினெட்டாம் நூற்றாண்டினரான ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள், சிற்றிலக்கியத்திலும் பேரிலக்கியத்திலும் புதுத்துறை கண்ட பெரும் புலவர். வடமொழிக் கருத்துகளைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.



திருவாவடுதுறை ஆதீனத்தின் அடியவர் சிலரைக் கண்ட இவர், புனித துறவை இளமையிலே பூண்டவர்.

சுசீந்திரம் ஈசான்ய மடத்துச் சின்னப்பட்டம் ஸ்ரீ வேலப்ப தேசிகரிடம், சமய தீட்சையும் சைவ சந்நியாசமும் பெற்றவர்.

இவருடைய தகுதியறிந்து, ஆசிரியர் இவர்க்கு நிர்வாண தீக்கையும் செய்து, சிவஞானத் தம்பிரான் எனத் தீட்சா நாமமும் சூட்டினர்.

இவரது அருமையை அறிந்த மணலி சின்னையா முதலியார் அவர்கள் கேட்டுக் கொண்டபடி, சிவஞானயோகிகள் திருவொற்றியூரில் வந்து தங்கினர்.

இங்கு வேத சிவாகமங்களையும், பௌஷ்கர விருத்தி, ம்ருகேந்திர விருத்தி, சிவாக்ர பாஷ்யம் முதலியவைகளையும், வடமொழி வல்லாருடன் இருந்து ஆராய்ந்தார்.

பிறகு சிவஞான போதத்திற்குத் திராவிடமா பாடியத்தை அருளினர். இதனால், திராவிடமா பாடியச் சிவஞான யோகிகள் எனவும், மாதவச் சிவஞான யோகிகள் எனவும் பெயர் பெற்றார். மாபாடிய வெளியீட்டிற்கு இப்படி வழிசெய்தவர், மணலி சின்னையா முதலியார் அவர்கள். பயனை இவ் வரலாற்றை, இன்று எவரும் பாராட்டுகின்றனர்.

இவருடைய நகையையும், கல்வி நலத்தையும், சிவபக்தியையும், அஞ்சா நெஞ்சத்தையும் குறித்த வரலாறுகட்கு அளவில்லை. அவர் இருந்த காலத்தில் அவரை அறியாதார் இல்லை. அவரைத் தரிசிக்க அவாவியவர் அளவிலர். ஒன்றுமட்டும் இங்குக் குறிப்பிடுவம்.

## வள்ளலும் அரசவள்ளலும்

தஞ்சாவூர் மகாராஜா அமர்ஸிங் எனும் பெயரினர். அரசர் ஒருநாள் புத்தூர் வழியாகப் பல்லக்கில் போகிறார். எதிராகச் சின்னையா முதலியார் பல்லக்கில் வருகிறார்.

அரசர்க்கு எதிராக எவரும் பல்லக்கில் போவது கூடாது. எதிர்பாராது சேர்ந்தால் இறங்கிவிட வேண்டும். அன்றைய நிலை அப்படியிருந்தது. சின்னையா முதலியார் இறங்காதே சென்றார். அது கண்ட மன்னர்க்கு ஆத்திரம் பிறந்தது.

யார் அது? விசாரி என்று ஏவலன் ஒருவனை ஏவினர்.

வேந்தர் பணியாளன் விரைந்தான்.

ஐயா! தாங்கள் யார்?

ஏன் கேட்கிறாய்?

வேந்தர் வினவ ஏவினர்.

அப்படியா! மணலி சின்னையா முதலியார் என்று போய்ச் சொல் என்றார் நம் வள்ளல்.

ஏவலன் விரைந்தான். அரசரிடம் போய்ப் பெயரை அறிவித்தான். அப்படியா என்று பல்லக்கில் இருந்து அரசர் குதித்தார். எதிர் வந்த பல்லக்கை விரைந்து அணுகினார்.

அதை யறிந்த முதலியார், தாமும் பல்லக்கை விட்டிறங்கினார்.

ஒருவரை ஒருவர் தழுவினர். தங்களைக் காணப் பலநாள் எண்ணியிருந்தேன். என் எண்ணம் இன்று தான் நிறைவேறியது என்று, நெடுநேரம் முதலியாருடன் அளவளாவி மகிழ்ந்தார்.

இந்தச் சந்திப்பின் அடையாளமாக, தஞ்சை மன்னர், முதலியார்க்குப் புத்தூரைத் தானமாகத்



தந்தார். குதூகலத்தோடு எவர்க்கும் கொடுத்ததன்றி வாங்கிப் பழக்கம் இல்லாத வள்ளல், அதை என்றும் தர்மத்திற்கு என்று எழுதி வைத்தார்.

கர்ன பரம்பரையாக இப்படியே அவருடைய வரலாறுகள் பல, என்றும் எங்கும் எவராலும் சொல்லப்படுகின்றன. அவைகளை யெல்லாம் தொகுத்து எழுத ஒருகாலம் வரும். வள்ளல்கள் வரலாற்றை எழுதி வைக்க, நலஞ் சிறந்த திருவருள் உதவும் என்று நம்புகிறது நமது மனம்.

## வீடுபேறு

ஒருநாள் இவர், சிதம்பரம் ஸ்ரீ நடராசர் சந்நிதியுள் நுழைந்தார். தீட்சிதர்கள் பலர் கண்டு திடுக்கிட்டனர். 'முறையல்ல! இது முறையல்ல' என்று அவர்கள் அவரைத் தடுக்க ஓடி வந்தனர். வித்தக முதலியார், அவர்களினும் முந்தி விரைந்தார். புனித சந்நிதியுள் புகுந்தார்.

ஆத்திரம் கொண்ட தில்லை அந்தணர்கள், புனிதர் அவரைப் பிடிக்க, விரைந்து சந்நிதியுள் புகுந்தனர். ஆ! ஆ! அவர் அகப்படவில்லை. வியந்தனர். மேனி வியர்த்தது.

மாயமாக எப்படி மறைந்தார்? உருவெளித் தோற்றமா? இப்படியும் ஒரு பிரமையா? என்று பலர் பலவாறு பேசினர்.

இரண்டொரு நாளில், மணலி சின்னையா தேக வியோகம் ஆயினர் என்று, சென்னையிலிருந்து வந்தது செய்தி. அவர் உயிர் நீத்த நேரமும், சிற்சபேசர் திருமுன் புகுந்த நேரமும் ஒன்றுதலை எண்ணி, உள்ளம் எவரும் உருகினர். வாயார மணலி வள்ளலை வாழ்த்தினர்.

## தர்மங்கள்

மணலி சின்னையா முதலியார், கல்வியிற் சிறந்தார். கற்றவரை ஆதரித்தார். யோக ஞானம் கைவரப் பெற்றார். சிறந்த சிவபக்தரான அவர் பெயரால், சிதம்பரத்தில் அர்த்த ஜாமக் கட்டளையாக, பொங்கல், தேங்காய்ச் சாதம்.

ஸ்ரீரங்கத்தில், அர்த்த ஜாமத்தில் பால்; காலையில் ரொட்டி வெண்ணெய் நிவேதனம் முதலியன, நலக்க இன்றும் நடைபெறுகின்றன.

## சோலையப்பர்

சின்னையாவின் சகோதரர், சோலையப்ப முதலியார். இவரும் வழிமுறைப்படி வளர்ந்த வள்ளல் பெருந்தகை. புலவர்கட்கு உதவிப் புகழ்பெற்ற புனித சீலர்.

அவர் காலத்தவர் சவ்வாதுப் புலவர். அவர் இவர் கொடை நடை கண்டு குதூகலித்தவர்களுள் ஒருவர். இதோ பாருங்கள் அவர் கூறுவதை!

"அலையான் கவடுபடான் ஆருடனும் காயான்
இலையென்ப(து) ஓர்நாளும் இல்லை—கலைசேர்ந்த
சாலைமுத்துக் கிருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச்
சோலையென்று சொன்னவரார் சொல்?"

வினவுரையான இப்பாடலை எத்தனை தரம் படித்தாலும், நாவில் நீர் ஊறுகிறது. கிக்கிளு கிளுகிளு என்று இன்பம் அடைகிறது இதயம். பயனுள பாடல்கள் இப்படிப் பலவுள. வள்ளல் சின்னையா முதலியார் அவர்கட்கு, நன்மை மிக்க மக்கள் நால்வர். அவர்கள்

(1) சின்ன முத்துக் கிருஷ்ண முதலியார்
(2) இலட்சுமண முதலியார்

82-B



உயர்திரு. ராவ்பகதூர் - மணலி. சரவண முதலியார் அவர்கள்



உயர்திரு. மணலி. கிருஷ்ணசுவாமி முதலியார் அவர்கள்

(3) அம்மை யம்மாள்

(4) இராஜம்மாள் எனப் பெறுவர்.

இவர்கள் முறையே சென்னை கேசவர், சென்னை மல்லீசர் கோயிலை நிர்வகித்தனர். அவர்கட்குப் பின், இராஜம்மாள் மைந்தரான வைத்தியலிங்க முதலியார், நிர்வாகப் பொறுப்பை. ஏற்றிருந்தார். அந் நாளில், சென்னையை அடுத்த மாங்காடு கிராமம் முழுவதும் இவர்க்கு உரியதாக இருந்தது.

அவர்க்குப் பின், அவருடைய மருகரான மணலி இராமகிருஷ்ண முதலியார் நிர்வாகத்தில் கோயில் இருந்தது. அவர்க்குப் பிறகு, அவருடைய இரு மக்களான (1) சரவண முதலியார், (2) கிருஷ்ணசாமி முதலியார் எனப் பெறும் இருவரும் நிர்வகித்தனர்.

### சரவணர் கைராசி

கும்பகோணம் பிடில் இராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் இசைத்திறம் கண்டு மகிழ்ந்த திரு. சரவண முதலியார் அவர்கள், ஏருழவுச் சின்னமிட்ட ஒரு மெடலை, அவர்க்குப் பரிசாக அளித்தார். அவர் கைராசிதான், என்னை உயர்ந்த நிலபுலங்கட்கு உரியவனாக உயர்த்தியது என்று, பிடில் பிள்ளையவர்கள், இன்றும் போற்றி அவரைப் புகழ்கிறார்.

இந்த சகோதரர்கள் காலத்தில் கட்டப்பெற்ற சென்னை கேசவர் மண்டபத் தூண்களில், இவர்கள் இருவர் உருவமும் சிற்ப உருவில் இருக்கக் காண்கிறோம்.

திரு. கிருஷ்ணசாமி முதலியார்க்கு இரண்டு மக்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவர், மணலி சீநிவாச முதலியார், B. A. எனப் பெறும் பெரியார்.

பரம சாந்தமான திருமுகம். குளிர்ந்த புன்னகை. கனிந்த மொழி. தெளிந்த மனம். அமைதி நடை.

எவரையும் அறிவார். எதையும் உணர்வார். இல்லை யென்று சொல்லமட்டும் அறியாத ஒருவர், மணலி திரு. சீநிவாசர்.

மணலி குடும்பம் தமிழ்வளம் உடையது. ஆத்திகத் தொடர்பு அதிகம் கொண்டது. வாக்கு மனம் காயம் மூன்றும் ஒன்றுபட அமைந்தது. சொல்லளவில் அன்றி, எதையும் செயலில் செய்வது செம்மை எனும் அறவோர் உரைகளை, திரு. சீநிவாச முதலியார் அவர்கள் காலத்தில்தான் அதிகம் சென்னை அறிந்து கொண்டது. காரெம்ஸ், காண்ட்ராக்ட் பிரிட்ஜ் ஆடுவதில் உவகை அதிகம் இவர்க்கு உண்டு. M. U. C. கிளப்பில் இறுதி வரை ஆயுள் அங்கத்தவராகவும், கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகவும் இருந்தார். முதலெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் வரலாறுகள் கதையிற் கண்டவை; மணலி குடும்ப வரலாறு, இன்று எவரும் கண்ணிற் காண்பவை.

மணலி அறிஞர் சீநிவாச முதலியார் அவர்களது வாழ்க்கைத் துணைவியார், இராணி அம்மையார் எனும் பெயரினர். இவர், பெயர்க்கு ஏற்ற பேரரசி. இத் தம்பதிகள் மனம் ஒத்துச் செய்து வந்த பேரறத்தின் பயனாகப் பிறந்த நலம் சிறந்த மக்கள் நால்வர்.

அவர்கள், இராமகிருஷ்ணன், பார்த்தசாரதி, வீரராகவன், சரவணன் எனும் பெயரினர்.

## திறம்படச் செய்த செயல்கள்

உயர்திரு சீநிவாசர், பதினோராவது ஆலய அறக் காப்பாளராக இருந்து, செய்த ஒவ்வொரு தொண்டும் சிறந்தவை.

இவர் காலத்தில், ஆலயத்தில் சில மண்டபங்கள் அமைந்தன.



ஆலய வருவாயி லிருந்து, கலாசாலை மாணவர்க்கு, ஒரு ஹாஸ்டலை கிண்டியில் அமைத்தார்.

அதனுடன், மணலி இலட்சுமண முதலியார் ஏற்படுத்திய அறநிலயங்களின் பரம்பரைக் காப்பாளராக இருந்து பணியாற்றினர்.

பல மாணவர்கட்கு உபகாரச் சம்பளம் உதவினர்.

கோவிந்தப்ப நாயகர் தெருவில் இருந்த மணலி ஹாஸ்டல், லட்சுமண முதலியார் எஸ்டேட்டிற்குச் சொந்தமானது. அது ஆதியில், தேசாந்திரிகட்கு என்று இருந்தது.

பிறகு பல பிரமுகர்கள் முயற்சியால் மாணவர் ஹாஸ்டலாக மாறியது.

மணலி எண்டோமெண்டிற்குச் சொந்தமான நிலங்களை, நீதி மன்றத்தில் வழக்கிட்டு, இன்னசொத்து தர்மத்திற்கு ; இன்ன சொத்து சொந்தத்திற்கு என்று பிரித்து வெற்றி பெற்ற பெருந் தகுதி, மணலி திரு. சீநிவாச முதலியார் அவர்கட்கே உரியது.

இவர்கள் காலத்தில்தான், கோவிந்தப்ப நாயகர் வீதியில் மிகப் பெரிய ஹாஸ்டல் கட்டப் பெற்றது. அதைத் திறந்துவைக்கும் புனித செயலை, தம் அருமைக் குமாரர்கட்கு அளித்து, வள்ளல் சீநிவாசர், இறைவன் திருவடி நிழலை யடைந்தார்.

குறித்த இடத்தில் ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்ற மாணவர் விடுதி, 1956 நவம்பர் முதல் தேதி வியாழன் மாலை ஏழு மணிக்கு, ராஜா சர். M. A. முத்தையச் செட்டியார் (செட்டிநாட்டு ராஜா) அவர்களின் தலைமையில், அறநிலையப் பாதுகாப்பு மந்திரி கனம் B. பரமேஸ்வரன் B.A. அவர்களால் புதிய கட்டிடத்தில் திறந்துவைக்கப்பெற்றது.

இப்புனிதமான செயல் நிகழ்ந்த தீபாவளி தினம், புண்ணிய தினம்.

## ஹாஸ்டல் செய்தி

இந்த ஹாஸ்டலிலிருந்து நூற்றுக் கணக்கான டாக்டர்கள், பில்டிங் எஞ்சினியர்கள், டெக்னிக் எஞ்சினியர்கள், லாயர்கள், இன்னும் பல துறைகளிலுமாகப் பலர் இன்று பிரகாசிக்கின்றனர்.

பலர் கஜட்டெட் ஆபீஸர்களாகவும் இருக்கின்றனர். சென்னையில் மட்டுமன்றிப் பலர் ஆந்திராவிலும் உளர்.

பலர் தேவாலய, சத்திர நிர்வாகிகளாகவும் இருக்கின்றனர்.

1800-ஆம் ஆண்டில் ஹாஸ்டலை ஆரம்பித்து வைத்தவர் மணலி முத்துகிருஷ்ண முதலியார்.

ஆதியில் இதனில் வைதிகப் பிராமண போஜனம் நடந்தது. வர வர அது ஒழுங்காக நடைபெருமையால், சரவண முதலியார், கிருஷ்ணசாமி முதலியார் இருவரும், இதை பிராமண மாணவர் விடுதி யாக்கினர். அதுவும் ஒழுங்காக அமையவில்லை.

திரு. சீநிவாசமுதலியார் காலத்தில், காலநிலைக்குத் தக்கபடி இந்த உணவு விடுதி, பிற இன மாணவர்க்குமாக மாற்றி யமைக்கப் பெற்றது.

முதல் பாரத்திலிருந்து ஆறும் பாரம் வரை படிக்கும் எல்லாக் குலத்துப் பிள்ளைகட்கும், இந்த விடுதியில் இன்று இடம் உண்டு.

## மணலி இராமகிருஷ்ண முதலியார், B. A.

இவர் திரு. சீநிவாச முதலியார் அவர்களுடைய முதல் குமாரர். விஷயம் தெரிந்தவர். கனிந்த மொழியினர். பெரியோர்களிடம் விசுவாசம் கொண்டவர். கைராசி யுடையவர் என்று இன்று எவரும் சொல்லக் கேட்கிறோம். முன்னோரைப் பின்பற்றி இன்று இவர்



பார்வையில் நடைபெற்று வரும் திருப்பணிகள் ஒவ்வொன்றும் அருமை யானவை.

### பணிமுகம்

(1) சீகாழிக்குச் சமீபமான புத்தூரில் அன்ன சத்திரம் ஒன்று; இதனில் பள்ளி மாணவர்கள் உணவு பெறுகின்றனர்.

(2) சிதம்பரத்தில் ஸ்ரீ நடராசர், கோவிந்தராசர் சந்நிதிகளில், அபிஷேகக் கட்டளைகள்; பாவாடைகள்.

(3) கோவிந்தராசர் சந்நிதியில் மார்கழியிற் பிரஸாதம்.

(4) ஸ்ரீரங்கத்தில் சந்நிதி முன் வேத பாடசாலை.

(5) ஆச்சாள் புரத்தில், திருஞான சம்பந்தர் திருமண விழா.

(6) சீகாழியை யடுத்த திருநகரியில், கார்த்திகை மாதக் கிருத்திகைத் தினத்தில், திருமங்கை மன்னர் சாத்துமுறை உற்சவம்.

(7) மணலி ஹாஸ்டல். (8) கிண்டி ஹாஸ்டல்.

(9) சென்னை கேசவர், சென்னை மல்லீச்சுரர் திருக்கோயில் நிர்வாகம் முதலியன, இன்று இவர் பார்வையில்தான் நடைபெறுகின்றன.

சென்னை பழைய வண்ணை சர். தியாகராஜர் காலேஜில், சயின்ஸ் பிளாக் ஒன்றை, தம் அருமைத் தந்தை நினைவிற்கு அடையாளமாக, ஒரு தனிக் கட்டிடத்தை அமைக்க ரூபாய் இருபதாயிரம் உதவினர்.

இவர் காலத்தில் சென்னை கேசவர், மல்லீச்சுவரர் தேவஸ்தான மானேஜராக இருந்தவர் அறிஞர் T. H. விவேகானந்தம் பிள்ளை, B.A., L.T. அவர்கள். மிகப் பெரிய தலங்களில் இருந்து பணியாற்றிய பிள்ளையவர்கள், உயர்ந்த அனுபவம் உடையவர். கல்வியும் கேள்வியும் அவர்க்குக் கைகொடுக்கின்றன. வளமான பணி செய்ய, அனுபவம் வழி காட்டுகின்றது.

உயர்திரு. பிள்ளையவர்கள், டிரஸ்டியான இராம கிருஷ்ண முதலியார் B.A. அவர்கட்கு உறுதுணையாகி, அவருடன் சேர்ந்து செய்த திருப்பணிகள், அளவிட முடியாத அருமை யுடையவை.

**பயனுகச் செய்த பணிகள்**

(1) சென்னை கேசவர் திருக்கோயிலில், பளபள என்றுள சலவைக் கல்லில் திருப்பாவையைப் பதித்தனர்.

(2) திருப்பாவை முப்பதையும், கிராமபோனில் அமைத்தனர். அறநிலயப் பாதுகாப்புத் துறை ஆணையாளர் உயர்திரு. A. உத்தண்டராமன் பிள்ளை I.A.S. அவர்கள் ஏற்பாட்டால், இன்று தமிழகம் முழுதும் அத் திருப்பாவை, உளத்தைக் கவரும் நிலையில் ஒலிக்கின்றது.

(3) மல்லீசர் கோயில் அநுபூதி மண்டபத்தில், கந்தர் அநுபூதி, பளபளத்த சலவைக் கல்லில் பதிக்கப் பெற்றது.

(4) திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப் பெற்றது.

(5) இந்தக் கோயில் வரலாற்று நூலும் வெளி வருகின்றது.

(6) ஸ்ரீ ஆண்டாளுக்கு வெள்ளிக் கவசம் அமைக்கப் பெற்றது.

(7) மல்லீஸ்வரர் கோயிலுக்கு இரு வெள்ளிக் கட்டியம் சாத்தியது.

(8) பட்டுப் பரிவட்டம்.

(9) மல்லீச்சுரர் கோயில் தள வரிசை.

(10) அருணகிரி நாதர் பிரதிஷ்டை.

(11) மூன்று கூகாளம் எனும் மேற்கட்டி.

(12) மல்லீச்சுரர் திருப்பள்ளியறை தலையணை மெத்தை தைத்தது.



(13) மல்லீச்சுரர்க்குப் பல்லக்குப் பன்னங்கு எனும் மேற்கட்டி.

(14) மல்லீச்சுரர்கோயில் கொடி மகர தோரணம் தைத்தது.

(15) தேர்ச்சீலை. (16) குடை. (17) எலக்ட்ரிக்.

இவ்வளவும் உயர் திரு. T. H. விவேகாநந்தம் பிள்ளை யவர்கள் தேவஸ்தான மானேஜராக இருந்த கால நிகழ்ச்சிகள். இன்னும் பலவுள.

மணலி திரு. இராமகிருஷ்ண முதலியார் B. A. அவர்கள், இளம் பருவத்தில் இத்துணைப் பொறுப்பான திருப்பணிகளை ஏற்று நடத்த, இயற்கை உதவி யிருக்கிறது என்று எண்ணி இறும்பூதெய்துகிறோம்.

முன்னோர் செய்த போறங்கள், அவர்க்குப் பக்க பலமாகி, இப்படியே என்றும் கை கொடுப்பதாக !

மணலி குடும்பத்தின் மணிகளானவர் இரு மருகர்கள். அமுதினும் இனிக்கும் அருந்தமிழ்க்கும், சைவ சித்தாந்தத்திற்கும், வாழ்நாள் முழுதும் அருந் தொண்டாற்றி அண்மையில் சிவபதம் எய்திய ம. பாலசுப்ரமண்ய முதலியார் ஒருவர்.

மற்றொருவர், புனிதர் என்று எவரும் புகழ்ந்து பாராட்டும் உயர்நீதி மன்ற வழக்கறிஞர் மயிலைவாசி மாடம்பாக்கம் சுப்ரமண்ய முதலியார் அவர்கள். இவர்கள் இருவரும், நாடு மறக்கமுடியாத பெரு மக்கள். ஓம்.

புனித தெய்வம் துணை புரிவதாக !

வாழ்க உலகம் !

வாழ்க மணலி வள்ளல்கள் !!

வாழ்க தெய்வத் திருவருள் !!!

வணக்கம்.

ஸ்ரீ

# ம் தேவஸ்தான வருமானங்களின் விவரம்

உபய தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான தேவராஜ முதலி தெரு, நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் ரோட்டு, தோடித் தெரு-இவைகளில் உள்ள கட்டிடங்கள் மூலமும், பூக்கடை வெற்றிலைக்கடை மூலமும், வருடம் 1-க்கு சுமார் ரூபாய் 125800-0-0 வருமானம் கிடைக்கிறது.

ஜார்ஜ் டவுனில் உள்ள பெருமாள்கோவில் தோட்டங்கள் ; மண்ணடி சமீபத்திலுள்ள அட்டபாளையம் ; புரசையம் பதியிலுள்ள சென்னை கேசவப் பெருமாள் ஹட்டிங் கிரவுண்டு முதலிய இடங்களில் கட்டிட வாடகையும்; நிலவரியுமாக வருடம் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 21800-0-0 வருமானம் கிடைக்கிறது. மேற்கண்டவை யாவும் ஸ்ரீ சென்னை கேசவர், ஸ்ரீ சென்னை மல்லிகேஸ்வரர் தேவஸ்தானங்களின் சொந்த சொத்துக்களாகும். கவர்ன்மெண்டிற்கு அசல் ரூ. 349000 கடன் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் வருடவாரியில் சுமார் 11000-0-0 வட்டி வருகிறது.

அம்மையம்மாள் என்பவர், தண்டையார்ப் பேட்டையில் பெருமாள் வன போஜனத்திற்காகப் பெரியதோட்டம் ஒன்றை அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய அறத்தின் மூலம், வருடம் ஒன்றுக்கு சுமார் ரூ. 2000க்குமேல் வருமானம் கிடைக்கிறது.

வருஷந்தோறும் ஸ்ரீமான் மணலி லக்ஷ்மண முதலியார் அவர்களுடைய தர்ம பரிபாலனத்திலிருந்து நடந்து வரும் உற்சவங்களின் விவரம் :—



I. **ஸ்ரீசென்னை மல்லீஸ்வரர் கோவில் விழாவில்**

(1) பங்குனி பிரம்மோற்சவத்தில் திருத்தேர்.
(2) ,, புஷ்பப் பல்லக்கு.
(3) வைகாசி வசந்த உற்சவம் 9 நாள்.

II. **ஸ்ரீ சென்னை கேசவப்பெருமாள் கோவில் விழாவில்**

(1) சித்திரை பிரம்மோற்சவத்தில் திருத்தேர்.
(2) ,, புஷ்பப் பல்லக்கு.
(3) அத்தியாபகம் வேத பாராயண ஸ்வாமிகளுக்கு ததியாராதனை.
(4) வைகாசி வசந்த உற்சவம் 5 நாள்.
(5) ஆடி மாத ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணத்தன்று வரிசை (சீர்) அனுப்புதல்.
(6) பங்குனி ஸ்ரீ ராம நவமி உற்சவம் 5 நாள்.

மேற்கண்ட உற்சவங்கள் தவிர, ஷை தேவஸ்தானத்திற்கு ரூபாய் 10000/- நன்கொடையாக வருஷந்தோறும் அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ சென்னை மல்லீஸ்வரர் ஸ்ரீ சென்னை கேசவப் பெருமாள் தேவஸ்தான வருவாயிலிருந்து ஷை ஈஸ்வரர் பெருமாள் பெயரால், ஸ்ரீமான் மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்களின் தகப்பனாரான ஸ்ரீமான் மணலி ஸ்ரீநிவாச முதலியார் காலத்திலிருந்து, சுமார் 150 பிள்ளைகள் கல்லூரியில் படிக்க வேண்டி, உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து உதவி வருகிறார்கள். ஷை ஹாஸ்டல் கிண்டி ரயில் நிலையத்திற்கு எதிரில், சுமார் 2 லக்ஷ ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஆங்கிலம் படிக்கும் கல்லூரி மாணவர்களுக்கும், ஒவ்வொரு வாரத்திலும் கீதை, திருக்குறள் முதலானவைகளும் போதிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ

## தேவஸ்தானத்தில் உள்ள தர்ம சொத்துக்களி லிருந்து கோயில் நிர்வாகிகள் நடத்திவரும்

# திருவிழாக்கள்

1. ஸ்ரீ சங்கராசாரியார் டிரஸ்டு
திரு நட்சத்திரங்களில் உற்சவங்கள்.

2 சேஷாசல ராஜு டிரஸ்ட்டு
ஈஸ்வரர் அரைக்கட்டு உற்சவமும், அபிஷேகமும், தேசாந்திரி ததியோதனமும்.

3. கோகிலாம்பாள் டிரஸ்டு
தேசாந்திரி ததியோதனம்; துவாதசி ததியாராதனை 8 பேர்க்கு.
ஸ்ரீ மணவாள மாமுனிகள் உற்சவத்தில் திருமண் காப்பில் திருத் தளிகை.

4. ஸ்ரீ மாணிக்கம் பிள்ளை டிரஸ்டு
பெருமாள் பவித்ர உற்சவத்தில் காலை உற்ஸவம்.
,, பிரமோத்ஸவம் 5-வது நாள் காலை.
,, ,, 8-வது ,, மாலை.
,, வஸந்தோற்ஸவம் 5-வது நாள்.
ஈஸ்வரர் வஸந்தோற்சவம் 5-வது நாள்.
,, பிரம்மோத்ஸவம் 3-வது நாள் காலை.
,, ,, 9-வது ,,

5. மணலி சரவண முதலியார் மணலி கிருஷ்ணசாமி முதலியார் டிரஸ்டு
பெருமாள் திருப்பவித்ர உற்சவ சாத்துமறை.*

*ஒவ்வொரு ஆழ்வார் திரு நட்சத்திரத்தன்றும், அவர்கள் பாடியருளிய பிரபந்தத்தைப் பாராயணம்செய்து நிறைவுபெறும் காலை, சாத்துமறை நாள் என்பது சம்பிரதாயம்.



6. அம்மாயம்மாள் டிரஸ்டு
பெருமாள் வன போஜனம்.

7. N. ஸ்ரீனிவாசாசாரியார் டிரஸ்டு
திருமங்கையாழ்வார் 5-வது உற்சவம்.
புரட்டாசி 3-வது சனிவார உற்சவம்.

8. புல்லா பெரியாழ்வார் செட்டியார் டிரஸ்ட்டு
திருமால் வடைக்கு வருடவாரியில் நன்கொடை 17-8-0.

9. சுங்கு நம்மாழ்வார் செட்டியார் டிரஸ்டு
பெருமாள் 2-வது நாள் பகல்பத்து உற்ஸவம்.

10. ரொட்டல அப்பாயி செட்டியார் டிரஸ்டு
தேசாந்திரி ததியோதனம்.

11. A. S. மேத்தா டிரஸ்டு
புரட்டாசியில் ஒரு சனிவாரம்.

12. ஜலடு செல்வப்பிள்ளை செட்டியார் டிரஸ்டு
வைகுண்ட துவாதசி உற்ஸவம்.

13. ஸ்ரீ நம்மாழ்வார் டிரஸ்டு
ஸ்ரீ நம்மாழ்வார் திரு நக்ஷத்திரங்கள்.
தவன உற்சவம் 10 நாள் வருஷ உற்சவங்கள் செய்ய மூலதனம் வைக்கப்பட்டுள்ளது.

14. ரத்னவேலு செட்டியார் டிரஸ்டு
ஐப்பசி பூரம் அம்மன் திருக்கலியாண வரிசை.

15. பூல் சந்த் டிரஸ்டு
ஈஸ்வரர் சந்நிதியில் கார்த்திகை முதல் சோமவாரம்.

16. S. கிருஷ்ணய்யர் டிரஸ்டு
ஈஸ்வரர் சந்நிதியில் கார்த்திகை 3-வது சோமவாரம்; சிவராத்திரியில் ஒருகால அபிஷேகம்.

17. P. S. நரசிம்மய்யர் டிரஸ்டு
கார்த்திகை 4-ஆவது சோமவாரம்; சிவராத்திரியில் ஒருகால அபிஷேகம்.

ஸ்ரீ

## வேறு அறங்களின் விருந்து நடைபெறும் உற்சவாதிகள்

1. ஸ்ரீ பப்பு செட்டி ராகவலு செட்டியார் சேர்ட்டி

ஸ்ரீ பிள்ளை லோகாசாரியர் திருநக்ஷத்திரம், ஸ்ரீ பேயாழ்வார் திருநக்ஷத்திரம், ஷை உற்ஸவங்கள் நாள் 10. ஸ்ரீ மணவாள மாமுனிகள் விடாயாத்தியில் 2 நாள்; பெருமாள் பிரமோத்சவத்தில் தேசாந்திரி ததியோதனம்; நித்தியப்படியாக தேசாந்திரிகளுக்கு ததியாராதனம். திருமால் வடை தினப்படியாக 2.

2. ஸ்ரீ முக்கால வேங்கடகன்னய்ய செட்டியார் சேர்ட்டி

ஸ்ரீ சென்னை கேசவப் பெருமாள் பிரமோத்சவத்தில், 5-ம் நாள் இரவு ஹனுமந்த வாகன உற்சவம்.

ஸ்ரீ ஆண்டாள் திருவாடிப் பூரத்தில் 8-ம் நாள் உற்சவம்.

கைசிக துவாதசி உற்சவம்.

மூலம் - புனர்பூசம் - துவாதசி தினங்களில் 5 பேர்களுக்கு தேசாந்திரி ததியாராதனம்.

3. பப்பு செட்டி ஸ்ரீ தேவியம்மாள்

கேட்டை ஸ்ரீ தொண்டர்அடிப் பொடிகள் திருநக்ஷத்திரமும், ஷை சாத்துமறை தளிகைகளும்.

4. ஸ்ரீ உப்பட்டூர் ஆழ்வார் செட்டியார் சேர்ட்டி

ஸ்ரீ நம்மாழ்வார் சாத்து மறையில் தளிகை. நவராத்ரியில் 1 நாள் உற்சவம், திருப்பாவை சாத்துமறைக்குப் பிரதி மாதம் ரூபாய் 5.



தினப்படி திருமால் வடையில் 1 படி சுண்டல். புனர்பூசம், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திருநக்ஷத்திரங்கள், ஸ்ரீ ராமநவமி, ஹனுமந்த வாகன உற்ஸவம்.

5. ஸ்ரீ சுண்டூர் வெங்கட்ரங்கய்யா சேர்ட்டி

ஸ்ரீ ஆண்டாள் மார்கழி நீராட்ட உற்சவத்தில் கூடாரை வெல்லும் சீர் உற்சவமும், மண்டகப்படியும்.

6. ராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டியார் சேர்ட்டி

ஸ்ரீ ஆண்டாள் திருவாடிப் பூரம் 9வது நாள் திருத்தேர் உற்ஸவம்.

7. ஸ்ரீ காருமானி ஆதிகேசவலு செட்டியார் சேர்ட்டி

ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி உற்சவம்.

8. ஸ்ரீ பெரியாழ்வார் சேர்ட்டி

ஸ்ரீ பெரியாழ்வார் திருநக்ஷத்திரம் 10 நாள் உற்சவம். பெருமாள் பிரம்மோத்சவத்தில் 6வது நாள் இரவு யானை வாகன உற்ஸவம். ஸ்ரீ ஆண்டாள் மார்கழி நீராட்டம், 4வது நாள் துளசி பிருந்தாவனம். ஸ்ரீ பெரியாழ்வார் விருந்து. பெரியாழ்வார் தவன உற்சவம்.

9. ஸ்ரீ மணவாளமாமுனிகள் டிரஸ்ட்

ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருநக்ஷத்திரங்களும், 10 நாள் உற்சவமும். ஸ்ரீ மாமுனிகள் தவன உற்சவம், திருவத்யயன உற்சவம்.

10. ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தான டிரஸ்டில் உள்ள சாவித்ரி யம்மாள் கட்டளை

ஸ்ரீ பிரமராம்பாள் சன்னதியில் பிரதி தினமும் நெய் அகண்டம். சிவராத்திரியில் ஒருகால அபிஷேகம்.

11. ஸ்ரீ பச்சையப்பாஸ் டிரஸ்டில் உள்ள ஓலேட்டி ரங்கநாயகி யம்மாள் கட்டளை

ஈஸ்வரர், அம்மன் சுக்ரவாரத்தில், பிரதி வாரமும் சக்கரை முந்திரி பருப்பு நைவேத்யம்.

12. ஸ்ரீ சூரா லக்ஷ்மம்மாள் எஸ்டேட்

பிரதி துவாதசியன்றும் தேசாந்தரி ததியாராதனமும், ஸ்ரீ பிரமராம்பிகை சந்நிதியில் நவராத்திரியில் ஒரு நாள் விழாவும்.

13. ஸ்ரீ மத்தாள மணவாளய்யா எஸ்டேட்

ஸ்ரீ ராம நவமி உற்ஸவத்தில் 10ஆம் நாள் பட்டாபிஷேக உற்சவம்.

14. ஸ்ரீ கலிமிடி நம்பெருமாள் செட்டியார் சேர்ட்டி

பெருமாள் பிர்மோத்ஸவ துவாதசி ஆராதனத்தன்று தளிகை.

15. திருவாலி திருநகரி சேர்ட்டி; M. R. சந்த்ரா செட்டியார் டிரஸ்ட்

நம்மாழ்வார் 6-ம் உற்சவத் தினம் தளிகை அமுது செய்தல்.

16. ஷை G. R. திருவேங்கடத்தான் செட்டியார் டிரஸ்ட்

ஸ்ரீ எம்பெருமானார் 6-வது நாள் வெள்ளைச் சாத்துபடி உற்சவம்.

17. ஸ்ரீ கோட்டா தேவப் பெருமாளய்யா சேர்ட்டி

பகல் பத்து உற்சவத்தில் 1 நாள் நித்திய தேசாந்திரி ததியாராதனம்.

18. ஸ்ரீ கோட்டா வீராசாமி எஸ்டேட்

ஸ்ரீ ராம நவமி உற்சவத்தில் 1 நாள் உற்சவம்.



19. ஸ்ரீ மஞ்சு கொண்ட ஸ்ரீனிவாஸய்யா எஸ்டேட்

ஷை எஸ்டேட்டில் ததியாராதனம் செய்து இருந்ததை நிறுத்தி வைத்திருக்கிறார்.

20. பைசானி மாதவச் செட்டியார் சேர்ட்டி

நித்தியபடி தேசாந்திரிகளுக்கு ததியாராதனம் செய்யப்படுகிறது.

21. பெட்டிகோல் ராஜமன்னார் செட்டியார் எஸ்டேட்

ஸ்ரீ ஆண்டாள் மார்கழி நீராட்ட உற்சவத்தில் உடையவர் விருந்து எனும் ஒரு நாள் உற்சவமும், ஈஸ்வரர் கோயிலில் ஐப்பசி சஷ்டியில் சூரசம்மார உற்சவமும்.

22. உப்புட்டூர் இராமாநுஜம் செட்டியார் எஸ்டேட்

நம்மாழ்வார் உற்சவம் 10 நாள்; நன்கொடை ரூ. 120-0-0.

23. தாத்தா சேஷாசலம் செட்டியார் எஸ்டேட்

திருமங்கையாழ்வார் மாதாந்தர திருநட்சத்திரங்களும், 10 நாள் உற்சவத்தில் சாத்துமறை உற்சவமும்.

24. பசுமூர்த்தி கன்னய்யச் செட்டியார் சேர்ட்டி

பெருமாள் சந்நிதியில் நடைபெறும் நவராத்திரியில் ஒரு நாள் உற்சவம்.

ஸ்ரீ

**ஸ்ரீ சென்னை கேசவப் பெருமாள் ஸந்நிதியில் நடக்கும்**

# வருட உற்சவங்கள் விவரம்

## சித்திரை மாதம்

**வருடப் பிறப்பு**

காலை :—பெருமாளுக்குத் திருமஞ்சனம்.
மாலை :—தங்கமுலாம் தொட்டியில் மண்டகப் படியும், பஞ்சாங்கம் வாசித்தலும்.

**பெருமாள் பிரம்மோத்ஸவம்**

திருவோணத்தில் தீர்த்தவாரி நடைபெறும்.

**அங்குரார்ப்பணம் முதல் நாள்**

செல்வர் உற்சவம் (இவர் நித்ய உற்சவர்.) சாயங் காலம் தங்கமுலாம் சின்னப் பல்லக்கில் செல் வர் புறப்பாடு. துவஜாரோகண மண்டபத்தில் எழுந்தருளி மண்டகப்படி.

**அங்குரார்ப்பணம்**

மாலை:—ஸ்ரீ சேனைமுதலிகள் உற்சவம்; மிருத் ஸங்கிரஹணம்; வேத விண்ணப்பம், பிரபந்த கோஷ்டி ஆரம்பம், தங்கமுலாம் தொட்டியில் திருவீதி புறப்பாடு.

**1-வது நாள் உற்சவம்**

காலை :—துவஜாரோகணம் புண்ய கோடி விமானம்.
மாலை :—புன்னை வாகனம்.

**2-வது நாள் உற்சவம்**

காலை :—ஹம்ஸ வாகனம்.
மாலை :—சிம்ம வாகனம்.



**3-வது நாள் உற்சவம்**

காலை :—கருட வாகனம். (தங்க முலாம்)
மாலை :—சந்திரப் பிரபை.

**4-வது நாள் உற்சவம்**

காலை :—சூரியப் பிரபை.
மாலை :—சேஷ வாகனம்.

**5-வது நாள் உற்சவம்**

காலை :—பெரிய தங்கமுலாம் பல்லக்கில் நாய்ச்சி யார் திருக்கோலம்.
மாலை :—ஹனுமந்த வாகனம்.

**6-வது நாள் உற்சவம்**

காலை :—தங்கமுலாம் தொட்டி.(சூர்ணாபிஷேகம்.)
மாலை :—ஜெர்மன் சில்வர் பெரிய யானை வாகனம்

**7-வது நாள் உற்சவம்**

காலை :—“ திருத்தேர் ”.
மாலை :—தேரடித் தெரு மண்டகப்படி. அதன் பின் கோவிந்தப்ப நாய்க்கன் தெருவில் உள்ள வஸந்த பங்களாவில் திருமஞ்ச னம். திருவீதி புறப்பாடு.

**8-வது நாள் உற்சவம்**

காலை :—யாளி வாகனம்.
மாலை :—குதிரை வாகனம் (தங்கமுலாம்); வேடர் பரி உற்சவம், பட்டோலை வாசித்தல், இரவு திருமஞ்சனம், சயனாதி வாஸம்.

**9-வது நாள் உற்சவம்**

காலை :—பல்லக்கு கங்கைகொண்டான் மண்டபத் தில்—போர்வை களைதல்—தீர்த்தவாரி.
மாலை :—புண்ய கோடி விமானம்—துவஜ அவ ரோகணம்.

**10-வது நாள் உற்சவம்**

காலை :—திருமஞ்சனம், துவாதச ஆராதனம், திருவாய் மொழிப் பிரபந்தம் சேவித்தல்.

மாலை :—ஸ்ரீ புஷ்ப யாகம்; வேதச் சாத்து; பிரபந்தச் சாத்து; புஷ்பப் பல்லக்கில் திருவீதி புறப்பாடு.

**5 நாள் விடாயாத்தி. 5-ம் நாள் விசேஷமானது**

காலை :—(108) சத கலச திருமஞ்சனம், பெருமாளுக்கும் ஸ்ரீ எம்பெருமானாருக்கும்;

மாலை :—இருவரும் திருவீதி புறப்பாடு.

**ஸ்ரீ பாஷ்யகாரர் உற்சவம்**

திருவாதிரை யன்று சாத்துமறை; அதற்கு முன் 10 நாளும் திருவீதி புறப்பாடு.

**முதலியாண்டான் உற்சவம்**

10 நாள் உற்சவம். மண்டகப்படி. புனர்பூசம் சாத்துமறை.

**மதுர கவிகள் உற்சவம்**

10 நாள் உற்சவம் சித்திரை நட்சத்திரத்தன்று சாத்துமறை.

## வைகாசிமீ

**பெருமாள் வஸந்த உற்சவம்**

நாள் 7. காலையில் கோவிந்தப்ப நாய்க்கன் தெருவிலுள்ள வஸந்த மண்டபத்திற்கு எழுந்தருளி மத்யான்னத்தில் திருமஞ்சனம்.

சாயங்காலம் சன்னதிக்கு எழுந்தருளல். 7-ஆம் நாள் இரவு தங்கமுலாம் குதிரை வாகனம்.



**ஸ்ரீ நம்மாழ்வார் உற்சவம்**

நாள் 10. விசாகம் சாத்து மறை; 8 நாள் உள் புறப்பாடு; 9-வது நாள் திருத்தேர். 10-வது நாள் மங்களகிரியில் திருவீதி புறப்பாடு.

**ஸ்ரீ பட்டர் உற்சவம்**

நாள் 10. மண்டகப்படி.

## ஆனிமீ

**பெருமாளுக்கு ஜேஷ்டாபிஷேகம்**

ஆனி திருவோணத்தன்று பெருமாள் ஸ்வர்ண கவசங்களைக் களைந்து, கவசமில்லாமல் லோகாந்த திருமஞ்சனம்; கவசங்களைச் சுத்தம் செய்து மறுபடியும் சமர்ப்பித்தல்.

**பெரியாழ்வார் உற்சவம்**

நாள் 10. காலை திருமஞ்சனம். மாலை பிரபல தெற்கத்திய நாயனக்காரர்களால் மேளக் கச்சேரி.

8-மணிக்கு ஒய்யாளி. 10-வது நாள் இரவு பெருமாள் கருட வாகனத்தின் மேலும், பெரியாழ்வார் பெரிய யானை வாகனத்தின் மீதும் மேளக் கச்சேரியுடன் திருவீதிவலம் வருதல். சென்னையில் நடக்கும் மாபெரிய உற்சவம் இது, ஆனிக் கருடன் எனப்பெறும்; சுவாதியில் சாத்துமறை.

## ஆடிமீ

**ஸ்ரீ ஆண்டாள் திருவாடிப் பூரம்**

நாள் 10. 10 நாளும் புறப்பாடு. [illegible] திருக் கலியாணம்.

22114°

**ஸ்ரீ கஜேந்திர மோக்ஷம்**

பௌர்ணமி. மாலை பெருமாள் கருடாரூடராக எழுந்தருளி, குளத்தில் முதலையை நிரசனம் செய்து ஸ்ரீ கஜேந்திரனுக்கு அருள் செய்தல். பிறகு திருவீதி வலம் வருதல். இதுவே ஆடிக் கருடன் எனப்பெறும்.

**ஸ்ரீ ஆளவந்தார் உற்சவம்**

நாள் 10. மண்டகப்படி. உத்திராடத்தில் சாத்துமறை.

## ஆவணி மீ

**திருப்பவித்ர உற்ஸவம்**

நாள் 5. ஏகாதசி தினம் பவித்ரம் சாத்திக் கொள்ளுதல். ஷை 5 தினங்களும் உபய வேதாந்த கோஷ்டிகளுடனும், புராண இதிஹாஸ கோஷ்டிகளுடனும் யாகம் நடைபெறும். 5வது நாள் இரவு சாத்துமறை. (பருவம்)பூர்ணாஹுதி பௌர்ணமி. உற்சவம் நான்கு நாள் உள் புறப்பாடு. சாத்துமறை திருவீதி புறப்பாடு.

**ஸ்ரீஜெயந்தி**

இரவு திருமஞ்சனம். விசேஷ மண்டகப்படி.

**உறியடி**

ஸ்ரீ ஜயந்தி மறுநாள், புன்னை வாகனத்தில் ஸ்ரீ கண்ணன் புறப்பாடு. வீதிகளில் ஆங்காங்கு உறியடி உற்சவம் நடைபெறும்.

## புரட்டாசி மீ

**நவராத்திரி உற்சவம்**

நாள் 9. தாயார்க்குக் காலையில் திருமஞ்சனம். மாலையில் சர்வ வாத்யகோஷ்டி மண்டகப்படி.



நவராத்திரி உற்சவம் 10-ஆம் நாள் விஜயதசமி யன்று பெருமாள் கில் குதிரை வாகனத்தில் புறப்பாடு.

**ஸ்ரீ வேதாந்தாசார் உற்சவம்**

நாள் 10. மண்டகப்படி. ஸ்ரவணம் சாத்துமறை.

**புரட்டாசி சனிக்கிழமை**

திருவோணம், புரட்டாசி சனிக்கிழமை தோறும் காலையில் திருமஞ்சனம்; மாலையில் மண்டகப்படி.

## ஐப்பசி மீ

**ஸ்ரீ பொய்கையாழ்வார் உற்சவம்**

நாள் 10. மண்டகப்படி. திருவோணம் சாத்துமறை.

**ஸ்ரீ பிள்ளை லோகாசாரியர்**

நாள் 10. மண்டகப்படி. ஷை 10-வது நாள் உள்புறப்பாடு.

**ஸ்ரீ பூதத்தாழ்வார்**

நாள் 10. மண்டகப்படி. அவிட்டம் சாத்துமறை.

**ஸ்ரீ பேயாழ்வார்**

நாள் 10. மண்டகப்படி. சதயம் சாத்துமறை.

**ஸ்ரீ மணவாள மாமுனிகள்**

நாள் 10. 8 தினம் உள்புறப்பாடு. 9-ஆவது தினம் திருத் தேர். 10-வது நாள் திருவீதி புறப்பாடு. மூல நட்சத்திரத்தில் சாத்துமறை.

**ஸ்ரீ சேனை முதலிகள்**

நாள் 10. மண்டகப்படி, பூராடம் சாத்துமறை.

## கார்த்திகைமீ

**திருமங்கை மன்னன்**

நாள் 10. 10 நாள் உற்சவம். கிருத்திகை சாத்து மறை.

**திருப்பாணாழ்வார்**

நாள் 10. 10 நாள் உற்சவம். ரோகணி சாத்து மறை.

**திருக்கார்த்திகை**

சாயங்காலம் தீபாராதனை, திருவீதிப் புறப்பாடு.

**கைசிக துவாதசி**

காலை கைசிகபுராணம் வாசித்தல். மண்டகப்படி. பிறகு உள் புறப்பாடு.

## மார்கழிமீ

**தொண்டர் அடிப்பொடிகள்**

நாள் 10. மண்டகப்படி. கேட்டை நட்சத்திரத் தன்று சாத்துமறை.

**பகல் பத்து உற்சவம்**

நாள் 10. பகல் 2-மணிக்கு ஆழ்வார் ஆசாரியர் களுடன், பெருமாளுக்கு மண்டகப்படி. 10-ம் நாள் நாய்ச்சியார் திருக்கோலம். உள் புறப் பாடு. பகல் பத்து வைகுண்ட ஏகாதசி முன் தினம் முடிவடையும்.

**இராப்பத்து உற்சவம்**

நாள் 10. வைகுண்ட ஏகாதசி யன்று ஆரம்பம். விடியற்காலையில் வைகுண்ட வாசல் திறத்தல். ஆண்டாள் மண்டபத்தில் மண்டகப்படி. இரவு சேஷவாகனம். துவாதசி யன்று காலை கின்ற



திருக்கோலம். மாலை சயன திருக்கோலம். 10-ஆம் நாள் மண்டகப்படி. உள்புறப்பாடு. 10-ம் நாள் திருவீதி புறப்பாடு.

**ஸ்ரீ ஆண்டாள் மார்கழி நீராட்டம்**

நாள் 10. பிரதி தினம் காலையில் வீதி புறப்பாடு. குளக்கரையில் மாலை 2-மணிக்குத் திருமஞ்ச னம். போகியன்று திருக்கலியாணம்.

## தைமீ

**சங்கராந்தி**

மாலை :—(சங்கராந்தி ஆஸ்தானம்) ஆண்டாள் மண்டபத்தில் பெருமாள், தாயார், ஆண்டாள் இவர்கள் மண்டகப்படி.

**கனுவு பார்வேட்டை**

ஸ்ரீ ஆண்டாள் குளக்கரையில் திருமஞ்சனம். மண்டகப்படி.

சாயங்காலம் ஆண்டாள் தொட்டியிலும், பெரு மாள் குதிரைவாகனத்திலும் திருவீதிபுறப்பாடு.

**ரத சப்தமி**

காலை:—பெருமாள் சூரியப் பிரபையில் புறப்பாடு.

**ஸ்ரீ எம்பார் உற்சவம்**

நாள் 10. 10ஆம் நாள் மண்டகப்படி. புனர்பூசம் சாத்துமறை. மாலை தங்கமுலாம் கேடயத்தில் புறப்பாடு.

**திருமழிசைப் பிரான்**

நாள் 10. 10ஆம் நாள் மண்டகப்படி. மகத்தன்று சாத்துமறை.

**ஸ்ரீ கூரத்தாழ்வான்**

நாள் 10. 10ஆம் நாள் மண்டகப்படி. ஹஸ்த நட்சத்திரத்தில் சாத்துமறை.

### மாசிமீ

**தவன உற்சவம்**

நாள் 3. உசிதம்போல் ஒரு புதன் ஆரம்பம். வெள்ளி முடிவு. தவன உற்சவ மண்டபத்தில் விசேஷ மண்டகப் படிகள்.

**ஸ்ரீ குலசேகரப் பெருமாள்**

நாள் 10 :—மண்டகப்படி. புனர்பூசம் சாத்து மறை. திருவீதி புறப்பாடு.

**மாசி மகம்**

மாசிமாதம் மகத்தன்று, காலையில் கருடாரூடனாய் சமுத்திரத்திற்கு எழுந்தருளித் தீர்த்தம் சாதித்தல்.

### பங்குனிமீ

**பங்குனி உத்திரம்**

தாயார் பெருமாள் திருமஞ்சனம். மாலை திருக் கலியாணம். இராத்திரி சயனுதி வாஸம்.

**ஸ்ரீ ராம நவமி**

நாள் 10. 10ஆம் நாள் காலை திருமஞ்சனம். மாலை புறப்பாடு. நவமி யன்று ஹனுமந்த வாகனம் வீதி புறப்பாடு. 10-வது நாள் பட்டாபிஷேக திருக்கோலத்துடன், திருவீதி புறப்பாடு. மண்டகப்படி.

---



## ஸ்ரீ சென்னை மல்லீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும்

# வருடாந்திர உற்சவ விசேஷங்கள்

### சித்திரை

சித்திரை வருடப்பிறப்பு :— ஸ்ரீ சந்திர சேகரர் உள்புறப்பாடு உற்சவம்.

ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு 10 நாட்கள் உற்சவம். 9 நாட்கள் உள்புறப்பாடு. 10-வது நாள் வீதி புறப் பாடு. சதய நக்ஷத்திரத்தில் விழா நிறைவுபெறும்.

திருவோணம் :— உச்சிக்காலத்தில் ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

சித்ரா பௌர்ணமி :— ஸ்ரீ சந்திர சேகருருடன் ஸ்ரீசங்காரச்சாரியாரும் உள்புறப்பாடு உற்சவம்.

### வைகாசி

வஸந்த உற்சவம் 10 நாட்கள் நடைபெறும். கோவிந்தப்பநாய்க்கன் தெருவிலுள்ள வஸந்த பங்களா விற்குப் பிரதிதினம் சுவாமி எழுந்தருளல். பௌர்ணமி யன்று 10-வது நாள் உற்சவமாகி நிறைவுபெறும்.

ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு 10 நாட்கள் உற்சவம். 9 நாட்கள் உள்புறப்பாடு. 10-வது நாள் வீதி புறப்பாடு. மூல நக்ஷத்திரத்தில் விழா நிறைவுபெறும்.

வைகாசி விசாகம் :— ஸ்ரீ ஆறுமுக சுவாமி வீதி புறப்பாடு உற்சவம்.

### ஆனி

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு 10 நாட்கள் உற்சவம். 9 நாட்கள் உள்புறப்பாடு. 10-வது நாள் வீதிவலம். மக நட்சத்திரத்தில் விழா நிறைவுபெறும்.

உத்திரம் :—ஆனித் திருமஞ்சனம். காலையில் ஸ்ரீ நடராஜர் அஸ்மான கிரியில் வீதி புறப்பாடு.

## ஆடி

ஸ்ரீ சங்கராச்சாரியார் உற்சவம் :—10 நாட்கள். 9 நாட்கள் உள்புறப்பாடு. 10-வது நாள் வீதிபுறப்பாடு. வியாஸ பௌர்ணமியன்று விழா நிறைவுபெறும்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு 10 நாட்கள் உற்சவம். 9 நாட்கள் உள்புறப்பாடு. 10-வது நாள் யானை வாகனத்தில் வீதிபுறப்பாடு. சுவாதி நக்ஷத்ரத்தில் நிறைவுபெறும்.

ஆடிப்பூரம் :—அம்மன் காமதேனு வாகனத்தில் வீதி புறப்பாடு.

ஆடி கிருத்திகை :—ஸ்ரீ சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் வீதி புறப்பாடு.

## ஆவணி

ஆவணிஅவிட்டம் :—பவித்ரோத்ஸவம் 5 நாட்கள். முதல் நாள் அங்குரார்ப்பணம். 3 நாட்கள் உள்புறப்பாடு. 5-வதுநாள் வீதிஉற்சவம். சுக்லபக்ஷம் சதுர்த்தசி இரவு பூர்ணாஹுதி.

ஆவணிமூலம் :—பஞ்சமூர்த்திகள் வீதி புறப்பாடு உற்சவம்.

ஆவணி சுக்லபக்ஷம் சதுர்த்தி :—ஸ்ரீ விநாயக சதுர்த்தி உற்சவம்; விநாயகர் மூஷிக வாகனத்தில் வீதி புறப்பாடு.

சுக்லபக்ஷம் சதுர்த்தசி :—ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.



## புரட்டாசி

நவராத்திரி உற்சவம் :—9 நாட்கள். சந்நதியில் அம்மன் கொலு. மூல நக்ஷத்ரத்தில் அம்மனுக்கு அபிஷேகம்.

விஜயதசமி :—பார்வேட்டை உற்சவம். ஸ்ரீசந்திர சேகரர் குதிரை வாகனத்தில் வீதி புறப்பாடு.

சுக்ல சதுர்த்தசி :—ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

பௌர்ணமி :—ஸ்ரீ சங்கராச்சாரியார் விஸ்வரூப யாத்திரை வீதி உற்சவம்.

## ஐப்பசி

ஐப்பசி பூரம் :—ஈசுவரர் திருக்கல்யாணம். உள் புறப்பாடு உற்சவம்.

ஸ்கந்த ஷஷ்டி :—6 நாட்கள். ஸ்ரீ சுப்ரமணியர்க்கு வீதிஉற்சவம்.

சஷ்டி 6-வது நாள் சூரஸம்ஹார உற்சவம். முதல் புறப்பாடு குதிரை வாகனத்துடன். சூரபத்ம வாகனமும் புறப்பாடாகும். உடனே திருக் கல்யாணம் நடைபெற்று இரண்டாவது மயில் வாகனத்தில் புறப்பாடாகும்.

சஷ்டி:—காலையில் ஸ்ரீ ஆறுமுகசுவாமிக்கு சங்காபிஷேகமும், திருத்தேர் வீதி உற்சவமும் நடைபெறும்.

பௌர்ணமி :—ஈஸ்வரருக்கு அன்னாபிஷேகம்.

## கார்த்திகை

பௌர்ணமி :—திருக்கார்த்திகை உற்சவம். பஞ்சமூர்த்திகள் வீதி புறப்பாடு (சொக்கப்பனை எரித்தல்).

கார்த்திகை மாதம் ஒவ்வொரு சோமவாரமும் உள்புறப்பாடு உற்சவம்.

## மார்கழி

தனுர் மாத பூஜை:—காலையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு 10 நாட்கள் வீதிஉற்சவம். சுக்லபக்ஷம் சதுர்த்தசி காலை முடிவுபெறும்.

பௌர்ணமி :— ஆருத்ரா தரிசனம். காலையில் ஸ்ரீ நடராஜர் அஸ்மான கிரியில் வீதி புறப்பாடு. பௌர்ணமி மாலை ஆருத்ரா அரைக்கட்டு உற்சவம். முதல் நாள் அரைக்கட்டு 2, 8 நாள் உற்சவம் மண்டகப்படி. (புறப்பாடு இல்லை).

## தை

முதல் தேதி மகர சங்கராந்தி உற்சவம். உள்புறப்பாடு.

2ஆம் தேதி சங்கராந்தி பார்வேட்டை உற்சவம். சுவாமி குதிரை வாகனத்தில் வீதி புறப்பாடு.

தை கிருத்திகை :— ஸ்ரீ சுப்ரமணியர் மயில் வாகனத்தில் வீதி புறப்பாடு.

தைப்பூசம் :—ஈசுவரருக்கு அபிஷேகம்.

## மாசி

பௌர்ணமி:—மாசிமக உற்சவம். சுவாமி அதிகார நந்தி வாகனத்தில், காலையில் வீதிவலம் வந்து கடலுக்கு எழுந்தருளல். சமுத்ரத்தில் தீர்த்தவாரி.

மாசி சுக்ரவாரம் :—தவன உற்சவம். தவன மண்டபம் அலங்கரித்து உள்புறப்பாடு உற்சவம்.

மகா சிவராத்திரி உற்சவம் :—நான்கு ஜாம காலங்களில் அபிஷேகம். சுவாமி ரிஷப வாகனத்தில் வீதி புறப்பாடு உற்சவம்.

சுக்லபக்ஷம் சதுர்த்தசி :—ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.



## பங்குனி மாதம்

பிரம்ம உற்சவம் :—நாள் 10. பௌர்ணமி தீர்த்த வாரி.

பங்குனி உத்திரம் :—திருக்கல்யாணம்.

பிரம்ம உற்சவம் அங்குரார்ப்பணம் :—ஸ்ரீ விநாயகர் மூஷிக வாகனத்தில் வீதி புறப்பாடு உற்சவம்.

| | |
|---|---|
| பிரம்மோத்சவத்தில் | 1-வது நாள் காலை துவஜாரோகணம். பஞ்சமூர்த்திகள் வெள்ளித் தொட்டியில் வீதி புறப்பாடு. |
| ஷை | 1-வது இரவு : ஹம்ஸ வாகனம். |
| ஷை | 2-வது காலை : சூரியபிரபை |
| ஷை | 2-வது இரவு : சந்திரபிரபை. |
| ஷை | 3-வது காலை : அதிகாரநந்தி. |
| ஷை | 3-வது இரவு : பூதவாகனம். |
| ஷை | 4-வது காலை : நாகவாகனம். |
| ஷை | 4-வது இரவு : இராவணேசுவர வாகனம் |
| ஷை | 5-வது காலை : வெள்ளிப் பல்லக்கு. |
| ஷை | 5-வது இரவு : வெள்ளி ரிஷபவாகனம். |
| ஷை | 6-வது காலை : வெள்ளித்தொட்டி. |
| ஷை | 6-வது இரவு : யானை வாகனம். |
| ஷை | 7-வது காலை : திருத்தேர் உற்சவம். |
| ஷை | 7-வது இரவு : திருத்தேரிலிருந்து சுவாமி அம்மன் கோயிலுக்கு எழுந்தருளல். வரசித்தி விநாயகர் சன்னதியில் மண்டகப்படி. |
| ஷை | 8-வது காலை : வெள்ளித் தொட்டி. |
| ஷை | 8-வது இரவு : குதிரை வாகனம். |
| ஷை | 9-வது காலை : வெள்ளிப் பல்லக்கு. |
| ஷை | 9-வது நாள் மாலை: பிக்ஷாடனர் உற்சவம். |

பிரம்மோத்சவத்தில் 9-வது நாள் இரவு: வெள்ளித் தொட்டியில் பஞ்ச மூர்த்திகள் வீதி (2-ஆவது) புறப்பாடு.

டை 9-வது நாள் இரவு: 8-ஆம் புறப்பாடு. ஸ்ரீ நடராஜர் சாந்து சேர்வைக்கு எழுந்தருளல்.

டை 10-வது காலை: ஸ்ரீ நடராஜர் அம்மானை கிரியில் வீதி புறப்பாடு.

டை 10-வது இரவு: ரிஷப வாகனத்தில் பஞ்ச மூர்த்திகள் வீதி புறப்பாடு. இரவு துவஜ அவரோகணம்.

டை 11-வது நாள் காலை: ஸ்ரீ சந்திர சேகரர் வீதி உற்சவம்.

டை 11-வது இரவு: புஷ்ப பல்லக்கு வீதி உற்சவம்.

டை 12-வது நாள் மாலை: சுவாமி அம்மன் வெள்ளித் தொட்டியில் உள்புறப்பாடு.

டை 13-வது நாள் சாந்தி அபிஷேகம்.

குறிப்பு:—பிரம்மோற்சவத்தில் 7-ஆம் நாள் இரவு, 10-ஆம் நாள் காலை உற்சவம் தவிர, மற்றைய காலங்களில் பஞ்சமூர்த்திகள் வீதி புறப்பாடு நடைபெறும்.

### மாடவீதி

கோயிலி லிருந்து புறப்பட்டு தேவராஜ முதலித் தெரு, ராசப்ப செட்டித் தெருவில் உள்ள கந்தசுவாமி கோயில் அருகில் நைனியப்ப நாயக்கன் தெரு, காசி செட்டித்தெரு, கோவிந்தப்ப நாய்க்கன்தெரு, சேதாஜி ரோட் இந்த வீதிகள் வழியாக சுவாமி வலம் வரும்.

### பிரதிமாதம் நடைபெறும் திருநட்சத்திரங்கள்

சதுர்த்தி: ஸ்ரீ விநாயகர் அபிஷேகம்.



திரயோதசி: பிரதோஷம்; உள்புறப்பாடு உற்சவம்.

கிருத்திகை: ஸ்ரீ சுப்பிரமணியர் உள்புறப்பாடு உற்சவம்.

விசாகம்: ஆறுமுக சுவாமி அபிஷேகம்.

திருவாதிரை: ஸ்ரீ சங்கராச்சாரியர் அபிஷேகம்.

அமாவாசை, பௌர்ணமி—ஸ்ரீ சந்திரசேகரர் உள்புறப்பாடு உற்சவம்.

தமிழ் மாதப் பிரவேசம். ஸ்ரீ சந்திரசேகரர் உள் புறப்பாடு உற்சவம்.

நாயன்மார்கள் அறுபத்துமூவருக்கும் அந்தந்த மாதத் திருநக்ஷத்திரங்களில் அபிஷேகம் தீபாராதனை கள் நடைபெறும்.

## Trust

ஸ்ரீ சங்கராச்சாரியர் 10-வது நாள், ஸ்ரீ சங்கராச் சாரியார் விஸ்வரூப யாத்ரை உற்சவங்கள் பெரியாழ் வார் டிரஸ்டிலிருந்து நடைபெறுகிறது.

சஷ்டி சூரஸம்ஹார உற்சவம், P. ராஜமன்னார் செட்டி எஸ்டேட் டிரஸ்டிலிருந்து நடைபெறுகிறது.

சங்கராச்சாரியார் டிரஸ்டு தேவஸ்தானத்திலேயே இணைக்கப்பட் டிருக்கிறது.

பிரம்ம உற்சவம் 8-வது நாள் காலை அதிகாரநந்தி; 9-வது மாலை பிக்ஷாடனர்; வஸந்தோற்சவம் 5-ஆவது நாள்; இவை ஸ்ரீ மாணிக்கம் பிள்ளை டிரஸ்டிலிருந்து நடைபெறுகின்றன.

பிரம்ம உற்சவத்தில் 7-வது காலை திருத்தேர் உற்சவம், 11-வது இரவு புஷ்பப் பல்லக்கு, வஸந்த உற்சவம் 9-நாட்கள் மணலி லக்ஷ்மண முதலியார் எண்டோன்மெண்ட்டிலிருந்து நடைபெறுகின்றன.

ஸ்ரீ சேஷாசல ராஜா எண்டோன்மெண்டிலிருந்து நவராத்திரியில் தினப்படி புஷ்பமும், மூல நக்ஷத்திரத்தில் அம்மனுக்கு அபிஷேகமும், புஷ்பமும், அரைகட்டு (2 & 3) 2 நாட்கள் மண்டகப்படியும், பிரதி தினமும் மத்யானத்தில் அம்மன் சன்னதியில் தேசாந்திரி ததியோதனமும் நடைபெறுகின்றன.

வாழி சென்னை கேசவர்
வாழி மல்லிகேச்சுரர்
வாழி மணலி வள்ளல்கள்
வாழி அன்பர் வாழியே

ஓம்.

Q23:38.2M1
N58
221140

# எமது பிரசுரங்கள்.

---

## எண்சுவடி.

பாலர்களுக்கு மிகவும் அவசியமானது. கூட்டல், கழித்தல் வாய்ப்பாடுகளுடன் இங்கிலீஷ் லக்கங்களுக்கும், பின்னங்களுக்கும் சரியான தமிழ் லக்கங்களும், மாணவர்கள் கணக்குகளுக்கு உபயோகப்படக்கூடிய அநேக விஷயங்களும் அடங்கியுள்ளது.

விலை அணா $1\frac{1}{2}$.

---

# District Geography Series.

## திருநெல்வேலி ஜில்லா பூகோளம்.

மிகவும் எளிய நடையில் மாணவர்கள் சுலபமாய்க் கற்கும் முறையில் வெளியிடப்பட்டது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

விலை அணா 5.

---

# ஒழுக்க உரைத்திரட்டு.

## உலகநீதிக்கதை.

இது சுலபமான நடையில் எழுதப்பட்டது. உலகநீதிப் பாட்டுகளில் முக்கியமானவைகளைக் கதை ரூபமாய்ப் பையன்கள் இலகுவாய்க் கற்கும் முறையில் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறது.

விலை அணா 3

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவைகள் விரைவில் வெளிவரும்.

S. R. சுப்பிரமணிய பிள்ளை,
புத்தக வியாபாரம், திருநெல்வேலி.